ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரான்-ஓர் ஆய்வு

**B. DHANANJAYAN**, M.A., M.Phil.,
Tirupati

# TIRUPPANALWAR'S AMALANADIPIRAN - A STUDY

*This book is published with the financial assistance of Tirumala Tirupati Devasthanams under their scheme*

'Aid to publish Religious books'

**B. DHANANJAYAN.** M.A., M.Phil.,
Tirupati

விஷு-கார்த்திகை ரோகிணி

December 2001

First Edition : December 2001

No. of copies : 1000

Copy right : Authors

Price : **60/-**

*Copies can be had from :*


**Sri Battu Bhaskar**
A.K. Bedu ( Post & village)
(Via) Nagalapuram, Chittoor District
(Pin) 517589, (A.P.)

*Typesetted by:*

**M/s Fonts DTP Service**
No. 325/10 Ist Floor, Triplicane,
Chennai - 600 005. Phone: 5974836

*Printed by:*

**KVS Offset Press**
No. 10 Mohammed Hussain Lane,
Royapettah, Chennai - 600 014.



# திருப்பாணாழ்வார்

(ஸ்ரீகோவிந்தராஜன் சுவாமி சந்நிதியைச் சேர்ந்த திருப்பதி வடவண்டை மாட வீதியில் திருப்பாணாழ்வார் சந்நிதியில் எழுந்தருளியுள்ள மூலவர் திருமேனி)

Srimathe Ramanujaya Namaha

Sriman **U.Ve. Dr. M.Varadarajan,**
M.A.,(Pol), M.A.(Tam.) Ph.D
Assistant Professor, Department of Tamil
S.V. University, Tirupati 517 502

# FOREWORD

It gives me great pleasure to write a foreword to the book entitled 'Tiruppan Alwar's Amalanadipiran A study' so nicely brought out by Sri B.Dhananjayan. M.A., M.Phil., Research Scholar, Department of Tamil, Sri Venkateswara University, Tirupati.

It is well known that Bhakti Literature, particularly soul-stirring hymns of Alwars - abounds in Tamil language. It was during the 9th century Acharya Sriman Nathamunigal, who rediscovered and codified the four thousand hymns of Alwars, propagated them among the masses.

Since the advent of Sri Ramanuja in the 11th century, there was a great impetus in the dissimination of Alwars' hymns in writing Manipravala commentaries by Purvacharyas. This exercise of writing commentaries attained entireness during the 13th century when Acharya Periyavachchan Pillai wrote commentaries for all prabandhams. For centuries, the tradition of giving discourses, Kalakshepams and writing articles on Alwars' hymns by Ubhaya Vedantic scholars is in continuous process, creating awareness among the people.

It was during 1970 the Sri Venkateswara University, Tirupati, has first introduced Vaishnava Literature as an optional paper at the M.A. level in the Department of Tamil.

This paved a way to do research on Alwars hymns and its commentaries by a number of scholars.

It is note worthy to mention that Prof. N. Subbu Reddiar, the then Professor of Tamil, S.V. University, first did doctorate on the topic entitle 'Religion and Philosophy of Nalayira Divya Prabandham with special reference to Nammalvar' in 1977. Following him, few scholars including myself did research on Vaishnava Literature.

Sri B. Dhananjayan is the product of Tamil Department, Sri Venkateswara University, evinced keen interest and devotion in learning Vaishnava Literature for years together and chosen the topic entitle 'Tiruppanalwar's Amalanadipiran - A study', for his M.Phil. Degree in 2000.

Amalanadipiran, consisting of 10 hymns, was composed by Tiruppan Alwar, in praise of Lord Ranganatha of Srirangam. Great Acharyas - Periyavachchan Pillai, Alagiya Manavala Perumal Nayanar and Vedanta Desika wrote commentaries for this prabandham. In this connection, he assiduously studied the three commentaries under my guidance and brought out the thesis which later become in a book form and recognised by the Tirumala Tirupati Devasthanams to get financial aid for its publication.

This book consists of five chapters covering the life and work of Tiruppan Alwar, commentaries for the prabandham; the techniques of commentators; religious doctrines and beauties of Lord Ranganatha.

Narrating the life and works of Tiruppan Alwar, the author has rightly established the greatness of Tiruppan Alwar as spoken by Amudanar, Bhattar, Manavala Mamunigal and other Acharya's and the place of this prabandham in Nalayira Divya Prabandham, in Chapter I.

The Chapter II explains the origin of Commentaries for Vaishnava Literature, besides the author distinguishes

Vedanta Desika's 'Munivahana Bhogam' with that of other two commentaries of Periya Vachchan Pillai and Nayanar.

Sri B. Dhananjayan has taken painstaking effort in the critical study and explanation of Its techniques applied in the commentaries which gives clarity in the experience of Tiruppan Alwar on Lord Ranganatha, in chapter III.

The author has unearthed the Rahasyatraya - Tirumantram, Dvaya and Charamasloka from the commentaries of Pillai and Nayanar and presented lucid explanation in the text. He elicited the elaboration of Tirumatra in the ten hymns as explained by Vedanta Desika, apart from showing 15 exuberant qualities of Lord shown in the first hymn by Desika.

The narration of Divya Mangala Vigraha of Lord Rangantha from Tiruppadam to Tirumudi as seen by Tiruppan Alwar is a feast to the readers.

I congratulate Sri. B. Dhananjayan for his effort in bringing out his thesis in a book form and wish him to do many more research on Vaishnava Literature.

This book must find a place in the shelves of University Libraries Research ·Centres, and in the hands of those devotees who visits 108 Divya Desas, particularly Srirangam and gain in knowing the exuberant qualities and beauties of Lord Rangantha as spoken by Purvacharyas.

Date : 1.12.2001 **M. Varadarajan**

Place: Tirupati

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

# முன்னுரை

**சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமிழாலளித்த**
**பாரியிலும் புகழ்ப்பாண் பெருமாள் சரணாம் பதுமத்**
**தாரியில் சென்னியிராமாநுஜன் தன்னைச் சார்ந்தவர் தம்**
**காரிய வண்மை என்னால் சொல்லொணாது இக்கடலிடத்தே**

*(இராமாநுச நூற்றந்தாதி - 11)*

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஆழ்வார்களுள் பாண பெருமாள் என்று சான்றோர் பெருமக்களால் போற்றி ஏற்றுக் கொள்ளப்பட்ட திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரானுக்கு அமைந்த உரைகள் மூன்று. இம்மூன்று உரைகளின் மூலம் திருப்பாணாழ்வார் தாம் அருளிய பிரபந்தத்தில் இறை உணர்வோடு எம்பெருமானை அனுபவித்தார் என்று அறியமுடிகிறது.

'என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என அவர் இறைவனை நோக்கி பாசுரமிடுவதால் அவர் எம்பெருமான் மேல் காட்டும் ஈடுபாட்டின் அகச்சான்றாகும்.

இந்நூல் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்ற பெயரில் அடைவுபடுத்தப்பட்டுள்ள ஆழ்வார்களின் பாசுரங்களில் திருப் பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரான் பிரபந்தம் பத்துபாசுரங் களையுடையதாகும். இப்பத்து பாசுரங்களுக்கு பெரியவாச்சான் பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் மற்றும் வேதாந்த தேசிகர் ஆகியோர் சிறந்த முறையில் உரை வழங்கியுள்ளனர். இம்மூன்று உரையாசிரியர்களின் உரைகளை எல்லை நிலமாகக் கொண்டு 'திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரான் - ஓர் ஆய்வு' என்னும் தலைப்பில் இந்த நூல் அமைகிறது.

நாலாயிர திவ்வியப்பிரபந்தத்தில் அமலனாதிபிரான் பத்து பாடல்களைக் கொண்டு பிரபந்த தொடக்கம் பிரணவ சாரமாக இருப்பதனாலும், அந்த பிரபந்தத்திற்கு உள்ளீடான திருவரங்கனே பர, வியூக, விபவ, அந்தர்யாமி, அர்ச்சை ஆகிய ஐந்து நிலைகளில் வீற்றிருக்கிறான் என்பதனாலும், மேலும் இப்பிரபந்தம் எம்பெரு

மானின் அழகை பாதாதிகேசமாக அனுபவிப்பிக்கச் செய்வதாலும், குறைந்த பத்து பாடல்களுக்கு மூவர் உரை எழுதியிருப்பதாலும், சமயக்கருத்துக்களான திருமந்திரம், துவயம்,சரமச்லோகபரமாக அமைந்ததாலும் மேற்குறித் செய்திகள் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. இந்த நூல் மேற்கூறிய கருத்துக்களை விரிவான நிலையில் எடுத்துக்கூறி திருப்பாணாழ்வாரின் அமுத வாக்கியங்கள் வைணவச் சமயவளர்ச்சிக்கு எந்த அளவில் பயன் பட்டிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுகிறது.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் திருப்பாணாழ்வார் பாடல்களும், அப்பாடல்களுக்கான மூன்று உரைகளும், முதனிலை ஆதாரங்களாகின்றன. ஏனைய வைணவ சமய நூல் தமிழ் இலக்கிய இலக்கணங்கள், உரையாசிரியர்கள் தங்கள் விளக்கக் குறிப்புகள் மற்றும் கலைக் களஞ்சியங்கள் ஆகியன துணைநிலை ஆதாரங் களாகின்றன. இவ்விரு நிலை ஆதாரங்களுடன் தமிழறிவும் வைணவ நூற்புலமையும் வாய்ந்த அறிஞர்களிடத்தே கேட்டறிந்த செய்திகளும் இந்நூலின் மூலங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நூல் முன்னுரை முடிவுரை நீங்கலாக ஐந்து இயல் களைக் கொண்டதாக அமைந்துள்ளது. அவை :

1. திருப்பாணாழ்வார் வரலாறும் அவர் அருளிய அமலனாதி பிரான் சிறப்பும்.
2. அமலனாதிபிரானுக்கு அமைந்த உரைகள்.
3. உரை உத்தியும் உரை நயமும்.
4. சமயக் கருத்துக்கள்.
5. அழகியல் கூறுகள்.

'திருப்பாணாழ்வார் வரலாறும், அவர் அருளிய அமனாதி பிரானின் சிறப்பும் என்னும் முதல் இயலில் பக்தி இயக்கத்தின் காலமும், ஆழ்வார்களின் தோன்றலும், திருப்பாணாழ்வாரின் தோற்றம், பெயர் விளக்கம் மற்றும் அவரது சிறப்பும் சொல்லப்பட்டுள்ளது. மேலும் இதில் அவர் அருளிய அமலனாதி பிரான் பிரபந்தத்தின் சிறப்பும் பெருமையும் அமையப்பெற்றுள்ளது.

'அமலனாதிபிரானுக்கு அமைந்த உரைகள்' என்னும் இரண் டாவது இயலில் உரைகளின் தொடக்கமும், வைணவ உரைகளின் சிறப்பும் குறிப்பாக அமலனாதிபிரானுக்கு உரை வழங்கிய ஆசாரியர்களின் தோற்றமும் அவர்களின் உரையமைப்பும் இடம்பெற்றுள்ளது.

'உரை உத்திகளும், உரை நயமும்' என்னும் மூன்றாவது இயலில் உரையாசிரியர்கள் கையாண்டுள்ள உரை சிறப்பு, ஆழ் வாரின் பலதரப்பட்ட எண்ணங்களின் பிரதிபலிப்பை வெளிப் படுத்துதல், சொல் நயம், பொருள் நயம், போன்றதைக் காட்டுதல், சமுதாய நிலைகளை எடுத்துக் காட்டுதல், முன்னோர்களின் அனு பவங்களை சுட்டுதல் முதலானவற்றை தெரிவிப்பதாக அமைந்துள்ளது.

'சமயக் கருத்துக்கள்' என்னும் நான்காவது இயலில் ஆழ்வார் பாடல்களில் அமைந்த தத்துவக் கருத்துக்களான திருமந்திரம், துவயம், சரமச்லோகம் மற்றும் அர்த்த பஞ்சக அமைப்பு முதலானவை எடுத்துரைக்கப்பெற்றுள்ளன.

'அழகியல் கூறுகள்' என்னும் ஐந்தாவது இயலில் அழகி யலின் அறிமுகம்,அர்ச்சாநுபவம் - அரங்கனை அனுபவித்த அழகி யல் அனுபவங்கள், திருவரங்கம் திருவேங்கடம் ஆகிய திருத்தலங் களின் பெருமை சொல்லுதல் ஆகியன அமைந்துள்ளன.

அனைத்து இயல்களின் தொகுப்புரை ஒருமுகப் படுத்தி இறுதியில் இந்நூலின் முடிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இந்நூலுக்கு துணையாக அமைந்த நூல்களின் பட்டியல் ஆசிரியர் பெயருக்கான அகரவரிசையில் இடம் பெறுகின்றன. ஆங்கில நூல்களும் ஆசிரியர் பெயருக்கான அகரவரிசையிலேயே தரப்பட்டுள்ளன.

திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரான் பிரபந்த தனியன்கள், பாடல்கள், பின்னிணைப்புகளாக சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வு நூலில் அடியேனுடைய அறியாமையினாலும் கவனக் குறைவினாலும் ஏற்பட்ட சொற் குற்ற - பொருட் குற்றங் களைப் புலவர் பெருமக்கள் தம் இயற்கை இன்னருளால் பொறுத்து அடியேனை கடைக்கணிக்க வேண்டுகிறேன்.

ஆழ்வார் எம்பெருமான் சீயர் திருவடிகளே சரணம்

*ப. தனஞ்ஜெயன்*

ஸ்ரீ மதே ராமாநுஜாய நம:

# நன்றியுரை

**வ்ருச்சிகே ரோஹிணீஜாதம் ஸ்ரீபாணிம் நிசுளாபுரே!**
**ஸ்ரீவத்ஸாங்கம் காயகேந்த்ரம் முநிவாஹநமாச்ரயே!!**

*(கார்த்திகை மாதத்தில் ரோஹிணீ நக்ஷத்திரத்தில், நிசுளாபுரி என்னும் உறையூரில், ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவின் அம்சமாய் அவதரித்தவராய், வீணையைக் கையிலேந்திப் பெரிய பெருமாளை மனமுருகப் பாடுபவராய், லோகஸாரங்க மஹா முனிவரை வாஹநமாகக் கொண்டவரான திருப்பாணாழ்வாரை ஆச்ரயிக்கிறேன்).*

ஸ்ரீ வைஷ்ணவ 108 திவ்யதேசங்களில் பரமபதத்திற்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்றுள்ளது திருவேங்கடம் என்பதை யாவரும் அறிவர். இப்படிச் சிறப்பு பெற்றத் திருவேங் கடத்தில் அடியேன் முதுகலை தமிழ் படிக்க வாய்க்கப்பெற் றேன். மேலும், திருவேங்கடவன் அருளால், தாய் தந்தையின் முன் பிறவியின் (பூர்வ ஜென்ம சுக்ருதம்) பயனாக வைணவத் தில் ஆர்வம் கொண்டு பேராசிரியர் மா.வரதராஜன் ஸ்வாமி சொற்படி ஸ்ரீரங்கத்தில் அமைந்த ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ நிறுவனத் தில் 'பரிசய' (வைணவக்கல்வி) பட்டம் (1999) பெற்றேன். பின்னர் வைணவத்தில் ஆய்வு செய்யும் பாக்கியம் பெற்றேன். இவ்வாய்வு மேற்கொள்ள வழியமைத்து நல்கிய திருவேங்கட வன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைக்கு அடியேன் என்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

அறிவின்மையாகிய இருளில் முழ்கியிருந்த அடியேனை தமிழ்த்துறை துணைப்பேராசிரியர் ஸ்ரீமான். உ.வே.டாக்டர் மா.வரதராஜன் சுவாமி எம்.ஏ.(அர) எம்.ஏ.(தமிழ்) பி.எச்.டி.

வைணவம் என்னும் ஞான ஒளியாகிய விளக்கை ஏற்றி வழி நடத்திச் செல்கிறார். அடியேனது நெறியாளராக இருந்து வைணவத்தில் ஆய்வு செய்ய 'திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரான் ஓர் ஆய்வு' என்னும் தலைப்புக் கொடுத்து தலைப்பின் பிரபந்தமான அமலனாதிபிரான் மற்றும் மூன்று வியாக்யானங்களைச் சுமார் ஓராண்டுக்காலம் (1999 - 2000) முறையாக நடத்திய ஆசாரியராவர். அடியேன்பால் அளவற்ற அனுகிரஹமும், கடாட்சமும் அருளிய ஆசாரியர் திருவடிகளை எந்நாளும் ஸேவிக்க கடமைப்பட்டுள்ளேன். ஆசாரியரின் அபிமானம் என்றும் அடியேனுக்குக் கிடைக்க வேங்கடவனை வேண்டுகிறேன்.

சென்றபோதெல்லாம் அடியேன்பால் அன்பு கொண்டு ஆராய்ச்சியின் போது பல ஆலோசனைகள் தந்து ஆய்வேட்டைச் சரிவரப் பார்த்துப் பல நுணுக்கமான ஆய்வு நெறிமுறைகளைத் தெரிவித்து, ஆய்வு நூல் புத்தகவடிவில் அச்சிடுவதற்கு ஆலோசனைகள் கூறிய முன்னாள் தமிழ்துறை பேராசிரியர் ஸ்ரீமான் பொன். சௌரிராசன் எம்.ஏ.பி.எச்.டி அவர்களுக்கு நன்றியாகிய மாலையைச் சமர்ப்பிக்கிறேன்.

அடியேன்பால் அன்பு கொண்டு ஆய்வு நூல் புத்தக வடிவில் வருவதற்கு ஊக்கமளித்த தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் தானியேல் தேவசங்கீதம் எம்.ஏ. பி.எச்.டி. அவர்களுக்கு என் நன்றி உரியது.

அடியேனைப் பல வகைகளில் உற்சாகப்படுத்தி பல ஆலோசனைகள் கூறிய தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் டாக்டர் இரா.மனுவேல் எம்.ஏ.பி.எச்.டி. அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடியேன்பால் அளவற்ற அன்பு கொண்டு, அடியேனைப் புன் முறுவலுடன் வரவேற்று, அபிமானத்துடன் ஆட்கொண்டு, ஆய்வின் போது பல யோசனைகள் கூறி, நூலைப் பரிசோதித்து

ஆசிகள் பல வழங்கி வரும் என் குருவின் குருவான ஆசாரியர், ந்யாய வேதாந்த வித்வான் ஸ்ரீ வைஷ்ணவகிம்மம் ஸ்ரீமான் உ.வே.திருமலை அனந்தான்பிள்ளை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமிக்கு அடியேன் உளங்கனிந்த நன்றியாகிய மாலையைச் சமர்பிக்கிறேன். அடியேன் பால் அன்பு கொண்டு அவ்வப்போது ஆசி வழங்கி ஊக்கமளிக்கும் ஸ்ரீமான் உ.வே.டாக்டர் கோ.க.அ.ரங்கராஜன் சுவாமிக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

வேங்கடவனைத் தரிசிக்க திருமலை வந்த போதெல் லாம் அடியேன்பால் அன்பு கொண்டு ஆய்வு நுணுக்கங்களைத் தெரிவித்து உற்சாகப்படுத்தி வரும் பேராசிரியர் ஸ்ரீமான் சு.வேங்கடராமன் (மதுரை காமராஜ் பல்கலைக்கழகம்) அவர்களுக்கு என் நன்றி உரியது.

திருப்பாணாழ்வார் திருவருளாலும், என் ஆசாரிய குருவின் கடாசத்தாலும், ஸ்ரீ வைஷ்ணவ சாம்பிரதாயத்தில் அடியேன் பல ஆசாரியர்களின் அபிமானம் கிடைக்கப் பெற்றேன். அந்த வகையில் அடியேன்மேல் அளவற்ற அன்பு கொண்டு அடியேனை ஸ்ரீ காஞ்சி வரதர் சன்னதிக்கு அழைத்துச் சென்று அங்கு ஸ்ரீ வரதராஜ பெருமாள் திவ்ய மங்கள விக்ரகத்தை கண்ணாரக்கண்டு ஸேவிக்கும்படி செய்த ஸ்ரீமான் உ.வே. K.E.B. ரங்கராஜன் ஸ்வாமி, I.R.S. சென்னை அவர்களுக்கு தலையல்லால் கைமாறில்லேன்.

என்னைப் பெற்றெடுத்து ஆளாக்கி, இந்நிலைக்கு உயர்த்திய அடியேனது பெற்றோர்களின் பொற்பாதங்களை ஸேவிக்கின்றேன். அடியேனது வளர்ச்சியில் அக்கறை கொண்டு அன்புடன் நினைத்துப் பார்க்கும் தங்கை ரமா மற்றும் தங்கை கணவர் திரு. பிரபா(எ) சுப்பிரமணி அவர்களுக்கு என்றும் எனது நன்றி உரியதாகும். எனது ஆய்வுப் பணி செவ்வனே நிறைவேற ஒத்துழைப்பு நல்கி வரும் எனது உடன்

பிறப்பு பட்டு. பாஸ்கர்-க்கு என் நன்றி உரியது. என்னை தினந்தோறும் அபிமானித்து அன்புகாட்டி பல நல்ல ஆலோசனைகள் கூறிவரும் எனது ஆசாரியரின் அபிமானம் பெற்றவருமான பேராசிரியர் (ஸ்ரீமான் C. உமாகாந்தம் M.A. Ph.D. (Dept. of Philosophy) அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வு நூலை புத்தக வடிவில் வெளிவர உதவிய திருமலை திருப்பதி தேவஸ்தான ஆட்சிக்குழுவுக்கும்,மற்றும் ஸப்தகிரி ஆசிரியர் டாக்டர் N.S.ராமமூர்த்தி M.A., அவர்களுக்கும் என் நன்றி. அவ்வாறே பலவகைகளில் உதவி புரிந்து வரும் அன்பு அண்ணனும் அடியேனது ஆசாரியரின் முதல் சிஷ்யரான V.G.சொக்கலிங்கம் ஸப்தகிரி (தமிழ்) துணை ஆசிரியர் அவர்களுக்கு என் நன்றி உரியது.

ஆய்வேட்டின் அமைப்பு பல வகைகளில் சிறப்புற்று விளங்க அடியேனுடன் அன்புடன் ஒத்துழைப்பு நல்கி உதவி புரிந்த அன்பு அண்ணன் திரு M. ரவி அவர்களுக்கு என் நன்றி. இவ்வாறே பல யோசனைகள் கூறிவரும் திரு N.வஜ்ஜரவேல், K.மணிக்கிருஷ்ணன், மற்றும் எனது பால்ய நண்பராக விளங்கி வரும் T.M. ரவிக்குமார் இவர்களுக்கு என் நன்றி உரியது.

சிறந்த முறையில் இவ்வாய்வேட்டை புத்தகவடிவில் அமைத்து வெளியிட உதவிய தெய்வப்பணிச் செம்மல் வெங்கடசலபதி K.V.S. பிரிண்டர்ஸ் அவர்களுக்கு என் நன்றி

*ப.தனஞ்ஜெயன்*

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அமலன் | : | அமலனாதிபிரான் |
| ஆழ்வார் | : | திருப்பாணாழ்வார் |
| அவ. | : | அவதாரிகை |
| நாயனார் | : | அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் |
| பெ.பிள்ளை | : | பெரியவாச்சான் பிள்ளை |
| தேசிகர் | : | வேதாந்த தேசிகர் |
| ப. | : | பக்கம் |
| பா. | : | பாடல் |
| ப.ஆ. | : | பதிப்பாசிரியர் |
| சீயர் | : | பிள்ளைலோகம் சீயர் |
| முனிகள். | : | மணவாள மாமுனிகள் |
| மேலது. | : | மேலே குறிப்பிட்ட நூல் |

# பொருளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | IV-VII |
| 1. | திருப்பாணாழ்வார் வரலாறும் அமலனாதிபிரான் சிறப்பும் | 1-32 |
| 2. | அமலனாதிபிரானுக்கு அமைந்த உரைகள் | 33-44 |
| 3. | உரை உத்திகளும் உரைநயமும் | 45-84 |
| 4. | சமயக் கருத்துக்கள் | 85-120 |
| 5. | அழகியல் கூறுகள் | 121-148 |
| | முடிவுரை | 149-152 |
| பின்னிணைப்புகள் | | 153-160 |

1. திருப்பாணாழ்வார் அருளிச் செய்த அமலனாதிபிரான் பிரபந்த பாசுரங்கள்

2. துணை நூற்பட்டியல்.

# இயல் - 1

# திருப்பாணாழ்வார் வரலாறும்
## அவர் அருளிய
# அமலனாதிபிரானின் சிறப்பும்

*தமிழ் இலக்கியத்தில் பக்தி இயக்கம் - வைணவ சமயச் சிறப்பு - ஆழ்வார் பெயர் விளக்கமும் வரிசை முறையும் - திருப்பாணாழ்வார் அறிமுகம் - திருப்பாணாழ்வார் பெயர் விளக்கம் - பிறப்பின் பெருமை - வாழ்வின் சிறப்பு - திருப்பாணாழ்வாரின் பெருமை - மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் திருப்பாணாழ்வாரின் தனிச்சிறப்பு - தனியன் உணர்த்தும் ஆழ்வாரின் பெருமை - திருப்பாணாழ்வாரின் பல்வேறு திருநாமங்கள் - நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் அமலனாதிபிரானின் சிறப்பு - அமலனாதிபிரான் எழுந்த வரலாறு - அமலனாதி பிரானின் பெருமை - திருப்பாணாழ்வார் மங்களா சாசனம் செய்த திவ்விய தேசங்கள் - தொகுப்புரை.*

# திருப்பாணாழ்வார் வரலாறும் அவர் அருளிய அமலனாதிபிரானின் சிறப்பும்

திருமகள் கேள்வனாகிய திருமாலைப் பரம்பொருளாக ஏற்று வழிபடுவோர் ''வைணவர்'' எனப்படுவர். ''வைணவம்'' என்ற தமிழ்ச் சொல் ''விஷ்ணு'' என்ற வடசொல்லில் இருந்து வந்ததாகும். ''விஷ்ணு'' என்ற சொல் ''விஷல் வ்யாப்தெள'' என்ற தாதுவிலிருந்து வந்த சொல்லாகும். இச்சொல்லுக்கு எங்கும் வியாபித்துள்ளவன் என்று பொருள். இப்படி எங்கும் பரவியுள்ள பரம்பொருள் விஷ்ணுவே என்பதை வேதங்களும், உபநிடதங்களும், புராணங்களும் பறைசாற்றுகின்றன.[1] கீதையின் உரையில் ''விஷ்ணு'' சூரிய பகவானின் உருவமாகக் குறிப்பிடப்பட்டது அறியத்தக்கதாகும்.[2] மேலும், தமிழ் இலக்கியத்திலும் விஷ்ணுவின் சிறப்பைப் போற்றும் நூல்கள் பல உள்ளன.

## 1.0. தமிழ் இலக்கியத்தில் பக்தி இயக்கம்

சங்க காலத்தையும் நீதி நூல் காலத்தையும் அடுத்து தெளிவாகக் காணப்படுவது பக்தி இயக்கக் காலமாகும். கி.பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் சைவ சமயப் பெரியோர்களான நாயன்மார்களும், வைணவ சமயப்பெரியோர்களான ஆழ்வார்களும் தோன்றிப் பக்திப்பாடல்கள் மூலமாகப் பக்தி இயக்கத்தை ஊர் ஊராகச் சென்று பரப்பி வந்தார்கள்.[3]

## 1.1 வைணவ சமயச் சிறப்பு

தமிழ் இலக்கியத்தில் பண்டைக் காலத் தமிழ் மக்கள் பல வகைகளில் தங்கள் தங்கள் வழிபாடுகளை

மேற்கொண்ட பொழுதிலும் திருமாலிடம் அதிக ஈடுபாடு கொண்டு வழிபட்டார்கள் என்பதற்கு ஏது வாகப் பல நூல்கள் திருமாலின் வழிபாட்டைச் சிறப் பித்துக் கூறுகின்றன. தொல்காப்பியத்தில் ''மாயோன் மேய காடுறை உலகம்'' எனத்திருமால் முல்லை நிலக் கடவுளாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.[4] மேலும், திரு மாலைப் பற்றிய செய்திகள் தொகை நூல்களிலும் சிலப் பதிகாரம் முதலிய காப்பியங்களிலும் நிறையக் காணக்கிடைக்கின்றன. பரிபாடல்களிலும் திருமாலைப் பற்றி ஆறு பாடல்கள் உள்ளன. ''கடும் பொடும் கடும் பொடும் பரவதும் கொடும் பாடறியற்க எம்மெய் யறிவெனவே'' எனப் பண்டைத் தமிழர் மெய்யறிவு பெறுவான் வேண்டித் திருமாலைப் பூசித்தனர்.[5] இப்படிச் சிறப்புப் பெற்ற தமிழ் இலக்கியத்தில் பண்டைக் காலத்திலும் திருமால் வழிபாடு இருந்தது என்பது அறியத்தக்கதாகும். இப்படிச் சிறப்பாகத் திருமால் புகழ் பரப்பியவர்களில் ஆழ்வார்களே சிறப்பிடம் பெறுகிறார்கள்.

## 1.1.1 ஆழ்வார் பெயர் விளக்கமும் வரிசை முறையும்

திருமாலின் புகழை உலகுக்கு உணர்த்தியவர்கள் ஆழ்வார்கள் என்றும், திருமால் இயல்பு, வடிவம், குணங்கள், வீரச்செயல்கள் ஆகியவற்றில் ஆழங்கால் பட்டவர்கள் ஆழ்வார்கள் என்றும் கூறுவர். ''ஆழ்வார்'' என்பதை ''ஆள்பவர்'' என்றும் சொல்லலாம்.[6]

இப்படித் திருமாலைப் பரம்பொருளாக நினைத் துப் பாடிய ஆழ்வார்கள் பன்னிருவர். இவர்களைப் பலர்

பலவாறாக வரிசைப்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும். இராமாநுசரின் சீடரான திருவரங்கத்து அமுதனார் தாம் அருளிய இராமாநுச நூற்றந்தாதியில், இராமாநுசர் வணங்கிய ஆழ்வார்களை முறையே பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருப்பாணாழ்வார், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் என்று வரிசைப்படுத்திக்காட்டுவர். இதில் ஆண்டாளைப் பெரியாழ்வாரோடும் மதுரகவியாழ்வாரை நம்மாழ்வாரோடும் இணைத்துக் கூறியுள்ளார்.[7] மேலும், இராமாநுசர் காலத்தில் வாழ்ந்த பட்டர் என்னும் ஆசாரியர் அருளிய வடமொழி ச்லோகத்தில் பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார், பெரியாழ்வார், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், திருப்பாணாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் என்று வரிசைப்படுத்தியுள்ளார்.[8] இவ்வாழ்வார்கள் அனைவரையும் அவயவங்களாகக் கொண்ட ஸ்ரீபராங்குச முனிவராகிய நம்மாழ்வாரைத் தினந்தோறும் தாம் சரணமடைவதாகக் கூறுவர் பட்டர். மேலும், குருபரம்பராப் பிரபாவம் என்னும் நூலில் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் என்று வரிசைப்படுத்தி அவர்கள் வைபவத்தைக் காட்டுவது அறியத்தக்கதாகும்.[9] மேலும், மணவாள மாமுனிகள் தாம் அருளிய உபதேசரத்தின மாலையில் பொய்கையார், பூதத்தார், பேயார், புகழ்மழிசை ஐயன், அருள்

மாறன், சேரலர்கோன், துய்யபட்டநாதன், அன்பர் தாள்தூளி, நற்பாணன், நற்கலியன், என்று ஆழ்வார் களை வரிசைப்படுத்தி உரைப்பர்.[10] இது பெரும்பாலும் கால அடிப்படையில் அமைந்தது எனலாம். இவ் வாழ்வார்கள் அருளிய பிரபந்தங்களின் சிறப்பையும் பெருமையையும் அவர் தொகுத்து வழங்கியுள்ளார்.[11] இப்படிச் சிறப்புமிக்க ஆழ்வார்களுள் திருப்பாணாழ் வாரைப் பற்றியும், அவரது பிறப்பின் பெருமை பற்றியும் மேலே அறியலாம்.

## 1.1.2 திருப்பாணாழ்வார் - அறிமுகம்

சோழ நாட்டில் காவிரியில் வீசும் காற்றானது எது வரையில் வீசுகின்றதோ, அந்தக் காற்றின் மகிமையின் காரணமாக அந்த இடத்தில் உள்ளவர்களுக்கெல்லாம் வீடுபேறு நிச்சயம் என்பர்.[12] இத்தகைய திருக்காவேரிக் கரையில் ''நிசுளாபுரி'' என்று வழங்கப்படுவதாய், மாடங்களும் கூடங்களும் நிறைந்து அழகுகொடுப்ப தான உறையூரிலே பாணர் குலத்தில் அவதரித்தார் திருப்பாணாழ்வார்.[13]

## 1.1.2.1 திருப்பாணாழ்வார் - பெயர் விளக்கம்

திருப்பாணாழ்வார் பாணர் வகுப்பைச் சார்ந்தவர் என்று குருபரம்பராப்பிரபாவம் கூறும்.[14] பழங்குடிகளுள் ஒரு பிரிவினர் பாணன், பறையன், துடியன், கடம்பன் என்னும் இவர்களின்றிக் குடியுமில்லையென்றும் சங்க காலப்புலவர் மாங்குடிமருதனார் கூறியுள்ளார்.[15] பாணர் என்னும் பெயர் பாடுவோர் என்னும் பொருளுடையது என்றும், இவர்களை இசைப்பாணர், யாழ்ப்பாணர்,

மண்டைப்பாணர் என்றும் தொல்காப்பியர் கூறுவர்.[16] மேலும், பாணர்களைப் புலையராகவே முன்னோர்கள் கருதினார்கள் என்று கலித்தொகைப்பாடல் உணர்த்தும்.[17] இப்படிப்பட்ட பாணர் குலத்தில் தோன்றி இறைவனைப் பாடுவதே தொழிலாகக் கொண்டு வந்தமையால் இவருக்குத் திருப்பாணாழ்வார் என்று பெயர் வந்தது எனலாம்.

### 1.1.2.2 பிறப்பின் பெருமை

திருப்பாணாழ்வார் கலி பிறந்து 343 ஆம் வருடம் துர்மதியில் கார்த்திகை மாதம் ஐந்தாம் தேதி புதன் கிழமை ரோகிணி நட்சத்திரத்தில் ஸ்ரீமந்நாராயண னுடைய திருமார்பில் விளங்கும் ஸ்ரீவத்சத்தின் அம்சமாய் அவதரித்தார் என்று திவ்யசூரிசரிதம் கூறுகிறது.[18] இவர் கி.பி.781 இல் பிறந்ததாகக் கால ஆராய்ச்சி வல்லுனர்கள் கூறுவர்.[19]

### 1.1.2.3 வாழ்வின் சிறப்பு

திருப்பாணாழ்வார் வாழ்வே ஒரு தனிப்பட்ட சிறப்புடையதாகும். சோழ நாட்டு மன்னர்கள் சிறப்பு மிக்க ஆட்சி நடத்த தலைமை இடமாகத் திகழ்ந்த உறையூரிலே குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ் இழிந்த என்று சொல்லப்பட்ட பஞ்சம வர்ணத்திலே திருப் பாணாழ்வார் அவதரித்தார். திருவரங்கத்தைத் தாழ்ந்த சாதியில் பிறந்த தாம் தம் காலால் தீண்டலாகாது எனக் கருதி, ஆழ்வார் காவேரியின் தென்கரையிலிருந்து நித்யசூரிகள் ஸாமகானம் செய்வதுபோல் தினந்தோறும் திருவரங்கனான பெரிய பெருமாளிடத்திலே உகந்தவ

ராய் வேறொன்றும் அறியாதவராய்க் கண்ணை மூடிக்கொண்டு பெரிய பெருமாளைப் பாடிக்கொண்டு இருந்தார்; அப்போது பெருமாளுக்குத் திருமஞ்சன தீர்த்தம் கொண்டு வருவதற்காக ஒருநாள் விடியற் காலையில் லோகசாரங்க மகாமுனிவர் என்ற அடியார் அங்கு வந்தார்; திருப்பாணரைக் கண்டு ''தூரப்போ'' என்று சொல்ல கானத்தில் ஆழ்ந்த இவருக்கு அச்சொல் காதில் படவில்லை; பலமுறை சொல்லியும் கேட்க வில்லையே என்று முனிவர் ஒரு கல்லை எடுத்து வீசினார். அக்கல் இவர் முகத்தில் பட்டு இரத்தம் வழிய, திருப்பாணர் விழித்துப்பார்த்து ''பாகவதரிடம் அபசாரப் பட்டோமே'' என்று அகன்றார். முனிவர் திருமஞ்சனம் எடுத்துக்கொண்டு சன்னிதிக்குச் சென்றார். திருப் பாணாழ்வார் முகத்தில் பட்ட அடி அரங்கனுடைய நெஞ்சில் பட்டபடியாலே அன்றிரவு முனிவருடைய கனவில் அரங்கன் காட்சியளித்து ''நமக்கு அந்தரங்கரான பாண்பெருமாளை இவ்வாறு செய்யலாமோ'' என்று சொல்லி ''பாண்பெருமாளை நீர் தாழ்வாக நினை யாமல், உம்முடைய தோளிலே ஏற்றிக் கொண்டு நம்மிடம் அழைத்து வாரும்'' என்று நியமித்தான்.

லோகசாரங்க முனிவர் விடியற்காலையில் எழுந்து நல்ல விடிவாக இருந்ததை எண்ணி திருக்காவேரியில் நீராடி நித்ய அனுட்டானங்களைச் செய்தார்; தூரத்திலே வீணையும் கையுமாய்ப் பாடிக்கொண்டிருக்கும் திருப்பாணாழ்வார் இருக்குமிடம் சென்றார்; அவரை வணங்கி ''நம்பெருமாள் தங்களை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வரவேணும்'' என்று என்னை நியமித்தருளினார் என்று சொன்னார்; ''தாழ் குலத்தில்

பிறந்த நான் திருவரங்கப் பெருநகரை எப்படி மிதிப்பது'' என்று ஆழ்வார் தயங்கினார்; அப்படியானால் ''அடியேன் தோளின் மேலே எழுந்தருளும்'' என்று கூறினார் முனிவர்; ஆழ்வாரும் பெருமாளுடைய ஆணையையும் அப்பெருமாளின் அடியவரான முனிகளின் ஆணையையும் தட்டமாட்டாமல் இசைவைத் தெரிவித்தார்; லோகசாரங்கர் ஆழ்வாரைத் தம் திருத்தோள்களில் ஏற்றிக்கொண்டு திருவரங்கம் பெரிய கோயிலிலே புகுந்தார். பெரிய பெருமாளும் தனது திவ்ய மங்கள சொரூபத்தைக் காட்டிக்கொடுத்தார்; ஆழ்வாரும் கண்களாரக்கண்டு பாதம் முதல் முடிவரை அனுபவித்தார், அதன் விளைவாக ''அமலனாதிபிரான்'' என்கிற பத்து பாசுரங்களாலே தம் அனுபவத்தை உலகுய்ய வெளியிட்டருளி கருப்பக் கிரகத்திலுள்ள திருமணத் தூணுக்குள்ளே உகப்போடு நின்றார்; பெரிய பெருமாளும் ஆண்டாளை ஏற்றுக்கொண்டது போலத் திருப்பாணாழ்வாரைத் திருமேனியோடு அங்கீகரித்தார்; ஆழ்வாரும் அனைவரும் காணும்படி அரங்கன் திருவடிகளிலே மறைந்தருளினார். இந்த வரலாற்றின் மூலம் ஆழ்வாரின் வாழ்வின் சிறப்பு வெளியிடலாயிற்று.[30]

## 1.1.2.4 திருப்பாணாழ்வாரின் பெருமை

ஆழ்வார்கள் பதின்மருள் திருப்பாணாழ்வாரை ''நற்பாணன்'' என்று மணவாள மாமுனிகள் தாம் அருளிய உபதேசரத்தின மாலையில் குறிப்பிடுகிறார்.[31] பாணருக்கு நன்மையாவது ''அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்'' என்று இறைவனுடைய அடியவர்க்கு அடிமைபடுத்தியதற்கு ஏற்ப, பிறவியினால் தாழ்ச்சியைப்

பெற்று நன்மை உடையவராகத் திகழ்ந்தார் ஆழ்வார் என்பதினால் ''நற்பாணன்'' என்று மாமுனிகள் அருளியதை பிள்ளை லோகம் சீயர் உரைப்பர்.[22] இத்தகைய பெருமைபெற்ற ஆழ்வார் கார்த்திகை மாதத்தில் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தார் என்றும், அவரை ''வாய்த்த புகழ்ப்பாணர்'' என்றும், அவரது பிறந்த நாளை ''நன்குடனே கொண்டாடும் நாள்'' என்றும் போற்றுவர்.[23] இந்த ரோகிணி நட்சத்திரமானது ஆழ்வார் பிறந்தது மட்டுமல்லாமல் அவதார காலத்தில் கண்ணனும், பின்பு ஆசாரியர்களில் திருகோட்டியூர் நம்பிகளும் அவதரித்து முப்புரியூட்டி, மும்மடங்கு ஏற்றத்தையுடையதாக இருக்கும் என்பர் சீயர்.[24] மேலும், பாணருக்கு வாய்த்த புகழனாது தன்னுடைய இயல்புக்கு சேர்ந்த புகழாகும். அதாவது பொதுவான அடிமைக்குத்தக்க தாழ்ச்சியைப் பிறவியின் மூலமாக ஆழ்வார் உடையவராகையாலே லோகசாரங்க முனிவருடைய தலையில் ஏறி அமரும்படி அங்கீகரித்து அருளின புகழ் என்றவாறு. அடுத்து, இப்பாணர் வந்து அவதரித்தது - எப்படி இங்கிருந்து சென்ற முக்தர்கள் பரமபதத்தில் ஸாமகானத்தை ஓதுவாரோ, அந்த வகையில் இங்கே பெரியபெருமாள் திறத்து வாய்படைத்த பயனாக அடிமை செய்கிறார் ஆழ்வார். இப்படிப்பட்ட ஆழ்வாருடைய பிறந்தநாளை ஆத்தியர்கள் கொண்டாடுவர். இது பற்றியே ''நன்குடனே கொண்டாடும் நாள்'' என்பர் மாமுனிகள். அதாவது, அவர்கள் தான் லோகசாரங்க முனிவரைப் போலே பெரிய பெருமாள் திறத்திலும், அப் பெரியபெருமாள் விஷயமாக பிரமாணத்தில் உயர்ந்ததான ''அமலனாதி

பிரான்'' என்கிற செந்தமிழான ஆழ்வார் பிரபந்தத்தில் அந்த எம்பெருமான் விஷயத்திற்கு இலக்கானவராய், தாழ்ச்சியே நினைத்து அகலப் பார்க்கும் இந்த ஆழ்வார் திறத்தும் ஈடுபாடு உடையவர்கள். இதனால் இனிமை யுடைய இவரது பாடல்களை ஆத்திகர்கள் விரும்பிக் கற்பதாகக் கூறுவர் சீயர்.[35]

இராமாநுசரின் சீடரான திருவரங்கத்து அமுதனார் பாடிய இராமாநுச நூற்றந்தாதியில் இராமாநுசருக்குத் திருப்பாணாழ்வாரிடம் உள்ள ஈடுபாட்டை ஒருபாடல் மூலம் எடுத்துரைக்கிறார்.[36] ஆழ்வார்களுடைய வரிசைக் கிரமத்தில் முதலாழ்வார்கள் - (பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்) மூவரைச் சொல்லி, அடுத்தப்பாடலில் திருப்பாணாழ்வாரைப் போற்றியுள் ளார். இந்த இடத்தில் பட்டருடைய வடமொழி ச்லோகத்தில் முதலாழ்வார்களை குறிப்பிட்ட பிறகு திருமழிசையாழ்வாரை குறித்திருந்தபோதிலும் திரு வரங்கத்து அமுதனார் திருப்பாணாழ்வாரை இராமா நுசரின் திருவுள்ளத்திற்கு ஏற்ப நான்காவது ஆழ்வாராகக் குறிப்பிடுகிறார். ஏனெனில் நம்மாழ்வார் தாம் அருளிய திருவாய் மொழியில் ''பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர்'' என்று குறிப்பிட்டுள்ளார்.[37] இதற்கு உரையிட்ட நம்பிள்ளை முதலாழ்வார்களைப் பாலேய் தமிழர் களாகச் சொல்லி, திருப்பாணாழ்வாரைப் பெரிய பெரு மாளுடைய திருவடிகளிலே தொடங்கி அதிக பக்தி யுடையவராவது பற்றி ''இசைகாரர்'' என்று சொல்லிய தாகக் கூறுவர். எனவே, இராமாநுசர் முதலாழ்வார்களை அனுபவித்த பின்பு திருப்பாணாழ்வாரை அனுபவித்த

தாக அமுதனார் காட்டுகின்றார்.[28] இதனால் பாண்பெரு மாளான திருப்பாணாழ்வாருடைய பெருமை சிறந்து விளங்குவது காணலாம்.

அவ்வாறே திருப்பாணாழ்வார் பிறந்த ஊரைப் பற்றிச் சொல்லும் போது, மணவாள மாமுனிகள் ''ஓங்கும் உறையூர் பாணன் ஊர்'' என்று போற்றுகின்றார்.[29] உறையூருக்கு ஒக்கமாவது 'அடிமைத்தன்மைக்குத் தக்க உயர்ந்த குலத்தையுடையவரான ஆழ்வார் அவதரிக்கை யால் வந்த உயர்த்தி என்பர் சீயர். மேலும், 'எம் பெருமான் உகந்து இருக்கும் திருப்பதியில் உறையூர் நாச்சியார் அவதரித்த இடமாகையாலும் உண்டான உயர்த்தி என்பர்.[30] நம்மாழ்வாரை அவயவி (முழு வுடலாக) யாகவும் மற்ற ஆழ்வார்களை அவயவமாக வும் சொல்லும் ஒரு பிராசீந ச்லோகத்தில் திருப்பாணாழ் வாரையும், குலசேகராழ்வாரையும் நம்மாழ்வாரின் இருகைகளாகச் சொல்லி இருப்பது குறிப்பிடத்தக்க தாகும்.

## 1.1.2.5 மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் திருப்பாணாழ்வாரின் தனிச் சிறப்பு

திருப்பாணாழ்வாருக்கு மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் உள்ள தனிச்சிறப்பை உரையாசிரியர்கள் தங்கள் உரைமூலம் காட்டியுள்ளனர். முதலாழ்வார்கள் மூவரும் எம்பெருமானுடைய மேன்மைத் தன்மையிலே (பரத்வத்திலே) நோக்குடையவர்கள்; அர்ச்சாவதாரத் தையும் உகப்புடனே அனுபவித்தார்கள்; திருமழிசைப் பிரான் மற்ற தேவதைகள் பரம்பொருளல்ல என்று

மறுத்துச் சொல்வதிலேயே ஈடுபாடுடையவராயிருந்தார்; குலசேகராழ்வார் இராமாவதாரத்திலே பெரிதும் ஈடுபட்டவராய், அர்ச்சாவதாரத்தையும் அனுபவித்தார்; ஸ்ரீபராசர பகவானையும் வேதவியாசரையும் போலே நம்மாழ்வாரும் பெரியாழ்வாரும், ஆண்டாளும் கிருஷ்ணாவதாரத்தில் ஈடுபட்டு, அர்ச்சாவதாரத்தையும் அனுபவித்தார்கள்; தொண்டரடிப் பொடியாழ்வார் ஸ்ரீரங்க நாதனையே அனுபவிப்பவராயிருந்தாலும், தம்முடைய நிலைமையின் தாழ்ச்சியை உணர்த்துவதும், பிறர்க்கு உபதேசம் பண்ணுவதும், அரங்கனல்லால் தெய்வமில்லை என்று, அவனது மேன்மையைச் சபதம் பண்ணி உணர்த்துவதும் போன்ற மற்ற விஷயங்களில் ஊன்றியவராய் இருந்தார்; திருமங்கையாழ்வாரோ வெனில் அர்ச்சாவதாரத்திலே ஈடுபட்டவராவர்; அவ்வர்ச்சாவதாரத்திலும் ஓரிடத்தில் நிலை கொள்ளாது தான் உகந்த ஊரிலுள்ள எம்பெருமான் திருவடிகளைப் பாடி பரபரப்பாய்த் திரிந்தவராவர்; திருவரங்கனை அல்லாத திவ்ய தேசங்களையும் ''கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று மண்டினார்''; என்கிறபடியே அனுபவித்தார்.[31] அவ்வரங்கனிடத்தில் ''நின் அடியினை அடைந்தேன்'' என்று திருவடிகளை அனுபவித்ததோடு நின்று விட்டார்;[32] நம்மாழ்வார் தொடக்கமான ஆழ்வார்களுக்கு இறையனுபவம் அனுபவிக்கும் போதே தனது அடிமைத்தன்மைக்கு ஏற்றதான பகவதனுபவம் கிடைக்கப் பெறாமையாலே தங்கள் துக்கானுபவங்களைக் கலந்து பேசியிருக்கின்றனர் என்று உரைப்பர் அழகிய மணவாள பெருமாள்

நாயனார்.[33] ஆனால் திருப்பாணாழ்வார், மேலே சொன்ன எந்தவிதமான தன்மைகளையும் உடையவரல்லர்; பெரிய பெருமாளுடைய திருவடி முதல் திருமுடி வரை அனுபவித்த பெருமையுடையவர்; மற்ற ஆழ்வார்கள் எல்லோரும் தாங்கள் பாடிய பதிகங்களில் கடைசி பாட்டில் தங்கள் பெயரைத் தெரிவித்தல், பாட்டின் கணக்கைச் சொல்லுதல், பலன் சொல்லுதல் இவ்வாறாக பரம்பொருளான திருமாலை கரையின் மேலிருந்து கண்ணெட்டும் தூரம் வரை அனுபவித்தார்கள். ஆனால், திருப்பாணாழ்வாரோ, கரையைக் கடந்து எம்பெருமானோடு சேர்ந்து மறைந்தார் என்பர்.[34] மேலும், ஆழ்வாரின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் பெரிய பெருமாள் ஆழ்வாரை மறுபடியும் கேசாதிபாதமாக அனுபவிக்கச் சொன்னாலும் ஆழ்வாருக்குப் பெரிய பெருமாளைக் கண்ட காட்சியின் அனுபவத்தால் வந்த முடியாமையைக் கூறுவர். அனுமனை இராமன் தன்னுடைச்சோதிக்கு 'பரமபதம்' அழைத்த போதும் ''பாவோ நாந்யத்ர கச்சதி''[35] என்கிறபடியே தம் மனதில் உள்ள இராமனைவிட்டு வேறு இடத்துக்கு வரமுடியாமையைச் சொன்னதுபோல இராமவதார நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுக் காட்டுவர்.[36]

மேலும், நூற்றெட்டு வைணவ திருத்தலங்களில் சிறப்பாகக் கருதப்படுகின்ற புஷ்பமண்டபமான திருவேங்கடத்தில் பணிப்பூவும் கையுமான குறும்பறுத்த நம்பி திருவேங்கடமுடையானுக்கு அந்தரங்கர்; தியாக மண்டபமான காஞ்சி பெருமாள் கோயிலில் ஆலவட்டமும் கையுமான திருக்கச்சி நம்பி தேவப்பெருமாளுக்கு

அந்தரங்கர்; அந்த வகையில் போக மண்டபமான திருவரங்கம் பெரிய கோயிலிலே வீணையும் கையுமான திருப்பாணாழ்வார் பெரிய பெருமாளுக்கு அந்தரங்கரா வார்; திருமாலோ கருடவாகனன், திருப்பாணாழ்வாரோ முனிவாகனன் என்று குருபரம்பராப்பிரபாவம் கூறும்.[37] இவ்வாறு ஆழ்வாரின் தனிச்சிறப்பு அறியற்பால தாயிற்று.

## 1.1.2.6 தனியன் உணர்த்தும் ஆழ்வாரின் பெருமை

ஸ்ரீவைணவ சம்பிரதாயத்தில் "தனியன்" சேவிப்பது என்பது தொன்று தொட்டு வரும் ஒரு வழக்கமாகும். ஓர் ஆசார்யனை அல்லது அவரது நூலைப் புகழ்ந்து கூறு வதும், நூலுடன் சேராமல் தனித்து நிற்பதுமான ச்லோகத்தை தனியன் என்பர்.[38]

அந்த வகையில் அமலனாதிபிரானுக்கு இரண்டு தனியன்கள் உள.[39] பெரிய நம்பிகள் என்னும் ஆசாரியர் வடமொழியில் ஒரு தனியன் அருளியுள்ளார். இத் தனியன் மூலம் ஆழ்வாருடைய பெருமையும், அவர் அருளிய பிரபந்தத்தின் பெருமையும் அதற்கு உள்ளீடான எம்பெருமான் பெருமையும் அறியற்பாலதாகும். ஆழ்வாரைப்பற்றிச் சொல்லும் போது "யோ நிச்சிகாய மநவை முனிவாஉறநம் தம்" என்று கூறுவர். அதாவது லோகசாரங்க முனிவரை வாகனமாகக் கொண்ட திருப்பாணாழ்வாரைச் சிந்திப்பதாகும். அரங்க நாதனின் திருவடி முதல் திருமுடிவரை ஆழ்வார் அனுபவித்த தைக் காட்டியுள்ளார். யாவரொருவர் "கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே" என்று அறுதியிட்டாரோ

அப்படிப்பட்ட முனிவாகனரை மனதிலே எண்ணு கிறேன் என்று பெரிய நம்பிகளுடைய அனுபவத்தை சீயர் உரை மூலம் அறியலாம். இதனை அரண் செய்யும் வகையில் அன்னத்தை வாகனமாக உடைய நான்முகன் நான்கு முகத்தால் அனுபவித்தாப்போலே, முனிவாகன ரான திருப்பாணாழ்வாரும் ஒரு முகமாக இரண்டு கண்ணாலும் கண்டு அனுபவித்தார் என்று சீயர் நயம்பட யுரைப்பது அறியற்பாலதாகும்.[40] இந்த இடத்தில் ஆழ்வாருடைய ஏற்றத்தைச் சொல்லும்போது நான்முகக் கடவுளானவன் எம்பெருமானால் அபிமானிக்கப்பட்ட வராகையாலே கண்ணனை திருமுடி தொடங்கி அனுப வித்தார் என்றும், ஆழ்வாரோ அடியவராகையாலே அரங்கனை திருவடி தொடங்கி அனுபவித்தார் என்றும் சீயர் குறிப்பிடுவது ஒப்புநோக்கத்தக்கதாகும். இதிலே ஒரு வேற்றுமையென்னவெனில், பிரமன் முடியே தொடங்கி கண்டபின் தனக்குரிய படைப்புத் தொழிலில் ஊன்றினான். ஆழ்வாரோ அவ்வாறு காணவில்லை; ''திருக்கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன'' என்று சொன்னவர் முடிவில் ''மற்றொன்றினைக் காணாவே'' என்று சொன்னதனால் ஆழ்வாருடைய பெருமை சீர்மை பெற்று விளங்குகிறது. மேலும், வீணையும் கையுமாக இருக்கின்ற இவருக்கு நாரதரும் ஒருவகைக்கும் ஒப்பாக மாட்டார் என்றும் கூறுவர் சீயர். இவற்றிற்கெல்லாம் மேலாக பெரியாழ்வாருக்கு கிருஷ்ணாவதாரத்தில் ஏற்பட்ட ஈடுபாடு, திருப்பாணாழ்வாருக்கு அர்ச்சாவ தாரத்திலே அரங்கனிடம் ஏற்பட்டது என்பதை சீயர் உரைவழி கீழே அட்டவணைப் படுத்தி காணலாம்.

| பெரியாழ்வார் அவதார ஈடுபாடு (பெரியாழ்வார் திருமொழி) | திருப்பாணாழ்வார் அர்ச்சாவதார ஈடுபாடு (அமலனாதிபிரான்) |
|---|---|
| அ. பாதக்கமலம்-*(1.3.1)* | திருக்கமலபாதம் - *(1)* |
| ஆ. பீதகச்சிற்றாடையொடும் *(1.8.3.)* | அரைச்சிவந்தாடையின் மேல் - *(2)* |
| இ. அழகிய உந்தி-*(1.3.8.)* | அயனைப்படைத்ததோர்எழில் உந்தி - *(3)* |
| ஈ. பழம்தாம்பால் ஆர்த்த உதரம் *(1.3.9)* | திருவயிற்றுதர பந்தனம்-*(4)* |
| உ. குருமாமணிப் பூண்குலாவித் திகழும் திருமார்பு *(1.3.10)* | திருவார மார்பு - *(5)* |
| ஊ. அண்டமும் நாடும் அடங்க விழுங்கிய கண்டம் - *(1.3.13)* | முற்றுமுண்ட கண்டம் - *(6)* |
| எ. நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய கைத்தலம் - *(1.3.12)* | கையினார் சுரிசங்கனலாழியர் - *(7)* |
| ஏ. செந்தொண்டைவாய் - *(1.3.14)* | செய்யவாய் - *(7)* |
| ஐ. கண்களிருந்தவா - *(1.3.16)* | அப்பெரியவாய கண்கள் - *(8)* |
| ஒ. உருவு உரியவொளி மணிவண்ணன் *(1.3.17)* | எழில் நீலமேனி - *(9)* |
| ஓ. குழல்களிருந்தவா - *(1.3.20)* | துளபவிரையார் கமழ் நீண் முடி - *(7)* |

இவ்வாறாக வடமொழித்தனியன் மூலம் ஆழ்வார் பெருமையும், அவர் அருளிய பிரபந்தத்தின் பெருமையும் பெயர் உரை மூலம் அறியலாயிற்று.[41]

மற்றும், திருமலை நம்பிகள் என்னும் ஆசாரியர் அருளிய தமிழ்த் தனியனுக்கு உரைவழங்கிய பெயர்,

லோகசாரங்க முனிவர் தோளின் மேல் ஏறி, அவர் மூல மாக எம்பெருமானின் அவயவ அழகுகளை அனுப வித்து, நித்தியமாக எம்பெருமானுக்கு வீணாபாணி யாய், அவன் திருவடிக்கீழே சேவை பண்ணிக்கொண்டு நிற்கிற திருப்பாணாழ்வாரை வணங்கினால் வாழ்வில் ஒரு குறையும் இருக்காது என்று குறிப்பிடுவர்.[42]

மேலும், இத்திருப்பாணாழ்வாருடைய புகழுக் குப் புகழ் சேர்க்கும்படியாக வாழி திருநாமங்களும் பாடியுள்ளனர். அப்பிள்ளை என்னும் ஆசாரியர் அருளிய வாழித்திருநாமத்தில் ஆழ்வாரின் பிறப்பு பற்றிய சிறப்பு, எம்பெருமான்மேல் கொண்ட தீராத காதலின் சிறப்பு, அவர் அருளிய அமலனாதிபிரான் பிரபந்தத்தின் சிறப்பு, இவ்வாறாக ஆழ்வாரின் மேன்மைத்தன்மைக்கு உள்ளீடான பெருமையை அறியமுடிகிறது.[43] மேலும் மூன்றாம் பிரம்மதந்திர சுவந்தர சீயர் ஆழ்வாரைப் பற்றி வாழி திருநாமம் வழங்கியுள்ளார்.[44]

### 1.1.2.7 திருப்பாணாழ்வாரின் பல்வேறு திருநாமங்கள்

திருப்பாணாழ்வாருக்கு பல்வேறு திருநாமங்கள் உள. ஆழ்வார் எம்பெருமானை நினைத்தபடியே காவிரிக்கரையில் தியானத்தில் இருந்தபோது லோக சாரங்கமுனி கல்லால் அடித்ததின் மூலம் துன்புறுத்தப் படுகிறார்; இக்கல்லடியின் விளைவால் எம்பெரு மானுக்கு ஏற்பட்ட மன வருத்தத்தைக் கண்டு நாச்சியார் பெரிய பெருமாளுடன் ''நமக்கு அந்தரங்கரான இப் பாண்பெருமாள் புறம்பே நிற்கலாமோ'' என்று கூறு கிறார். இதில் ஆழ்வாரை ''பாண்பெருமாள்'' என்று

பெயரிட்டு அழைப்பது காணமுடிகிறது.[45] அடுத்து, எம்பெருமான் ஆணைப்படி லோகசாரங்க முனிவர் திருப்பாணாழ்வாரைத் தம்தோள்களின் மேல் ஏற்றிக் கொண்டு எம்பெருமான் சன்னதிக்கு வந்ததனால் இவருக்கு ''முனிவாகனர்'' என்ற பெயர் வழங்கலாயிற்று.[46] மேலும், நம்மாழ்வார் தாம் அருளிய திருவாய்மொழியில் ''இசைகாரர்'' என்ற பெயரால் திருப்பாணாழ்வாரை நினைப்பதாகக் கூறுவர்.[47] பட்டர் தாம் அருளிய வடமொழிச்லோகத்தில் ஆழ்வாரை ''யோகிவாஹாந்'' என்றும் அழைக்கின்றார்.[48] இவ்வாறாக திருப்பாணாழ்வாருக்கு பாண்பெருமாள், முனிவாகனர், இசைகாரர், யோகிவாஹான் என்று பலபடியான திருநாமங்கள் இருப்பதைக் காணமுடிகிறது.

## 1.1.3 நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் அமலனாதிபிரானின் சிறப்பு

திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரான் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்களில் முதலாயிரத்தில் ஒன்பதாவது பிரபந்தமாகும். இப்பிரபந்தம் திவ்வியப் பிரபந்தங்களில் பத்து பாசுரங்களைக் கொண்டதாகும்.[49] திருப்பல்லாண்டு தொடக்கமாக அமலனாதிபிரான் ஈறாக அமைந்த பிரபந்தங்கள் வைணவ இரகசியமான திருமந்திரத்தில் ''ஓம்'' என்ற பிரணவத்தின் பொருளை வெளிப்படுத்துவதாகும்.[50] இதைப்பற்றிய விரிவான ஆய்வு சமயகருத்துக்கள் என்ற இயலில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.[51]

### 1.1.3.1 அமலனாதிபிரான் எழுந்த வரலாறு

அமலனாதிபிரான் எழுந்த வரலாற்றில் ஓர் சிறப்பான முக்கியத்துவம் இருக்கிறது. திருவரங்கத்துக்கு வெளியில் உள்ள தேசங்களில் வசிப்பவர்கள் எல்லோரும் ரஜோ குணமும், தமோகுணமும் நிறைந்தவர்களாக இருப்பார்கள்; அதனால் இறைவனைத் தவிர மற்ற விஷயங்களில் மிகவும் ஆசையுடையவர்களாக இருந்தனர்; அவ்வனுபவமும் நேரே கிட்டப்பெறாமையாலே பொருள் ஈட்டல் முதலிய தொழில்களிலே முழுகி, பெரியதோர் இடும்பையைப் பூண்டிருந்தனர்; ஆனால் திருவரங்கத்தில் உள்ளே இருப்பவர்களோ மிகுதியான ஸத்வ குணம் நிறைந்தவர்களாய், எல்லையற்ற அழகையுடைய பெரிய பெருமாளை அனுபவித்துக் கொண்டு களித்திருந்தனர். இந்தத் திருவரங்கம் எல்லா புண்ணியங்களும் நிறைந்த தேசமென்றும், இங்கிருக்கும் இறைவன் புண்ணியங்களுள் மிகவும் புண்ணியமானவனென்றும், மங்களங்களில் மிகவும் மங்களமானவனென்றும், சாத்திரங்கள் கூறியபடியே திருவரங்கத்தோடு உண்டான சம்பந்தத்தால் பிரிதொன்றுக்கில்லாத சிறப்புடையவனாகத் திகழ்கிறான். இதைக்கேட்ட திருப்பாணாழ்வார் வெளியிலே உள்ளாரோடு சேருவது குற்றமாக நினைத்தது மட்டுமல்லாமல் இறைவனோடு சிறப்பு பெற்று திருவரங்கத்தில் புகுருகையும் குற்றமென்று நினைத்தார். உலகமக்கள் உண்டியே உடையே உகந்து ஓடித் திரிவதால் தான் அவர்களோடு வெளியே சேரமாட்டாது தம்முடைய தாழ்ச்சியாலே திருவரங்கத்தில் புகுரமுடியாமல் நடுவிலே நிற்பவராய், பெரிய

பெருமானுடைய கண்ணுக்கு இலக்காக காவிரியின் தென்கரையைப் பற்றி நின்றார்; பெரியபெருமாளும் உலகமக்கள் அகங்காரத்தால் பீடிக்கப்பட்டு தன்னை விட்டு மற்ற விஷயங்களில் பற்றுடையவர்களாய் இருக்க, ஆழ்வார் மட்டும் தன்னையே நினைத்திருப்பது கண்டு மனதிலே உவகை கொண்டான். இதனால், ஆழ்வாருக்கு உபாயமான தன் திருவடிகளை மனக்கண்ணிலே காட்டிக்கொடுத்தான். இதுபற்றியே ''திருக்கமல பாதம் வந்து என் கண்ணினுள்ளன வொக்கின்றதே''[52] என்று பாசுரமிடுகிறார்; இப்படி மனதிலே நேரே கண்ட அந்தத் திருவடிகளை நினைத்து ஆழ்வாருடைய மனதானது ஞானத்திற்கு இருப்பிடமாகையாலே அந்தத் திருவடிகளுக்கு மேலான திருப்பீதாம்பரத்தையும் திருவரையுமாகிய சேர்த்தியையும் கண்டு ''அரைச்சிவந்த ஆடையின் மேல் சென்றதாம் என சிந்தனையே''[53] என்று அனுபவித்தார்; இவ்வாறாக தம்முடைய கரணமும் தாமும் அனுபவிக்கும்படி தம்மையுண்டாக்கின நான்முகனைப் பெற்ற திருநாபிகமலத்தைக் காட்டவே ''அயனைப்படைத்ததோரெழில் உந்தி மேலதன்றோ''[54] என்று அனுபவித்தார். மேலும் மேன்மைக்கும், எளிவந்ததன்மைக்கும் எடுத்துக் காட்டான திருவயிற்று உதரபந்தத்தின் அழகு ஆழ்வாரை தன் பக்கலிலே இழுக்க ''திருவயிற்று உதரபந்தம் என்னுள்ளத்துள் நின்று உலாகின்றதே''[55] என்று ஈடுபடுவர்; அதற்கும் மேலே எம்பெருமானது திருமார்பானது தன்னுடைய ஆரம் முதலான ஆபரணங்களையும், பெரிய பிராட்டியார்க்கு இருப்பிடமான (அந்தப்புரமான) மேன்மையையும் காட்டிக் கொடுத்ததால் ''திருவாரமார்பதன்றோ

அடியேனை ஆட்கொண்டதே''[56] என்று ஆழங்கால்படு கிறார். அந்தப் பிராட்டியையும் ஆரம் முதலான ஆபரணங்களையும் தாங்குவதான திருக்கழுத்தை ''முற்றும் உண்ட கண்டம் கண்டீர் அடியேனை உய்யக் கொண்டதே''[57] என்று அனுபவித்தார்; இவற்றிற்கும் மேலாக, எம்பெருமானது வாயானது ''எல்லாப் பிராணிகளுக்கும் அபயமளிக்கிறேன்'' என்று இராம பிரான் விரதம் பூண்டதைச் சொல்லும் அழகை அனுபவித்து, ஆழ்வாரும் கண்ணை மூடிக்கொண்டு அனுபவிக்கும்படி இயற்கையான எழிலையுடைய திருவதரத்தை அவன் காட்ட ''செய்யவாய் ஐயோ''[58] என்று அனுபவித்தார்; இப்படி எம்பெருமானுடைய அவயவங்களை அனுபவிக்கும்போது இடையிலே அவனுடைய திவ்விய ஆயுதங்களான சங்கும், சக்கரமும் பற்றிக்கொள்ள அவற்றைக் கண்ட ஆழ்வார் ''கையினார் சுரிசங்கனலாழியர்''[59] என்று அனுபவித்தார்; மேலும், வாயினால் அபயமளிக்கிறேன் என்று சொன்னதை எழுதிக்கொடுக்கிற குளிர்ந்த பார்வைகளையுடைய திருக்கண்களை ''கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரிய வாயகண்கள்''[60] என்று அனுபவித்தார்; இவ்வாறு பெரிய பெருமாளுடன் அவயவங்களோடு உண்டான சேர்த்தியால் வந்த அழகையும் இயற்கையான அழகையுடைய திருமேனி யின் தோற்றப்பொலிவையும் அனுபவித்தார் ஆழ்வார். இப்படி மனக்கண்ணால் பாதாதிகேசமாக அனுபவித்த இப்பிரபந்தத்தைக் கேட்ட பெரிய பெருமாள், ஆழ்வார் இப்படி குணானுபவத்திலே ஊன்றியபடியைக் கண்டு அவரை தன் பக்கத்திலே அழைத்து கொள்ள விரும்பி

னான். இனி தான்போய் அழைத்து வந்தால் அர்ச்சாவதார நிலை கடந்த குற்றம் வரும் என்று எண்ணினான்; அதே சமயத்தில் ஆழ்வாரே வந்தால் அது அவருடைய இயல்புக்குக் குற்றமாக இருக்கும் என்று எண்ணி, தம்மருகே சேவித்திருக்கிற லோகசாரங்க முனிவரைப் பார்த்து ஆழ்வாரை அழைத்து வரச்சொன்னார்; லோக சாரங்க முனிவரும் பாகவதர்களிடம் பற்றுடையவர்; மற்றும் ஆழ்வார்களுடைய பாடல்களை அடிக்கடி கேட்டிருப்பவர்; எனவே, வேகமாகச் சென்று ஆழ்வாரைத் தன் தோள்மேல் எழுந்தருளப்பண்ணிக் கொண்டு வந்தார்; ஆழ்வாரும் பெரிய பெருமாளுடைய கௌரவத்தை அழிக்கக் கூடாது என்று எண்ணி லோக சாரங்க முனிவரின் மேல் இருந்தவராய் கோயிலுக் குள்ளே வந்து பெரிய பெருமாளைத் திருவடி தொழுதார்; ஆழ்வாரும் எம்பெருமானுடைய மேன்மைத் தன்மை (பரத்வம்), அணிவகுப்பு நிலை (வியூகம்) அவதாரங்கள் (விபவம்) அர்ச்சை ஆகியவற்றையெல்லாம் பெரிய பெருமாளிடத்திலே ஒருபடியாக நினைக்கை யாலே தமக்கும் பெரிய பெருமாளைத் தவிர வேறொருவரை அனுபவிக்க விருப்பமில்லை என்றும், அது உண் டானாலும் பெரிய பெருமாளை அனுபவித்த கண்கள் மற்றொன்றினைக் காணாவே;" என்று சொல்லும்படியாக இருப்பதின் மூலம் அமலனாதிபிரான் எழுந்த வரலாற்றை நாயனார் உரை மூலம் அறியமுடிகிறது."

## 1.1.3.2 அமலனாதிபிரானின் பெருமை

அமலனாதிபிரான் முதல் மூன்று பாடல்களில் எல்லா வேதத்தின் சுருக்கமாய் மூன்று எழுத்துக்களை உள்ளடக்கியதான ''ஓம்'' என்கிற பிரணவத்தின் அகார,

உகார, மகாரங்களாலே முதலீட்டு மூன்று பாட்டுக் களையுடைய அடியிலே அமைந்துள்ளது இப்பிரபந்தம் என்றும், ''ஓம்'' என்ற பிரணவத்தைத் தெரிவிப்பதான வஸ்து எம்பெருமான் என்றும், பெரிய பெருமாளைப் பிரணவ வடிவமான விமானத்தின் நடுவில் திருவடி தொடங்கி திருமுடி வரையில் அனுபவித்த பிரபந்தம் என்கிற விருப்பத்தோடு ஆசாரிய உச்சாரண முறையில் கற்பார்கள் என்றும், அமலனாதிபிரானின் பெருமை யைச் சீயர் கூறுவர்.[63]

அடுத்து, இராமாநுச நூற்றந்தாதியில் திருவரங் கத்து அமுதனாரும் அமலனாதிபிரானின் பெருமையை ''சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமிழாலளித்த பாரியலும் புகழ்ப் பாண் பெருமாள்'' என்று கூறுவர். இதற்கு உரையிட்ட மாமுனிகள் அமலனாதிபிரான் என்னும் பிரபந்தமானது எம்பெருமானின் இயல்பு, வடிவம், குணம் செல்வங்கள் (லீலா விபூதி, நித்யவிபூதி) இவற்றை உள்ளபடியே தெரிவிப்பதால் வந்த சீர்மையை உடையது என்றும், ருக், யஜுர், சாம, அதர்வண என்று நான்கு வகைப்பட்ட வேதத்தினுடைய இனிமையான பொருளை சொல்வது என்றும், இதனை அருளியவர் நடை விளங்கு தமிழ் மாலையாலே உதவி செய்தவராய் பூமியிலே நிலையாக நின்றுள்ள கீர்த்தியையுடைய திருப்பாணாழ்வார் என்றும் உரைப்பர்.[64]

அமலனாதிபிரானின் பெருமை ஆசாரியர்கள் காலத்திலும் மிகவும் விளங்கி வந்ததை அறியலாம்.

மணக்கால் நம்பி என்னும் ஆசாரியர் தம் ஆசாரியர் மூலமாக ஆளவந்தாருக்கு மகா நிதியென்னும் திருவரங் கத்து இறைவனைக் காட்டினார். அப்படிப்பட்ட திருவரங்கத்து இறைவனிடம்.

> "அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக் கண்ட
> கண்கள் மற்றொன்றினைக் காணாவே"

என்று அருளியபடியே ஆளவந்தார் வேறொரு விஷயம் அறியாதவராய் இருந்தார்; அவ்வாறே ஆளவந்தார் திரு மேனியிலே வாட்டம் கண்டு எழுந்தருளியிருக்கும் போது அவருடைய சீடர்கள் தங்களுக்குத் தஞ்சமாக இருப்பதின் பொருளைச் சொல்ல வேண்டும்படி வேண்டினர். அதற்கு ஆளவந்தார் "பெரிய பெருமாளின் திருவடிகளின் கீழே வீணையும் கையுமாய் சேவித்து இருக்கும் திருப்பாணாழ்வார் விக்ரஹத்தை பாதாதிகே சாந்தமாக (பாதம் முதல் முடிவரையில்) சேவித்துக் கொண்டு போருங்கள்" என்று சொன்னார். மேலும், பெரிய பெருமாள் உயிர்நிலை அறிந்தவர் திருப்பாணாழ் வார்; திருப்பாணாழ்வார் உயிர்நிலை அறிந்தவர் திருவரங்கப்பெருமாள் அரையர் என்றும் அருளினார். இவ்வாறாக ஆழ்வாருடைய பெருமையும் அவர் அருளிய பிரபந்தத்தின் பெருமையும், அந்த பிரபந்தத்தின் உள்ளீ டான திருவரங்கத்து இறைவனுடைய பெருமையும் அறியற்பாலதாகும்.[60]

அவ்வாறே ஆளவந்தார் தம்முடைய சீடர்களைப் பார்த்து திருமந்திரத்தின் பொருளாக போக மண்டப மாகத் திருவரங்கம் திகழ்கிறது என்றும், இதனை வெளி

யிட்டவர் திருப்பாணாழ்வார் என்றும், குருபரம்பராப் பிரபாவம் மூலம் அறியலாகும்.[66] இவ்வாறே ஆளவந்தார் மட்டுமின்றி அவருக்குப் பின்பு வந்த இராமாநுசரும் முதன் முதலில் திருவரங்கத்து இறைவனை சேவிக்கும் போது அமலனாதிபிரானில் சொல்லியபடியே சேவித்த தாகவும் மேலும், அவரே வடநாட்டு யாத்திரைகள் முடிந்து திரும்பும்போது திருவரங்கத்துப் பெரிய பெருமாளை அமலனாதிபிரான்படியே திருவடி முதல் திருமுடிவரையில் அனுபவித்ததாகவும் வரலாற்றுச் செய்தி கூறுகிறது.[67] கோயில் என்று சொல்லப்படும் திருவரங்கத்துக்கு முதன்மை வந்ததுக்குக் காரணம் 'அவ்வெம்பெருமான் திருப்பாணாழ்வாரோடு கலந்து பரிமாறுகையாலே' என்பர்.[68]

இவ்வாறே வேதாந்த தேசிகரும் பெரிய பெருமாளைப் பற்றிப் பன்னிரெண்டு ச்லோகங்களைக் கொண்ட "பகவத்தியான சோபாநம்" என்ற பிரபந்தத்தில் அர்ச்சாரூபியான அரங்கனைத் திருமுடி முதல் திருவடிவரை கண்களால் கண்டு அனுபவித்தால் எல்லா பாபங்களும் நீங்கும் என்று கூறி, இந்த ஸ்தோத்திரத்திற்கு திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரான் முன்னோடி என்று அமலனாதிபிரானின் பெருமையை கூறுவர்.[69]

மணவாள மாமுனிகள் முதன் முதலாக திருவரங்கத்து இறைவனை வழிபடும்போது அமலனாதிபிரானின் படியே பாதாதிகேசமாக அனுபவித்தார் என்று யதீந்திரப்ரணவப்பிரபாவம் கூறிகிறது.[70]

## 1.1.4 திருப்பாணாழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்ய தேசங்கள்

திருப்பாணாழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்ய தேசங்கள் மூன்று. இம் மூன்றும் வைணவ திவ்விய தேசங்களில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். ஆழ்வார் முதல் பாட்டில் எம்பெருமானானவன் பரமபதத்தில் இருந்து நேராக திருவேங்கடத்திலே கால் தாழ்த்தான் என்றும், திருவேங்கடத்தில் இருந்து தான் பள்ளி கொள்வதற்கு சிறப்பான இடத்தைப் பார்க்கும் போது அவனுக்கு காவிரிக்கரையில் உள்ள திருவரங்கம் தென்பட்டதினால் அங்கே சென்று பள்ளிகொண்டான் என்றும் கூறுவர்.[71] எனவே, பரமபதம், திருவேங்கடம், திருவரங்கம் ஆகிய இம்மூன்று திவ்விய தேசங்களையும் ஆழ்வார் இருந்த இடத்திலிருந்தே முதல் பாடலிலேயே மங்களாசாசனம் செய்தார் என்பது அறிய முடிகிறது.[72] பத்து பாடல்களில் அரங்கனைப்பற்றி இருப்பினும் திருவேங்கடவனைப் பற்றி முதல் பாட்டிலும் மூன்றாம் பாட்டிலும் மங்களாசாசனம் செய்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## தொகுப்புரை

1. தமிழ் இலக்கியத்தில் பக்தி இயக்கத்திற்கு ஆழ்வார்கள் முக்கியத்துவம் பெற்றவர்கள் என்பதை அறிய முடிந்தது.
2. ஆழ்வார்களில் திருப்பாணாழ்வார் பிறப்பின் பெருமையின் மூலமாகவும், தன்னலமற்ற அடியவ ராக ஆழ்வார் திகழ்வதைக் காணமுடிகிறது. அதே சமயத்தில் இறைவன் முன் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடு இல்லாமையையும் அறிய முடிகிறது.

3. மற்ற ஆழ்வார்களைக்காட்டிலும் திருப்பாணாழ்வாருக் குள்ள பெருமை குருபரம்பராப்பிரபாவம் உரைகள் காட்டிய வரலாற்று சிறப்பு மூலமாக உணர்த்தப்பட்டுள்ளது.

4. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் அமலனாதிபிரான் திருமந்திரத்தில் "ஓம்" என்ற பிரணவத்தின் பொரு ளாக அமைந்ததை காணமுடிகிறது.

5. ஆழ்வாருடைய பக்தியின் உள்ளுணர்வு வாயிலாக அமலனாதிபிரானின் தோற்றமும் அதன் பெருமையும் தெளிவு செய்யப்பட்டுள்ளன.

## சான்றெண் விளக்கம்


1. கீழாத்தூர் ஸ்ரீநிவாஸாச்சாரியர், ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ர உரை, ப.21

2. பகவத் கீதை, அத்யாயம் 10-21 வது ச்லோகம்

3. மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு ப.99

4. தொல்காப்பியம், பொருளதிகாரம் அகத்திணை நூற்பா 5 அடி 1

5. கீரந்தையார், பரிபாடல் எண் 2 அடிகள் 75, 76

6. பி.ஸ்ரீ. திவ்வியப் பிரபந்த சாரம் ப.23

7. இராமாநுச நூற்றந்தாதி, பாசுரங்கள் 8-18

8. பூதம் ஸரஸ்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்|
பக்தாங்க்ரிரேணு பரகாலயதீந்த்ரமிஸ்ராந்
ஸ்ரீமத்பராங்குச முநிம் ப்ரணதோஸ்மி நித்யம்||

9. குருபரம்பராப்பிரபாவம், ஆறாயிரப்படி ப-120

10. பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
ஐயனருள் மாறன் சேரலர்கோன் - துய்யப்பட்ட
நாதன்பர்தாள்தூளி நற்பாணன் நற்கலியன்
ஈதிவர் தோற்றத்தடைவாமிங்கு.
(உபதேசரத்தினமாலை. பாடல் 4)

11. பொய்கையாழ்வார் - முதல் திருவந்தாதி; பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி, பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி; திருமழிசையாழ்வார் - நான்முகன் திருவந்தாதி, திருசந்தவிருத்தம்; நம்மாழ்வார் - திரு விருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி; குலசேகராழ்வார் - பெருமாள் திருமொழி; பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி; தொண்டரடிப் பொடியாழ்வார் - திருமாலை, திருபள்ளியெழுச்சி; திருப்பாணாழ்வார் - அமலனாதிபிரான்; திருமங்கையாழ்வார் - திருவெழு கூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல், பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந் தாண்டகம் மற்றும் ஆண்டாள் - திருப்பாவை, நாச்சியார் திருமொழி; மதுரகவியாழ்வார் - கண்ணிநுண் சிறுத் தாம்பு.

12. குருபரம்பராப்பிரபாவம் 167 வது ச்லோகம் ப.62

13. மேலது, ப.64

14. மேலது.

15. புறநானூறு - 335

16. தொல்காப்பியம் பொருளதிகாரம் - 91

17. கலித்தொகை - 68

18. அதநத்ர குலேந்திமே ரமா ரமணோரஸ்ஸ்திதலாஞ்சநாம்சஜ:|
ஸமஜாயத பாணஸம்ஜ்ஞகஸ் ஸுகவி: கார்த்திக மாஸி வைதபே||
(திவ்யஸூரிசரிதம் - (7-17)

19. Religion and Philosophy of Nalayira Divya Prabandam Page -185
20. குருபரம்பராப்பிரபாவம் ப.62-68
21. உபதேசரத்தின மாலை பாடல் - 4
22. மேலது, உரை ப.13
23. உபதேசரத்தின மாலை பாடல் - 10
24. மேலது, உரை ப.24
25. மேலது, உரை ப.25
26. சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமிழாளித்த
    பாரியிலும் புகழ்ப்பாண்பெருமாள் சரணாம் பதுமத்
    தாரியில் சென்னியிராமாநுசன் தன்னைச் சார்ந்தவர் தம்
    காரியவண்மை என்னால் சொல்லொணாது இக்கடலிடத்தே.
    (இராமாநுச நூற்றந்தாதி - 11)
27. திருவாய் மொழி 1.5.11
28. இராமாநுச நூற்றந்தாதி - 11
29. உபதேச ரத்தின மாலை பாடல் - 30
30. உபதேச ரத்தின மாலை உரை ப.69
31. திருக்குறுந்தாண்டகம் பாடல் - 19
32. பெரியதிருமொழி 5.8.1
33. அமலன். நாயனார் உரை ப.7-9
34. அமலன். பெ.பிள்ளை உரை ப.105
35. வால்மீகி இராமாயணம், உத்தரகாண்டம் - 40-15
36. அமலன். நாயனார் உரை ப.108
37. குருபரம்பராப்பிரபாவம் ப.155

38. புதுக்கோட்டை எ.ஸ்ரீநிவாசராகவன், ஸ்ரீபரமபத ஸோபானம் வியாக்யானம் ப.2

39. (1) ஆபாத சூடமநுபூய ஹரிம் சயாநம்
மத்யே கவேரதுஹிதுர் முதிதாந்தராத்மா।
அத்ரஷ்டருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோ நிச்சிகாய மநவை முநிவாஹநம் தம்॥
(பெரிய நம்பிகள்)

(2) காட்டவே கண்ட பாதகமலம் நல்லாடைஉந்தி
தேட்டரு முதரபந்தம் திருமார்புகண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித்தனிபுகுந்து
பாட்டினால் கண்டுவாழும் பாணர்தாள் பரவினோமே.
(திருமலை நம்பிகள்)

40. அமலன். பிள்ளைலோகம் *சீயர்* தனியன் உரை ப.3

41. மேலது, ப.4

42. மேலது, ப.56

43. உம்பர் தொழும் மெய்ஞ்ஞானத்து உறையூரான் வாழியே
உரோகிணி நாள் கார்த்திகையில் உதித்தவள்ளல் வாழியே
வம்பவிழ்த்தார் முனிதோளில் வந்த பிரான் வாழியே
மலர்க் கண்ணை மற்றொன்றில் வையாதான் வாழியே
அம்புவியில் மதிலரங்கர் அகம் புகுந்தான் வாழியே
அமலனாதிபிரான் பத்தும் அருளினான் வாழியே
செம்பொன்னடி முடியளவும் சேவிப்போன் வாழியே
திருப்பாணன் பொற்பதங்கள் செகதலத்தில் வாழியே

44. எம்பெருமானுறையூராரேத்த வந்தோன் வாழியே
ஏற்ற கார்த்திகையில் உரோகிணியுதித்தான் வாழியே
அம்புவியிலங்கருக் கண்டுகந்தான் வாழியே
அக மகிழ்ந்ததே அவர் புகழநின்றுயர்ந்தோன் வாழியே

அம்புய நேர்தாண் முனிதோள் வைத்திட்டான் வாழியே
அமலனாதிபிரான் பத்து அருள் செய்தான் வாழியே
பைம்பொழில் சூழ் திருவரங்கந் திகழ்ந்தபிரான் வாழியே
பாண் பெருமாள் பங்கயத்தாள் பார்தனில் வாழியே

45. குருபரம்பராப்பிரபாவம் ப.66

46. மேலது, ப.67

47. திருவாய்மொழி 1.5.11

48. பூதம் ஸரச்ச மஹதாஸ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்|
பக்தாங்க்ரிணே பரகாலயதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்||

49. முதலாயிரம் 1. திருப்பல்லாண்டு - 12, 2. பெரியாழ்வார் திருமொழி 461, 3. திருப்பாவை - 30, 4. நாச்சியார் திருமொழி - 143, 5. பெருமாள் திருமொழி - 105, 6. திருச்சந்த விருத்தம் - 120, 7. திருமாலை - 45, 8. திருப்பள்ளியெழுச்சி - 10, 9. அமலனாதிபிரான் - 10, (பின்னிணைப்பு காண்க) 10. கண்ணிநுண் சிறுத்தாம்பு - 11.

50. கலியன் அருள்பாடு, பெ.பிள்ளை ப.5 (திருமந்திரம்: ஓம் நமோ நாராயணாய)

51. சமயக்கருத்துக்கள் இயல் - 4 ப.85

52. அமலன். பாடல்.1

53. அமலன். பாடல்.2

54. அமலன். பாடல்.3

55. அமலன். பாடல்.4

56. அமலன். பாடல்.5

57. அமலன். பாடல்.6

58. அமலன். பாடல்.7

59. அமலன். பாடல்.7

60. அமலன். பாடல்.8.

61. அமலன். பாடல்.10

62. அமலன். நாயனார் உரை ப.99-104

63. உபதேசரத்தின மாலை பாடல் 10 உரை ப.25-26

64. இராமாநுச நூற்றந்தாதி பாடல் - 11 மாமுனிகள் உரை ப.44,45

65. குருபரம்பராப்பிரபாவம் ப.134,153,154

66. மேலது, ப.155

67. மேலது, ப.182

68. மேலது, ப.294

69. பகவத் தியான சோபாநம், (மணிமண்டபம் வெள்ளி விழா) தேசிக ஸ்தோத்ர ஸாரமலர் 1994

70. யதீந்த்ரப்ரணவப் பிரபாவம் ப.68

71. அமலன். பெ.பிள்ளை உரை ப.23

72. அமலனாதிபிரான் அடியார்க்கு என்னை யாட்படுத்த
விமலன் விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிளரங் கத்தம்மான் திருக்
கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன வொக்கின்றதே.

# இயல் - 2

# அமலனாதிபிரானுக்கு அமைந்த உரைகள்

தமிழ் இலக்கியத்தில் உரைகள் - வைணவ உரைகளின் சிறப்பு - வைணவ உரைச்சிற்பிகள் - அமலனாதிபிரானுக்கு அமைந்த உரைகள் - பெரிய வாச்சான் பிள்ளையின் உரை - அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் உரை - வேதாந்த தேசிகரின் உரை - தொகுப்புரை.

## அமலனாதிபிரானுக்கு அமைந்த உரைகள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பாடல்களுக்குத் தனிச் சிறப்பு இருந்தபோதிலும் அப்பாடல்களின் உரைகள் உரை இயற்றிய ஆசாரியர்களின் உள்ளக்கிடக்கையும், அனுபவத்தையும் அறிய வழிவகுக்கும். அந்த வகையில் இந்த இயலில் தமிழ் இலக்கியத்தில் உரைகளின் வளர்ச்சியும், வைணவ உரைகளின் சிறப்பும், குறிப்பாக அமலனாதிபிரானுக்கு அமைந்த உரைகள் பற்றியும் ஆயப்படுகின்றன.

## 2.0 தமிழ் இலக்கியத்தில் உரைகள்

தமிழ் மொழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இலக்கிய வளர்ச்சி பெற்று வருகிறது. தொன்மை வாய்ந்த தொல்காப்பியத்தில் ''தமிழ்'' என்ற சொல் முதல் முதலில் ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்தமிழ் கூறு நல்லுலகத்து'' எனச் சிறப்புப் பாயிரத்தில் வழங்கப்பட்டுள்ளது.[1] இத்தகைய சிறப்பும் புகழும் வாய்ந்த தமிழ், மனிதனின் வாழ்க்கையை ஒழுங்குப்படுத்த சமய நூல்களையும், நீதி நூல்களையும், காப்பியங்களையும், வேறுபல இலக்கியங்களையும் படைத்துத் தந்துள்ளது. இவற்றில் முதல் பெருங்காப் பியமாக கருதப்படும் சிலப்பதிகாரத்தில் மனிதனின் வாழ்க்கைக்குத் தக்க அடிப்படையான அறம் பிறழாத் தன்மையை ''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்'' என்ற தொடரின் மூலமாகவும் கற்புடை மையை ''உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்'' என்ற வரிகளின் மூலமாகவும் விளக்கம் பெற்றுள்ளன.[2] தமிழ் நூலான திருக்குறள் வாழ்க்கைக்குத் தேவையான அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று உறுதிப் பொருள்களைப் பற்றி உணர்த்தும் நூலாகும். இதற்குப் பதின்மர் உரை எழுதியுள்ளனர். அவர்களுள் பரிமே லழகர் என்னும் வைணவப் பெரியோரின் உரை சிறப் பாகப் போற்றுதலுக்கு உரியன.[3] சிறப்புமிக்க இந்நூல் கள் தொடக்கக் காலத்தில் உரையின்றி மூல நூல்களாகவே இருந்தன. இம்மூலநூல்களை ஒரு சிலர் மட்டுமே அறிந்த வண்ணமாக இருந்தனர். மேலும், கற்றறிந்த சிலரே அந்நூல்களை பெரும்பாலும் செவி வழியாகக் கற்கும் வாய்ப்பும் பெற்றனர். அவையாவும் மிகப்

பிற்காலத்திலேயே, அச்சு இயந்திரம் வந்த பிறகே, எல்லோருக்கும் கிட்டும்படியான உரை நூல்வடிவம் பெற்றன. சிலப்பதிகாரம் ''உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்'' என்று போற்றப்படுவதால் உரை நடையின் செல்வாக்கை உணர முடிகிறது. இவ்வாறு எழுந்த உரை நூல்களில் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் எழுந்த ''களவியல்'' என்னும் நூலுக்கு நக்கீரர் எழுதிய உரையே மிகப் பழமையானது என்பர்.[4] இவ்வாறாக உரைகள் வளர்ச்சி பெற்று, பக்தி இலக்கியத்திற்கும் உரை எழுத முற்பட்டனர் தமிழ் அறிஞர்கள்.

## 2.1 வைணவ உரைச்சிற்பிகளும் உரைகளின் சிறப்பும்

ஆழ்வார்களின் பாடல்களான நாலாயிரத்திவ்வியப் பிரபந்த உரைகள் பக்தி இலக்கியத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. இச்சிறப்பு ஆழ்வார்களின் பாடல்களை வளர்த்த நாதமுனிகள் தொடக்கமான ஆசாரியர்களையே சாரும். இந்த ஆசாரிய மரபு ஸ்ரீமந் நாராயணனாகிய பரம்பொருளை முதலாகக் கொண்டு பெரிய பிராட்டியார், சேனை முதலியார், நம்மாழ்வார், நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, உடையவர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்கு திருவீதிப் பிள்ளை, திருவாய்மொழிப்பிள்ளை, மற்றும் மணவாள மாமுனிகள் ஈறாக அமைந்துள்ளது.[5]

கி.பி.12 ஆம் நூற்றாண்டில் வைணவ ஆசாரியர்களில் தலைவரான இராமானுசர் ஆணையின்படி முதல்

முதலில் திருவாய்மொழிக்கு எழுத்துவடிவில் உரை வரையலாயிற்று. அதற்கு முன் பாடல்களுக்கு விளக்கங் களைப் பலருக்குச் சொல்லாமல் ''ஓர் ஆசிரியர் ஓர் மாணாக்கருக்குச் சொல்வது'' என்னும் ஓராண் வழி யடைவாகவே - வாய் வழி உரையாகவே சொல்லப் பட்டு வந்தன.[6] இதற்கு மாறாக ஆசாரியர் ஆளவந்தார் சிலரைக்கொண்டு திவ்விய பிரபந்த விளக்கங்கள் செய்துள்ள குறிப்பு காணப்படுகிறது.[7] எனினும், பாடப் பொருள்களைச் சிலருக்கே விரிந்துரைக்கும் நிலையே இருந்தது. இதனை மாற்றிய பெருமை இராமாநுசருக்கே சாரும். தனியுடைமையாக இருந்த திவ்வியப் பிரபந்தங் களுக்கு, குறிப்பாக நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு விளக்கங்கள் உரைகள் மூலமாக இராமாநுசரால்பொது வுடைமையாக்கப்பட்டன. இப்படிப் பொதுவுடைமை யாக்கப்பட்ட பிரபந்தங்களில் திருவாய் மொழியின் பொருளை எல்லோருக்கும் விளக்க வேண்டுமென்று பணித்தார்.[8] அதன் காரணமாக மிகச்சிறப்பு வாய்ந்த உரைகள் எழுத்துவடிவில் தோன்றலாயின.

இவ்வாறாக இராமாநுசர் திருக்குருகைப் பிரான் பிள்ளான் என்னும் ஆசாரியரைக் கொண்டு ஆளவந் தாரின் பாரிப்பை நிறைவேற்ற, திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி என்னும் வியாக்கியானத்தை எழுதச் சொன்னார். இந்த உரையே வைணவத்தின் முதல் உரையாகும்.[9] நஞ்சீயர், பெரியவாச்சான் பிள்ளை, வடக்கு திருவீதிப்பிள்ளை, அழகிய மணவாளச் சீயர் ஆகியோர் முறையே ஒன்பதினாயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி மற்றும் பன்னீ

ராயிரப்படி ஆகிய உரைகளைத் திருவாய் மொழிக்கு வழங்கியுள்ளனர்.[10] இதுமட்டுமின்றிப் பெரியவாச்சான் பிள்ளை நாலாயிரத்துக்கும் முழுமையான உரை வழங்கியுள்ளார். அதில் திருப்பாவைக்கு மூவாயிரப்படி என்ற எண்ணிக்கையில் உரை வழங்கியிருப்பது குறிப் பிடத்தக்கதாகும். திருவாய்மொழி நீங்கலாக மற்ற பிரபந்தங்களுக்கு அந்த எண்ணிக்கை இல்லை என்பது இங்கே நோக்கத்தக்கதாகும். இவ்வாறு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திக்கே பெரியவாச்சான் பிள்ளை உரை வழங்கியதனால் ஆழ்வாருடைய பாசுரங்கள் அருளிச்செயல் என்று பெயர் பெற்றதாக மணவாள மாமுனிகள்,

"பெரியவாச்சான் பிள்ளை பின்புள்ளவைக்கும்
தெரிய வியாக்கியைகள் செய்வால் - அரிய
அருளிச் செயற்பொருளை ஆரியர்கட்கிப்போது
அருளிச் செயலாய்த்தறிந்து.[11]

என்ற பாடல் மூலம் உணர்த்துகிறார். இதற்கு உரை யிட்ட சீயர் மிகவும் அரிதான பொருள்களை பெரிய வாச்சான் பிள்ளை தம்முடைய உரை மூலமாக நன்றாக அறிந்து, அந்த கருத்தை தமது அனுபவரூபமாகவும், பிறருக்கு உபதேசம் செய்வதின் மூலமாகவும் அருளிச் செய்தார் என்றும், இதுபற்றியே "அல்லாத ஆசாரியர் களைக் காட்டில் இதன்றோ இவருக்கு வைபவம்"[12] என்றும் உரைப்பர். இப்படியாக உரையாசிரியர்களின் மூலமாக வைணவத்தின் சிறப்புக் காணமுடிகிறது. இப்படிச்சிறப்பு வாய்ந்த உரைகளில், முதலாயிரத்தில் இடம்பெற்றுள்ள அமலனாதிபிரானுக்கு அமைந்த உரைகள் மிகச் சீர்மையுடையனவாகும்.

## 2.2 அமலனாதிபிரானுக்கு அமைந்த உரைகள்

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த "அமலனாதி பிரான்" என்னும் திவ்விய பிரபந்தத்துக்கு உரை வழங்கிய ஆசாரியர்கள் பெரியவாச்சான் பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் மற்றும் வேதாந்த தேசிகர் ஆகிய மூவர் ஆவர். பத்துப் பாசுரங்களைக் கொண்ட இப்பிரபந்தம் ஆசாரியர்களால் .வியாக்கியானம் செய்யப்பெற்ற பெருமையுள்ள ஒருசில பிர பந்தங்களில் ஒன்றாகத்திகழ்கிறது. இப்படி பெருமை பெற்ற இப்பிரபந்த வியாக்கியானம் ஆழ்வாரது சிறப்பையும், ஆழ்வார் அருளிய பிரபந்தத்தின் சிறப்பையும், பிரபந்தத்தின் உள்ளீடான அரங்களின் சிறப்பையும் தெளிவாக உள்ளபடி அறிவதற்கு உறுதுணையாக அமைகின்றது.

### 2.2.1 பெரியவாச்சான் பிள்ளையின் உரை

பெரியவாச்சான் பிள்ளை சோழ நாட்டில் திருவெள்ளியங்குடிக்கு அருகிலுள்ள சங்க நல்லூரில் வைணவ குடும்பத்தவர்களான யாமுநாசார்யருக்கும் நாச்சியாரம்மனுக்கும் திருக்குமாரராய் ஆவணி மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் கி.பி.1167 ஆம் ஆண்டு பிறந்தார்.[13] கண்ணன் பிறந்த நாளன்று இவர் பிறந்ததால் கிருஷ்ணன் என்ற பெயரைப் பெற்றோர்கள் வழங்கினர். நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்களுக்கு வியாக்கியானம் செய்த பெருமை இவர் ஒருவருக்கே உண்டு என்பது அறியற்பாலதாகும்.[14] மற்றும் பல ஸ்தோத்ர, இரகசிய, தனிச்லோகி நூல்களுக்கும் உரை வழங்கியுள்ளார்.

இவ்வாறாக உரை வழங்கிய இவ்வாசாரியர் அமலனாதி பிரானுக்கும் உரை வழங்கி அதன் சிறப்பை வெளிப் படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெரியவாச்சான் பிள்ளை அமலனாதிபிரானுக்கு எழுதிய உரையில் முதலில் அவதாரிகையைக் (தோற்றுவாய்) கூறுகின்றார். இவ்வவதாரிகையில் பிரபந்தத்தின் பெருமையையும், மற்ற பிரபந்தங்களைக் காட்டிலும் இப்பிரபந்தத்திற்கு உள்ள ஏற்றத்தையும், எம்பெருமானின் சிறப்பையும் கூறுகின்றார்.[15] பின்பு பாட்டுக்கு உரை வழங்கும்போது பாட்டின் ஒவ்வொரு பதத்திற்கும் விளக்கம் அளித்து, அவ்விளக்கங்களுக்கு ஏற்றவாறு மற்ற திவ்வியப் பிரபந்த மேற்கோள்களை யும், வடமொழி மேற்கோள்களையும் தேவையான இடத்தில் காட்டுகிறார். காலத்துக்கு ஏற்றவாறு இவர் உரையில் சமுதாய பழக்க வழக்கங்கள் இடம் பெற் றுள்ளன.[16] சமயக்கருத்துக்களான அர்த்த பஞ்சக விளக் கங்கள் இவர் உரையில் காணப்படுகின்றன.[17] இயற்கை வர்ணனைகள், அழகியல் கூறுகள் மிகுதியாகக் காணப் படுவது சிறப்பானதாகும். பொதுவாக இவரது உரை யானது விளக்கமான உரை எழுதுதல், நயமான சொற் களால் தொகுத்தல், இறுதியில் திரண்ட கருத்தைச் சொல்லுதல் எனப் பல உரை உத்திகளைக் கொண்டுள்ளது. இதன் விளக்கம் மூன்றாவது இயலில் விரிவாக விளக்கப் படுகிறது.[18] அமலனாதிபிரானுக்கு உரை வழங்கிய மற் றொரு உரையாசிரியர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆவார்.

## 2.2.2 அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின்

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருவரங்கத்தில் வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கும், ஸ்ரீரங்க நாச்சியாருக்கும் குமாரராக மார்கழி மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் கி.பி.1207 ஆம் ஆண்டு தோன்றினார்.[19] இவர் பிள்ளைலோகாசார்யரின் திருத்தம்பியாவார். இவர் இயற்றிய வியாக்கியானங்கள் ஆசார்ய இருதயம், திருப்பாவை ஆறாயிரப்படி, கண்ணிநுண் சிறுத்தாம்பு, அருளிச் செயல் இரகசியம் மற்றும் அமலனாதிபிரான் ஆகும்.[20] அமலனாதிபிரான் உரையில் முதலில் பிரபந்தத்தின் பெருமையைச் சொல்லி அவதாரிகை அமைத்து, அந்த அவதாரிகையின் சிறப்பை வெளிப்படுத்துகின்றார் நாயனார். மேலும், அவதாரிகையில் பிரபந்தத்திற்கு உள்ளீடான சிறப்பையும் மற்ற பிரபந்தங்களைக் காட்டிலும் இப்பிரபந்தத்திற்குள்ள மேன்மையையும் காட்டுகின்றார். முதலில் பாட்டுக்கு அவதாரிகை கூறி அந்த அவதாரிகையின் தொடர்களைக் கொண்டு முழுமையான கருத்தை விளக்குகிறார். பிறகு, பாட்டின் ஒவ்வொரு பதத்திற்கும் பல விளக்கங்களைக் கூறி, தேவையான இடங்களில் திவ்வியப்பிரபந்த மேற்கோள்களையும், வடமொழி மேற்கோள்களையும் கூறி, பிரபந்தத்தின் பெருமையை வெளிப்படுத்துகிறார். மேலும், சமயக் கருத்துக்களும், சமுதாயச் சூழ்நிலைகளும், அழகியல் கூறுகளும் இவர் உரையில் காணமுடிகிறது. இவர் ஒவ்வொரு பாட்டுக்கும் அவதாரிகை அமைத்து, அவ்வதாரிகையில் பாட்டின் முழுமையான விளக்கத்தைச்

சுருக்கிச்சொல்லி, பிறகு முன் பாட்டின் தொடர்ச்சியை இயைபு படுத்திக் காட்டுவது சிறப்பானதாகும். மேலும், இவரது உரையில் நயமான சொற்களைக்கொண்டு உரை நயத்தை செம்மைப்படுத்திக் காட்டுவது குறிப்பிடத் தக்கதாகும். இறுதியில் ஆழ்வாரின் முழுமையான எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளது இவரது தனித் தன்மையாகும்.[31] இவர் அருளிய முழுமையான உரைச்சிறப்பு அடுத்த இயலில் விவரிக்கப்படுகிறது.[32] அடுத்து, அமலனாதிபிரான் பிரபந்தத்திற்கு உரை எழுதியவர்களில் வேதாந்த தேசிகருமாவர்.

## 2.2.3 வேதாந்த தேசிகரின் உரை

வேதாந்த தேசிகர் காஞ்சியில் திருத்தண்காவில் அனந்தசூரிக்கும் தோதாரம்மைக்கும் குமாரராய் புரட்டாசி திருவோண நட்சத்திரத்தில் கி.பி.1269 ஆம் ஆண்டு பிறந்தார்.[33] இவர் வடமொழி, தென்மொழி கலந்த மணிப்பிரவாள நடையில் நூறு நூல்களுக்கும் மேலாக வழங்கியுள்ளார். திவ்வியப் பிரபந்தங்களில் அமலனாதிபிரானுக்கு ''முனிவாகன போகம்'' என்ற பெயர் அமைத்து உரை எழுதியுள்ளார். இவ்வுரை தத்துவ நோக்கில் அமைந்ததால் 32 இரகசிய கிரந்தங்களில் 28 வது இரகசிய கிரந்தமாக திகழ்கிறது.[34] முனிவாகன போக உரையில் மிக ஆழமான சமய உட்கருத்துக்களை காணமுடிகிறது. பெரும்பாலும் திருமந்திரம், துவயம், சரமச்லோகம் ஆகிய இரகசிய நூல்களின் கருத்துக்கள் அமைந்துள்ளன. இவருடைய உரை சுருக்கமாக இருந்த போதிலும், பல கருத்துக்களைத் தொகுத்து ஒருமுகப் படுத்தி உரை வழங்கியிருப்பது சிறப்பான ஒன்றாகும்.

சமயக்கருத்துக்களோடு அழகியலை சேர்த்து உரை அருளியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.[25] இவர் உரையில் முன் பின் பாட்டுக்களோடு தொடர்பு முழுமையாக இயைபுபடுத்தவில்லை. எம்பெருமானின் சிறப்பை உட்கருத்துக்களோடு நேர்முகமாக கூறுவது இவரது உரையின் சிறப்பை வெளிப்படுத்துவதாக உள்ளது. உரையின் கடைசியில் மற்ற திவ்விய தேசங்களோடு கூடிய எம்பெருமான்களின் அழகை ஆழ்வார் திருவரங் கனிடமே கண்டதாகக் கூறுவது அறியற்பாலதாகும்.[26] இவ்வாறாகத் தேசிகர் முனிவாகன போகத்திற்கு உரை வழங்கி சிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். உரையின் முழுமையான சிறப்பு அடுத்த இயலில் இயம்பப்படுகிறது.[27]

## தொகுப்புரை

1. தமிழ் இலக்கியத்தில் உரைகளின் முக்கியத்துவத்தின் மூலமாக பாடல்களின் சிறப்பு சிறந்து விளங்குவது ஆயப்பட்டுள்ளது.

2. வைணவ உரைச்சிற்பிகளாகத் திகழும் இராமானுசர் தொடக்கமான ஆசாரியர்கள் பரந்தநோக்கத்துடன் உரைகள் வழங்குவதற்கு காரணமாய் இருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது.

3. அமலானதிபிரானுக்கு அமைந்த மூன்று உரைகளின் சிறப்பு வெவ்வேறு வகையில் சிறந்து விளங்கி யுள்ளது காட்டப்பட்டுள்ளது. இதில் வேதாந்த தேசிகரின் உரை சமயநோக்கில் அமைந்துள்ளதை காட்டல் குறிப் பிடத்தக்கதாகும்.

# சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம், சிறப்புப் பாயிரம், 1-13
2. சிலப்பதிகாரம், பதிகம் 55-57
3. திருக்குறள் பரிமேலழகர் உரை, சிறப்புப்பாயிரம்
4. மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.183 (1973)
5. அண்ணா அப்பங்கார் ஸ்வாமி, திரிம்சத் ப்ரச்நோத்ரம், சென்னை ஸ்டாப் ஆப் இந்தியா அச்சுக்கூடம் ப.10 (1891)
6. நித்யாநுஸந்தானம் பிற்பகுதி, சென்னை ரத்தினம் அச்சகம் ப.19 (1964)
7. திரு. 4.3,8-36, திரு.6.7-36 நாச்சியார் திருமொழி 10,5
8. உபதேச ரத்தின மாலை பாடல்.37
9. உபதேச ரத்தின மாலை பாடல்.41
10. உபதேச ரத்தின மாலை பாடல்.39
11. மேலது.
12. உபதேசரத்தின மாலை பாடல். 46 உரை ப.100
13. எஸ்.கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார் (ப.ஆ) ஸ்ரீரங்கம் பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ஸபையின் பொன் விழா மலர், திருச்சி ப.241 (1978)
14. மேலது, ப.243
15. அமலன். பெ.பிள்ளை (அவ) ப.7-10
16. மேலது, ப.21
17. மேலது, ப.96
18. உரை உத்திகளும், உரைநயமும் இயல் - 3 ப.50-93

19. ஸ்ரீ.எஸ்.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ சபா, ஸ்ரீரங்கம், பொன் விழா மலர் ப.258, 296

20. மேலது, ப.258

21. அமலன். நாயனார் உரை ப.108

22. உரை உத்திகளும் உரைநயமும் இயல் - 3 ப.45-84

23. ஸ்ரீ.எஸ்.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ சபா, ஸ்ரீரங்கம் பொன்விழா மலர் ப.190, 296

24. மேலது, ப.190

25. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.134

26. மேலது. ப.136

27. உரை உத்திகளும் உரை நயமும் இயல்-3 ப.45-84

# இயல் - 3

# உரை உத்திகளும் உரை நயமும்

**உரை உத்திகள்**

அவதாரிகை வழங்கல் - பாட்டுக்கு முன் வழங்கும் அவதாரிகைகள் - முன்பாட்டோடு இயைபுபடுத்தி அவதாரிகை வழங்கல் - தொடர்ச்சியான எண்ணங்களை இயைபுபடுத்தி அவதாரிகை வழங்கல் - திவ்வியப்பிரபந்த பாட்டோடு ஒப்புநோக்கல் - அடைமொழிக்குச் சிறப்பான பொருள் கூறுதல் - விளக்கவுரை தருதல் - வினாத்தொடரமைப்பு - ஆழ்வாரின் உகப்பை வெளிப்படுத்துதல் - புதிய முறையில் சொற்போக்கு அமைத்தல் - சமய நோக்கில் ஆழ்வாரின் எண்ணத்தைக்காட்டல் - உரைக்கு உரை அளித்தல் - முன்பின் தொடர்களைக்கொண்டு விளக்குதல் - வினா எழுப்பி விடையளித்தல் - எதிர்மறைப்பொருள் உரைத்தல் - திவ்வியப் பிரபந்த மேற்கோள் காட்டுதல் - வடமொழி மேற்கோள் காட்டுதல் - இராமாயணத்தை இணைத்து உரை கூறுதல் - முன்னோர்கள் மொழிந்த பொருளாட்சியைக் காட்டுதல் - வேதாந்த நெறியில் பொருள் உரைத்தல் - **உரைநயம்** உவமை காட்டுதல் -

உணர்ச்சி தோன்ற விளக்கம் தருதல் - கற்பனையோடு உரை வகுத்தல் - வரலாற்றுச்சிறப்பு - உரைகள் காட்டும் சமுதாய நிலை - அருந்தமிழ்ச் சொற்கள் - அரங்கனாய் வந்ததின் சிறப்பு - பிரபந்தத்தில் எம்பெருமானுக்குப் பல்வேறு திருநாமங்கள் சூட்டுதல் - தொகுப்புரை.

## உரை உத்திகளும், உரை நயமும்

ஒரு பிரபந்தத்தில் அமைந்த சொற்களுக்கு உட்பொருள் அறிய வேண்டிய அவசியம் உள்ளது. அப்போதுதான் அந்தப்பிரபந்தம் அருளிய ஆழ்வாரின் முழுமையான உணர்வுகளையும் அனுபவங்களையும் அறியமுடியும். அந்த வகையில் அலகு அலகாகச் சொற் களைப் பிரித்துப் பொருள் வழங்குவர் உரையாசிரியர் கள். இவ்வாறு உரை வழங்கும்போது பல்வேறு உத்திகளைக் கையாண்டு பல கோணங்களில் அந்தப் பிரபந்தத்தின் பெருமையைப் படிப்போர் நலம் கருதி உரைப்பர். இந்த நெறியைப் பின்பற்றியே தமிழ் இலக்கிய நூல்களுக்கு, குறிப்பாக வைணவ இலக்கியத்திற்கு உரைகள் வந்துள்ளன. அவ்வாறே அமலனாதிபிரானுக்கு எழுந்த உரைகளில் அமைந்த பலவகைப்பட்ட உத்தி களையும் நயமான உரைகளையும் கொண்டு அப்பிர பந்தத்தின் பெருமையை அறியலாம்.

இந்த அடிப்படையில் இந்த இயலில் அவதாரிகை வழங்கல், பாட்டுக்கு முன் வழங்கும் அவதாரிகைகள், முன்பாட்டோடு இயைபுபடுத்தி அவதாரிகை வழங்கல், தொடர்ச்சியான எண்ணங்களை இயைபுபடுத்தி அவ தாரிகை வழங்கல், திவ்வியப் பிரபந்த பாட்டோடு

ஒப்புநோக்கல், அடைமொழிக்குச் சிறப்பான பொருள் கூறுதல், விளக்கவுரை தருதல், வினாத்தொடரமைப்பு, ஆழ்வாரின் உகப்பு, ஆழ்வாரின் எண்ணங்கள், புதிய முறையில் சொற்போக்கு அமைத்தல் சமய நோக்கில் உரை வகுத்தல், உரைக்கு உரை அளித்தல், முன்பின் தொடர்களைக்கொண்டு விளக்குதல், வினா எழுப்பி விடையளித்தல், எதிர்மறைப்பொருள் உரைத்தல், திவ்வியப் பிரபந்த மேற்கொள்களைக் காட்டுதல், வடமொழி மேற்கொள் காட்டுதல், இராமாயணத்தை இணைத்து உரை கூறுதல், முன்னோர்கள் மொழிந்த பொருளாட்சியைச் கூட்டி உரை வகுத்தல், வேதாந்த நெறியில் பொருள் உரைத்தல்; உரைநயம் - உவமை காட்டுதல், உணர்ச்சி தோன்ற விளக்கம் தருதல், கற்பனையோடு உரை வகுத்தல், வரலாற்று சிறப்பு, உரைகள் காட்டும் சமுதாய நிலை, மக்களின் வாழ்க்கை நிலை, அறச்சாலைகள், தொழில்கள், வாணிபம், நீதிமுறை, அரங்கனாய் வந்ததின் சிறப்பு, அருந்தமிழ்ச் சொற்கள், எம்பெருமானுக்குப் பல்வேறு திருநாமங்கள் சூட்டுதல் என்ற வகைப்பாட்டில் மூன்று உரையாசிரியர் களின் உரைகளில் கையாண்ட உத்திகளையும் நயத்தையும் கொண்டு ஆழ்வார் எவ்வெவ்வாறெல்லாம் அனுபவித்தார் என்பது அறியமுடிகிறது.

## 3.0 உரை உத்திகள்

### 3.1 அவதாரிகை வழங்கல்

உரைக்கு முன் வழங்கப்படும் ''அவதாரிகை'' அல்லது ''பிரவேசம்'' உரை அவதாரிகை எனப்படு கிறது. இந்த அவதாரிகையின் மூலம் பிரபந்தத்தின்

முழுமையான சிறப்பு தொகுத்துச் சொல்லப்படுகிறது. அந்த வகையில் இப்பிரபந்தத்திற்கு மூன்று உரையாசிரியர்கள் தனித்தனியாக அவதாரிகைகள் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெரியவாச்சான்பிள்ளை வழங்கிய அவதாரிகையில் பிரபந்தத்தின் சிறப்பு (பிரபந்த வைலக்ஷண்யம்) பிரபந்தம் அருளிய ஆழ்வாரின் சிறப்பு (வக்த்ரு வைலக்ஷண்யம்), பிரபந்தத்திற்கு உள்ளீடான திருவரங்கத்து எம்பெருமானின் சிறப்பு (ப்ரதிபாத்ய வைலக்ஷண்யம்) என்ற மூன்று விதமான தன்மைகளில் அவதாரிகை அமைந்துள்ளது அறியற்பாலதாகும்.[1]

அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் உரை அவதாரிகையாவது விரிவாக அமைந்ததாகும். மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் திருப்பாணாழ்வாருக்கு உள்ள பெருமையைச்சொல்லி, அவர் பெரிய பெருமாள் மேல் கொண்டுள்ள ஆராத காதலை வெளிப்படுத்துவதையும் சொல்லுவதாகும். மேலும், இப்பிரபந்தம் அர்த்தபஞ்சக[2] அடிப்படையில் அமைந்திருப்பதை சுருக்கமாக அவதாரிகையில் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.[3]

வேதாந்த தேசிகர் அமைத்த உரையான முனிவாகன போகத்தில், அவதாரிகையாவது மற்ற பிரபந்தங்களுக்குள்ள தன்மைகளான - பரந்திருத்தல், புரிந்து கொள்ளாததாக இருத்தல், ஆழ்ந்த பொருளை அறியாததாய் இருத்தல், சந்தேகத்தை உண்டுபண்ணுவதாக இருத்தல், தூதுமொழிதல், பிரிவில் வருத்தத்தை உண்டு பண்ணுவதாக இருத்தல் பரோபதேசம் பண்ணுதல்,

பிறமதங்களைக் கண்டித்தல் போன்ற குற்றங்கள் ஒன்று மில்லாமல் எம்பெருமானையே அனுபவிப்பதால் உண் டான சுவை மிகுதியாக இருக்கை. மேலும், வைணவத் திற்குரிய இரகசியங்களில் திருமந்திரம், துவயம், ஆகிய வற்றின் கருத்துக்களை உள்ளடக்கமாகக் கொண்டது என்றும் உரை அவதாரிகையில் தெரிவிப்பர் தேசிகர்.[4]

## 3.1.1 பாட்டுக்கு முன் வழங்கும் அவதாரிகைகள்

உரையாசிரியர்கள் ஒவ்வொரு பாட்டுக்கு முன் அவதாரிகை இடுவர். அந்த அவதாரிகையில் பாட்டின் முழுமையான கருத்து விளக்கப்படுவது காண முடி கிறது. எடுத்துக்காட்டாக ''அமலனாதிபிரான்'' என்ற முதல் பாட்டின் அவதாரிகையில் பெரிய பெருமாள் திருவடிகளின் அழகு ஆழ்வார் மேல் விழுந்து அடிமை கொண்டதாகக் கூறி அப்பாட்டின் முக்கியத்துவத்தை அவதாரிகையில் குறிப்பிடுகிறார்.[5] இவ்வாறே நாய னாரும் ஒவ்வொரு பாட்டுக்கும் முன்னர் அவதாரிகை யிட்டு சிறப்பித்துள்ளார். இவர் அவதாரிகையில் பாட்டின் முழுமையான கருத்தை விளக்கிச்சொல்லி அதற்கு ஏற்றவாறு வடமொழி மேற்கொள்களும் திரா விட மேற்கொள்களும், தேவையான இடத்தில் கொடுத்து விரிவான கருத்தைத் தெளிவுபடுத்துவது நோக்கத்தக்க தாகும்.

எடுத்துக்காட்டாக, நாயனார் 'துண்ட வெண் பிறையன்' என்ற பாட்டின் அவதாரிகையில் பட்டர் அருளிய ஸ்ரீ ரங்கராஜஸ்தவ ச்லோகம் மூலம் எம் பெருமானின் திருக்கழுத்தை ஒப்பிடுதல் காணமுடி

கிறது. அதாவது இளம்பாக்குமரக் கழுத்துப்போலே பசுகுபசுகென்றிருப்பதாய் மூன்று ரேகைகளை உடையதாய், இரண்டு பக்கமும் நெருங்கி நடுவே பெருத்திருக்கையாலும் மொசுகு மொசுகென்றிருக்கிற ஒலியை உடைத்தாயிருக்கையாலும் ஸ்ரீபாஞ்சஜந்யம் போலே இருக்கிற திருக்கழுத்து என்று ஒப்பிடுகை.[6] இவ்வாறே ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் "கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ"[7] என்று எம்பெருமான் செய்யவாய்க்கு ஒப்பிடுவதைக் காணமுடிகிறது.

தேசிகர், பாட்டுக்கு முன் சமயநோக்கில் அவதாரிகை வழங்கியிருப்பதைக் காணலாம். அந்த வகையில் "அமலனாதிபிரான்" என்று தொடங்கும் பாட்டு அவதாரிகையில் ஆழ்வாரின் மொழிகள் வேதத்தன்மை கொண்டுள்ளது என்று திருமந்திரத்திலும் துவயத்திலும் மோட்சத்திற்கு இச்சை உடையவர்களான முமுட்சுக்களுக்கு அர்த்தங்களை விளக்குவதாகும் என்று கூறியுள்ளார்.[8]

## 3.1.2 முன்பாட்டோடு இயைபுபடுத்தி அவதாரிகை வழங்கல்

இப்பிரபந்தத்தில் உரையாசிரியர்கள் முன்பாட்டோடு இயைபுபடுத்தி அவதாரிகை வழங்கியிருப்பது காணத்தக்கதாகும். அந்த வகையில் "உவந்த உள்ளத்தனாய் உலகமளந்து அண்டமுற..." என்ற பாடலுக்கு உரை அவதாரிகை வழங்கிய உரையாசிரியர்கள் முன்பாட்டோடு இயைபு படுத்தியுள்ளனர். அதாவது

கீழ்ப்பாட்டில் ''அரங்கத்தம்மான் திருக்கமல பாதம் வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றதே'' என்று எம் பெருமான் திருவடிகள் தானே தம்மை ஆட்கொண்ட தாகவும், அதனால் ஆழ்வார் திருவுள்ளம் பிரகாசித்த படியைச் சொன்னபடி. ஆனால் இப்பாட்டில் ஆழ்வார் மனதானது திருவடிகளில் இருந்து திருப்பீதாம்பரத்தின் மேல் செல்ல நசை பண்ணியதைச் சொன்னபடி. இவ்வாறாக முன்பாட்டை பின்பாட்டோடு இயைபு படுத்தி ஆழ்வாரின் அளவற்ற அனுபவத்தை நமக்கு உரைக்கின்றனர் உரையாசிரியர்கள்.[9]

## 3.1.3 தொடர்ச்சியான எண்ணங்களை இயைபுபடுத்தி அவதாரிகை வழங்கல்

ஆழ்வாரின் தொடர்ச்சியான எண்ணங்களை ஒருமைப் படுத்தி அவதாரிகை வழங்கல் சிறப்பான தாகும். அந்த வகையில் இப்பிரபந்தத்தில் நாயனார் ஆழ்வாரின் எண்ணங்களை இயைபுபடுத்தி அவதாரிகை யில் முதலில் எம்பெருமான் திருவடிகள் ஆழ்வார் உள்ளத்தே பிரகாசிக்கச் செய்து ஆட்கொண்டன என்றும், அந்தத்திருவடிகளுக்கு மேலான திருப்பீதாம்பரமும், திருவரையுமான சேர்த்தியை மடிபிடித்து அனுபவித்தார் என்றும், இப்படி மற்ற உறுப்புக்களும் ஆழ்வாரும் அனு பவிக்கும்படித் தங்களை உண்டாக்கின திருநாபீ கமலத்தை அனுபவித்தார் என்றும், மேன்மைக்கும் சௌலப்யத்திற்கும் பட்டங்கட்டியிருக்கிறபடி இருக் கும் திருவுதரபந்தனத்தை அனுபவித்தார் என்றும், அதற்கும் மேலே ஆபரணங்களோடு கூட பெரிய பிராட்டியார்க்கு கோயிற் கட்டணமாய் இருக்கின்ற

திருமார்பை அனுபவித்தார் என்றும், இயற்கையான அழகைக்கொண்ட திருவதரத்தை அனுபவித்தார் என்றும், இப்படி அவயவங்களை அனுபவிக்கும்போது இடையில் திவ்யாயுதங்களும் இறாய்ஞ்சிக் கொள்ள அவற்றையும் அனுபவித்தார். மேலும், குளிர்ந்த நோக்கை உடைத்தான திருக்கண்களை அனுபவித்தார். இந்த அவயவங்களோடுண்டான சேர்த்தியால் வந்த அழகையும், இயற்கையான அழகையுமுடைத்தான திருமேனியையும் பசுங்கூட்டான சமுதாய தோற்றப்பொலிவுடன் அனுபவித்தார் என்று ஆழ்வாரின் தொடர்ச்சியான எண்ணங்களை இயைபுபடுத்தி அவதாரிகை வழங்குதல் சிறப்புமிக்கதாகும்.[10]

தேசிகரும் ''பரியனாகிவந்த அவுணனுடல் கீண்ட'' என்ற பாடலின் உரை அவதாரிகையில் ''திருவடிகளிலே விழப்பண்ணி மேன்மேலே அனுபவத்தை உண்டாக்கினபடியை அனுபவிக்கிறார்'' என்று தொடர்ச்சியான எண்ணங்களை காட்டுவது அறியமுடிகிறது.[11]

## 3.1.4 திவ்வியப் பிரபந்த பாட்டோடு ஒப்பு நோக்கல்

பெரியவாச்சான் பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆகியோர் இப்பிரபந்தத்தில் ''அமலனாதிபிரான்'' என்ற பாட்டை நம்மாழ்வாரின் திருவாய்மொழி பாட்டோடு ஒப்பு நோக்குவதைக் காண முடிகிறது. நம்மாழ்வார் திருவாய்மொழி தொடங்கும் போது ''உயர்வற உயர் நலம் உடையவன்''[12] என்று பாசுரமிடுகிறார். அதாவது மற்ற எல்லா உயர்த்திகளைக்

காட்டிலும் உயர்ந்த கல்யாண குணங்களையுடையவன் எம்பெருமான் என்றபடி. இது தன்னையே திருப் பாணாழ்வார் ''அமலன்'' என்ற சொல்லாலே குறிப் பிடுகிறார். அதாவது, குற்றங்களுக்கு எதிர் தட்டானவன் என்றும், தூய்மையானவன் என்றும், தான் ஒருவன் தூயனாவது மட்டுமின்றித் தன்னோடு உறவுடையாரை யும் தூய்மையாக்கவல்ல திருவடியையுடையவன் என்றும் உரைப்பர் உரையாசிரியர்கள்.[13] மேலும், அறிவற்ற பொருளால் வரும் பரிணாமம், அவற்றின் தொடர்ச்சியால் வரும் ஆன்மாவிற்குரிய அறிவின்மை யால் வரும் துக்கங்கள், அந்த ஆத்மா முக்திபெற்று அதனால் வரும் பிறவியின் அறியாமையின் குறைவு, முக்திப்பேற்றினால் வரும் மலர்ச்சி - இவ்வாறு அல்லாமல் நித்தியர்களாகத் திகழும் நித்யசூரிகளுக்கு இயல்பாக இருக்கின்ற இட்டவழக்காம் தன்மை (பாரதந்திரியம்) - இவையாகிய மூவர்க்கும் உரிய குற்றங்களுக்கு எம்பெருமான் எதிர் தட்டானவன் என்று விரிவாக கூறுகிறார் நாயனார்.[14]

மேலும், ''யவன்'' என்று திருவாய்மொழியில் குறிப்பிட்டதை, ஆழ்வார் ''ஆதி'' என்று குறிப்பிடு கிறார்; ''யவன்'' என்ற சொல் பிரசித்தியைக் காட்டு கிறது. அத்தகைய பிரசித்தியைத்தான் ''ஆதி'' என்று குறிப்பிடுகின்றார் ஆழ்வார். இச்சொல்லுக்கு ''உலகுக்கு காரணமாம் தன்மை'' (ஜகத்காரணத்தவம்) என்று உரையிடுவர் பெரியவாச்சான் பிள்ளை.[15] அவ்வாறே நாயனார், எம்பெருமானை அனுபவித்தால் வேறொன் றில் போகமாட்டாதபடியாயிருக்கும் என்றும், ஆழ்வா

ருடைய தாழ்ச்சியைப் போக்கி, தன்பக்கலிலே சேர்த்துக் கொள்கையாலே, ஆழ்வார் பேற்றுக்கு எம்பெருமான் முற்பட்டவன் என்றும், முதலில் அழிந்த உலகை உண்டாக்கினாப் போலே ஆழ்வார் தாம் அழித்துக் கொண்ட சொரூபத்தை உண்டாக்கினான் எம்பெருமான் என்றும், பலபடியாகப் பொருள் உரைப்பர்.[16] இதனால் நம்மாழ்வார் கூறிய "யவன்" என்ற சொல் அடிப்படையில் உள்ள பொருள்களை விரித்துச் சொன்னபடி; நம்மாழ்வாருக்கு அறியாமையைப் போக்கி மதியாகிய ஞானத்தையும் நலமாகிய பக்தியையும் எம்பெருமான் அருளினான் என்பதை "மயர்வற மதிநலம் அருளினன்" என்ற தொடரால் குறிப்பிடுகிறார். இது தன்னையே திருப்பாணாழ்வார் "பிரான்" என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். "பிரான்" என்பதினால் ஆழ்வார் தாழ்ச்சியைப் பாராதே எம்பெருமான் ஆழ்வாரைத் தனக்கு இலக்காக்கிக்கொண்ட உதவியாளனைச் சொன்னபடி.[17]

### 3.1.5 அடைமொழிக்குச் சிறப்பான பொருள் கூறுதல்

இப்பிரபந்தத்தில் ஆழ்வார் பாடிய அடைமொழியோடு கூடிய சொல்லுக்கு விரித்துச் சிறப்பான பொருள் வழங்குவது பல இடங்களில் காண முடிகிறது. இந்த உத்தியை மூன்று உரையாசிரியர்களும் கையாண்டுள்ளது போற்றத்தக்கதாகும் எடுத்துக்காட்டாக, "அமலனாதிபிரான் அடியார்க்கு என்னையாட்படுத்த விமலன்" என்ற பாடலில் "நீதி வானவன்" என்று திருநாமம் இடுகிறார். "வானவன்" என்றே சொல்லியிருக்கலாம். இதற்கு நித்ய விபூதியில் உள்ளவன் என்று பொருள். அப்படிப்பட்ட நித்ய விபூதியில் உள்ளவனை

''நீதி வானவன்'' என்கிறார் ஆழ்வார். இவ்விடத்தில் வானவனுடைய நீதியாவது ஆண்டவன் - அடியவன் என்ற உறவாம் தன்மை (சேஷ சேஷித்துவங்கள்) முறை மாறாது இருத்தல் என்று உரைப்பர் பெரியவாச்சான் பிள்ளை.[18] அதாவது ''சேஷித்வம்'' என்பது தலைவனாம் தன்மை. இவற்றில் வானவர்களுக்கு சேஷத்வமும் அவர்களை ஆள்கின்ற எம்பெருமானுக்கு சேஷித்வம் உள்ளபடியைச் சொல்லுவதற்காக இந்த அடை மொழியை மேலும் விரித்துச் சொல்லும் வகையில் உரையாசிரியர் சிறப்பாகப் பொருள் கூறுவர். அதாவது ''ஈச்வரன் நான்'' என்று எதிரிட்டு இருக்கும் இடம் இந்த உலகம்; ஆனால், நித்ய விபூதியான வானுலகில் கலக்கு வாறுமில்லை. கலங்குவாறுமில்லை; இந்த பூமியில் கலக்குவாறுமுண்டு கலங்குவாறுமுண்டு என்றவாறு.[19] ''நீதிவானவன்'' என்பதிலுள்ள ''வான்'' என்கிற சொல் சூரிகளோடு கூடிய பரமபதத்தைச் சொல்லுகிறது என்பர் தேசிகர். நீதிக்கு எல்லையான பரமபதத்தின் சிறப்பைக் கூறுவது குறிப்பிடத் தக்கதாகும்.[20] முறை கெடாமல் நடக்கும் நித்ய விபூதி வாசனை என்கிறார் நாயனார்[21]. இவ்வாறாக அடைமொழிக்குச் சிறப்பான பொருள் உரைத்தல் காணலாகிறது.

## 3.1.6 விளக்கவுரை தருதல்

ஆழ்வாருடைய உள்ளத்தை வெளிக்காட்டும் வகையில் நாயனார் பல பாடல்களில் விளக்கமான உரை வழங்கியுள்ளார். இதன் மூலம் ஆழ்வாரின் அளவிடற் கறிய பக்தி வெளிப்படுகிறது. அந்த வகையில் ஆழ் வாருக்கு முன்பிருந்த வினைகளையெல்லாம் எம்பெரு

மான் தன்னுடைய இயற்கை இன்னருளாலே போக்கி னான். அப்படிப்பட்ட வினைகளை "பழவினை" என்ற சொல்லால் குறிப்பிடுகிறார் ஆழ்வார். அந்தப் பழவினைகளும் ஒரு சுமையாக இருந்ததைக் காட்டும் வகையில் "பாரமாய" என்ற சொல்லைச் சேர்த்து "பாரமாய பழவினை" என்று பாசுரமிடுகிறார். இந்த இடத்தில் நாயனார் ஆழ்வாரின் உள்ளத்தின் உணர்வை வெளிக்கொணரும் வகையில் சுமையாக அந்த பாப மானது சேர்ந்ததைக் காட்டுகிறார். அதாவது ஒருவன் செய்த கர்மத்தினால் பாபமானது மிகுதியாகிறது; அதன் வகையைச் சொல்ல முடியாது; இறைவனால் தான் அப்பாபத்தைப் போக்க முடியும். இறைவன் அப்பாபத் தைப் போக்கும்போது தனித்தனியே போக்குவதில்லை; மொத்தமாகவே போக்கக் கூடிய சர்வசக்தியையுடைய வன் என்பர். மேல்காணும் இப்படிப்பட்ட பாபங்கள் பல வகையால் சுமையாகச் சேரும். அவையாவன தேவர், மனிதர், விலங்கு, தாவரம் ஆகிய நான்கு வகைப் பிரிவுகளின் உடலுக்குள் நுழைவதற்கு காரணமாக உள்ள பாபங்கள். எடுத்துக்காட்டாக, உடலிலே பிறக்கிற ருசிக்குக் காரணமாக உள்ள பாபங்கள்; அந்த ருசியின் மூலமாக ஒரு விஷயத்தின் ஆசைக்கு காரணமாக உள்ள பாபங்கள்; வேறு தெய்வங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அறிவுக்குக் காரணமாக உள்ள பாபங்கள்; இறைவனைப் பற்றி வேறு பயன்களைக்கொண்டு அகலுகைக்குக் காரணமாக உள்ள பாபங்கள் என்று இவ்வாறு ஒரு சுமையாக பாபம் சேருவதையே "பாரமாய பழவினை" என்ற தொடருக்குச்சேர நாயனார் விளக்க மாக கூறுவர்.[33]

### 3.1.7 வினாத் தொடரமைப்பு

எம்பெருமானிடத்தில் வள்ளல் தன்மை (ஔதார்யம்) வாயழகு, சீலகுணம் (சௌசீல்யம்) மேன்மைத் தன்மை, எளிவந்ததன்மை, இனிமை, ஆராது அனுபவிக்கும் படி இருக்கை - இவையெல்லாம் வெளிப்படும் படியாக இருக்கின்றன. இவற்றைவிட்டு ஆழ்வாருடைய கண்கள் வெளிவிஷயங்களைக் காணவேண்டுமென்ற நிர்பந்தமில்லை. ஏனெனில் எக்குறையுமில்லாத திருவரங்கத்து இறைவனை நிறைவாக ஆழ்வார் கண்டதனால் உண்டான அனுபவத்தை ஆழ்வார் உள்ளத்தே எழுந்த வினாவின் மூலமாக வெளிப்படுத்துவர் உரையாசிரியர். எடுத்துக்காட்டாக, ''கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய் உண்டவாயன்'' என்ற பாடலில் ''அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'' என்ற தொடரால் ஆழ்வார் பெற்ற நிறைவுக்கு ஒரு குறையுமில்லை என்பதை எடுத்துக்காட்டும் வகையில்,

(1) ''கொண்டல் வண்ணன்'' என்ற சொல்லடிப்படையில் எம்பெருமான் மேகம் போல் வள்ளல் தன்மையுடையவன் என்பதை இவர் பக்கல் ஔதார்யம் இல்லையென்று போகவோ? என்றும்,

(2) ''வெண்ணெய் உண்டவாயன்'' என்ற சொல்லடிப் படையில் அடியார்களுடைய உடைமையான வெண்ணெயை விழுங்கியதனால் அந்தக்குளுங்கு நாற்றம் வாயிலே தோன்றும்படி இருப்பதினால் ''வடிவில் பசையில்லையென்று போகவோ?'' என்றும்.

(3) ''கோவலனாய்'' என்ற சொல்லடிப்படையில் இடையரோடு இடைச்சியரோடு வாசியற ஒரு

நீராகக் கலந்ததனால் "சௌசீல்யம்
இல்லையென்று போகவோ?" என்றும்.

(4) "என்னுள்ளம் கவர்ந்தானை" என்ற
சொல்லடிப்படையில் கோவலனாய் வெண்ணெய்
உண்டாப் போலே கொண்டல் வண்ணனாய்
ஆழ்வார் உள்ளத்தைக் கவர்ந்ததனால்
"நெஞ்சுக்கு பிடித்திருந்ததில்லையென்று
போகவோ?" என்றும்,

(5) "அண்டர்கோன்" என்ற சொல் அடிப்படையில்
வேறு அண்டத்திலுள்ள ஆத்ம சமூகத்திற்குத்
தலைவனாய் இருப்பதனால் "மேன்மையில்லையென்று
போகவோ?" என்றும்.

(6) "அணியரங்கன்" என்ற சொல்லடிப்படையில்
கண்ணாலே காணலாம்படி சம்சாரத்துக்கு
ஆபரணமான திருவரங்கத்தில் எம்பெருமான்
வந்து பள்ளிகொண்டதனால் "சௌலப்பியம்
(எளிவந்ததன்மை) இல்லையென்று போகவோ?"
என்றும்

(7) "என் அமுதினை" என்ற சொல்லடிப்படையில்
அளப்பரிய ஆரமுதாய் இருப்பதனால் இனிமை
(போக்யதை) இல்லையென்று போகவோ? என்றும்,

(8) "அமுதினைக் கண்ட கண்கள்" என்ற
சொல்லடிப்படையில் திருவரங்கத்து இறைவனை
முழுமையாக அனுபவித்த கண்கள்
ஆதலால் "அனுபவத்தில் குறையுண்டென்று
போகவோ?" என்றும்.

*இவ்வாறாக ஆழ்வாரின் உள்ளுணர்வை உரை மூலமாக நாயனார் அருளுவது சுவைமிக்கதாகும்.*[31]

## 3.1.8 ஆழ்வாரின் உகப்பை வெளிப்படுத்துதல்

உகப்பு என்பது தான் ஒருவனிடம் பெற்ற பயனைக் கண்டு மகிழ்வதாகும். அந்த வகையில் ஆழ்வார் எம்பெருமானது திருஅதரத்தை "செய்யவாய் ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே"[34] என்று அனுபவிக் கிறார். இதன் மூலம் ஆழ்வார் உகப்பு அடைந்தார் என்பது தெரிகிறது. அதாவது எம்பெருமானது சிவந்த திருப்பவளமானது ஆழ்வார் நெஞ்சைக் கொள்ளை கொண்டதாகும். எடுத்துக்காட்டாக, 'பெண்களின் பொய்ச் சிரிப்புக்கே துவண்டு போவர்களும், இச்சிரிப் பைக் கண்டால் பொறுக்க முடியுமோ' என்றும், எம் பெருமானது திருவதரமும் சிவப்பும் அனுபவிக்க முடி யாததாய் "ஐயோ" என்கிறார் என்று "மற்ற அவயவங் களின் அழகில் முன்பே என்நெஞ்சு பறிகொடுத்த என்னை மற்ற அவயவங்களைக் காட்டிலும் தனது திருப்பவள செவ்வாயைக் காட்டி "கல்லை நீராக்கி, நீரையும் தானே கொண்டது" என்றும் உகக்கின்றார் ஆழ்வார். இதையே 'கல்லை நீராக்கி நீரைத் தானே கொண்டதனால் வந்த உகப்பு' என்பர்.[35]

## 3.1.9 ஆழ்வாரின் எண்ணங்கள்

ஒவ்வொரு பாட்டின் மூலம் ஆழ்வாரின் மனத்தே நிகழும் எண்ணங்களை, இறைவன் மூலமாக அவர் பெற்ற இறையனுபவங்கள் வாயிலாக எடுத்து உரைப்பர் உரையாசிரியர்கள். "உவந்த உள்ளத்தனாய் உலகமளந்து அண்டமுற" என்பதின் மூலம் ஆழ்வாரின் எண்ணம் நமக்கு வெளிப்படுகின்றது.[36] இங்கே திரிவிக்ரம அவ

தாரத்தைக் காணமுடிகிறது. நாயனார் தமது உரையில் ''வசிஷ்ட சண்டாள விபாகம்'' 'ஸ்திரீ புருஷவிபாகம்'', 'க்ஞான சண்டாள விபாகம்'' என்றவற்றைப்பாராதே எல்லார்தலையிலும் ஒக்க திருவடிகள் வைத்தபடி என்று எம்பெருமானின் மேன்மைத்தன்மையை ஆழ் வாரின் எண்ணத்திற்கு ஏற்ப உரை வழங்கியிருப்பது சிறப்பானதாகும்.[27]

இவ்வாறே ''ஒர்வெங்கணைய்த்தவன் ஓத வண்ணன்'' என்ற இடத்தில் சக்ரவர்த்தி திருமகனான இராமன் இராவணவதம் பண்ணிய காட்சியின் சிறப்பை ஆழ்வார் எண்ணத்திற்கேற்ப உரைப்பது குறிப்பிடத்தக்க தாகும்.[28] மேலும், ஆழ்வார் ''அண்டர்கோன் அணி யரங்கன்''[29] என்று பாசுரமிடுகிறார். இங்கே பரமபத நாதனே திருவரங்கனாகப் பள்ளிக் கொண்டுள்ளான் என்கிறார். இக்கருத்தை தேசிகர் தனது உரையில் அண்டாதிபதியான பிரமன் முதலாக மற்றும் வேறு அண்டங்களில் இருப்பவர்களான தேவர் முதலானவர் களைத் தன் வசமாக்கி வைத்திருக்கிற தலைவனாம் தன்மையோடு கூடிய சுயேச்சை (சுவாதந்தர்யம்) முதலானவற்றை உடையவன் பரமபதநாதன் என்பதைக் காட்டுகின்றார். இவ்வாறே பரமபதத்திலுள்ள நித்ய சூரிகளும் தங்கள் இருக்கும் இடத்தைவிட்டு இங்கே வந்து (திருவரங்கத்தே) சேவிக்கும்படி பற்றிக்கொள் ளும் அழகையுடையவன் பள்ளி கொண்டுள்ள இடம் ஆழ்வாரை ஆட்கொண்டது என்று ஆழ்வாரின் எண் ணத்தை வெளிப்படுத்துவர்.[30]

## 3.1.10 புதிய முறையில் சொற்போக்கு அமைத்தல்

ஆழ்வாரின் பாடலுக்கு ஏற்ப உரையாசிரியர்கள் புதிய முறையில் சொற்போக்கு அமைத்து உரையிடுவர். எடுத்துக்காட்டாக "அண்டரண்டபகிரண்டத்து ஒரு மாநிலம் எழுமால்வரை முற்றும் உண்டகண்டம்."[31] என்ற தொடருக்கு - அண்டத்துக்கு உட்பட்ட சேதனர் களுடைய அண்டம் என்றும், வெளியில் உண்டான அண்டங்கள் என்றும், இவற்றைத் தாங்குகையால் உண்டான ஒப்பற்ற மகாபிருதிவி என்றும், மற்றும் இவ்வண்டங்களும் பூமியும் பாதாளத்தில் விழாதபடி சங்குஸ்தாபனம் பண்ணினாப்போலே இந்த பூமியை ஊடுருவி நிற்கிற ஏழுமலைகள் பூமிக்கு ஆணி அடித்தாற் போலே ஏழுபக்கங்களில் தாங்குகின்றன, என்றும் பொருள் உரைப்பர். மேலும், இந்த ஏழுமலைகளோடு சேர்ந்த உலகங்களை ஒன்று தவறாமல் ஆடிக்காற்றில் பூளை போலே பறந்து எம்பெருமான் திருவயிற்றிலே புகுந்ததாக புதிய முறையில் சொற்போக்கு அமைத்து உரைப்பது அறியற்பாலதாகும்.[32]

## 3.1.11 சமய நோக்கில் ஆழ்வார் எண்ணத்தைக் காட்டல்

ஆழ்வாரின் பாடலுக்கு உரை வழங்கும் ஆசாரி யர்கள் ஆழ்வார் உள்ளத்திற்கேற்ப சமயக்கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் உரை வழங்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக, இறைவனது இயல்பு, வடிவு, குணம், செல்வங்கள் ஆகியவற்றைப் பாடல் சொற் களுக்கு ஏற்ப வெளிப்படுத்தி உரை வழங்குவர். அந்த வகையில் 'அமலன்' - 'ஆதி' என்ற சொற்களுக்கு உரிய

பொருள்களை வழங்கின பிறகு, இறைநிலையில் எம் பெருமானுடைய குணங்களை வெளிப்படுத்துவதாக இரண்டு விதமான - குற்றங்களுக்கு எதிர் தட்டாய் இருக்கும் தன்மையும் (ஹேயப்ரத்யனீகத்வம்) கல்யாண குணயோகமும் சொல்லுகிறது என்று உரைப்பர் பெரிய வாச்சான்பிள்ளை.[33] அவ்வாறே இறைவன் எடுத்த அவ தாரங்கள் பற்றிய செய்தியையும் அந்தந்த பாடலுக்கு ஏற்பக்காட்டியுள்ளனர். வேதாந்ததேசிகர் தாம் அருளிய முனிவாகன போகத்தில் முதல் மூன்று பாடல்கள் அகார, உகார, மகாரமாகிய ''ஓம்'' என்ற பிரணவத்தின் பொருள் என்பதையும், நான்காவது பாடல் ''நம:'' என்பதின் பொருள் என்றும், ஐந்து ஆறாவது பாடல்கள் ''நாராயண'' என்ற சொல்லின் பொருள் என்றும், ஏழு எட்டு ஒன்பது பத்து ஆகிய நான்கு பாடல்கள் ''ஆய'' என்பதின் பொருள் என்றும், இவற்றை அனைத்தையும் கூட்டி ''ஓம் நமோ நாராயணாய'' என்ற திருமந்திரத்தின் பொருளாக அமலனாதிபிரான் அமைந்துள்ளது என்று விரிவாக உரை வழங்கியுள்ளார்.[34]

மேலும், தேசிகர், முதல் பாடலில் திருமந்திரத் தின் பொருளையும், துவயத்தின் பொருளையும், பாடல் சொற்களின் அடிப்படையில் ஒப்பிட்டுக் காட்டுவர். இத்தகைய சமயக் கருத்துக்கள் நான்காவது இயலில் விரிவாக ஆயப்படுகின்றன.[35]

## 3.1.12. உரைக்கு உரை அளித்தல்

ஆழ்வாரின் பாடலுக்கு உரை வழங்கிய ஆசாரியர் கள், அவர்கள் வழங்கிய உரைக்கு மேலும் உரை

வழங்கியுள்ளனர். அந்த வகையில் "பரியனாகிவந்த" என்ற பாடலில் "பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே" என்னும் தொடருக்கு உரை வழங்கிய ஆசாரியர்கள், முன்பாட்டான "கையினார் சுரிசங்கனலாழியர்" என்ற பாடலில் "என்னைச் சிந்தை கவர்ந்ததுவே" என்று அறிவு வளர்ச்சிக்கு இடமான வழியைக் கவர்ந்தபடியைச் சொல்லிற்று என்பர். அதாவது அறிவை அபகரித்தபடியைச் சொல்லுகிறது. "அறிவைக் கவர்தலாவது அழகிலே அலமருகை" என்று உரைக்கு உரை அளித்தலை காண முடிகிறது.[38]

### 3.1.13 முன்பின் தொடர்களைக் கொண்டு விளக்குதல்

ஆழ்வாரின் உள்ளக்கிடக்கை சிறப்பாக வெளிப் படுத்தும் வகையில் உரையாசிரியர்கள், ஆழ்வாரின் சொற்களோடு முன் சொன்ன சொல்லையே பின்னே கூட்டி, இயைபுபடுத்தி இடத்திற்கு ஏற்ப உரை வழங்கிச் செம்மைபடுத்துவர். அந்த வகையில் திருப்பாணாழ் வாருக்குக் காட்டின திருப்பாதமானது பரமபதநாத னுடையது என்பதை வெளிப்படுத்துவதற்காக "நீதி வானவன் கமலபாதம் - என் கண்ணினுள்ளன" என்று முன்பின் சொற்களைத் தொடர்புபடுத்தி, எப்போதும் தரிசனம் பண்ணுபவர்களான நித்யசூரிகள் கண்களுக்கு இலக்காக்கினாப்போலே, ஆழ்வார் கண்ணுக்கு இலக் காகி நிற்கின்றான் என்றும், உள்ள நாளெல்லாம் விரோ தம் பாராட்டி வந்தான் என்றும், ஆழ்வார் முடியாமை யாலே கண்ணை மூடிக்கொண்டார் என்றும் ஆனால் எம்பெருமான் ஆழ்வாரின் மூடின கண்களை உறுத்து உள்ளே புகுந்து நிற்கையாலே "என் கண்ணினுள்ளன"

என்றும், எம்பெருமான் தன் கண்ணினுள் புகுருகை குற்றமென்று கண்ணை செம்பளித்தார் ஆழ்வார் என்றும், அப்போது கண்ணினுள்ளே பிரகாசிக்கத் தொடங்கிற்று என்றும் உரைப்பர்.[37]

## 3.1.14 வினா எழுப்பி விடையளித்தல்

ஆழ்வாரின் அகத்தே தோன்றுகின்ற வினாக்களுக்கு விடையளித்து உரை வழங்கி சிறப்பித்துள்ளனர் உரையாசிரியர்கள். அந்த வகையில் நாயனார், "பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத் தன் வாரமாக்கி வைத்தான்" என்ற தொடருக்குச்சேர ஆழ்வார் அனேக பிறவிகளிலே பெற்ற பாபத்தை ஒரு காரணமும் இன்றி, அவரிடம் அப்பாபங்கள் இருக்கச் செய்யாமல், ஆழ்வாரின் தாழ்ச்சியையும் பாராமல் முழுமையாகப் போக்கினான் எம்பெருமான் என்று சொல்லுகிறார். இங்கே ஆழ்வாரின் முழுமையான பாபத்தைப் போக்கின காரணமென்ன? அதனால் ஆழ்வாருக்கு இது கூடுமோ? என்கிற வினாவை எழுப்புகின்றார். "ஈச்வரன்" என்று தன்னை அபிமானித்தவனாய் துர்மாநியான சிவனுடைய துயரை அவன் தன்மை பாராதே அவனுடைய பாபங்களைப் போக்கினான் எம்பெருமான். அதுபோல ஆழ்வாரின் பாபத்தையும் போக்கினான் என்று விடையளிப்பார்.[38]

## 3.1.15 எதிர்மறைப் பொருள் உரைத்தல்

"ஆலமாமரத்தினிலை மேல்" என்ற பாடல் தொடருக்கு விளக்கம் அளிக்கும் ஆசாரியர்கள் "ஆலமாமரத்திலே நெரித்தால் பால்பாயும்படி இருக்கின்ற

இளந்தளிர்'' என்று சொல்லி ''மாமரம்'' என்பதற்கு எதிர்மறையாய்ச்சிறிய மரம் என்று பொருள் உரைப்பர். ''இலைமேல்'' என்பதனால் இந்த இலைக்குள்ளே அடங்கும்படியாய்த்து வடிவின் சிறுமையிருப்பது, ''யசோதை பாலகன் முற்றினவன்'' (மிகப்பெரியவன்) என்னும்படி ''ஒப்பற்ற இளம் பாலகன் - முற்றினவன்'' மிகப்பெரியவன். இங்கே எதிர்மறையாக யசோதையின் பால்வாய்ப்பிள்ளையான கிருஷ்ணனும் முரணித்திருக் கும்படி இவனுடைய இளமை (பால்யம்) செம்பால் பாயா நிற்கும்' என்று எதிர்மறைப்பொருள் கூறி உணர்த்துவார்.[30]

## 3.1.16 திவ்வியப் பிரபந்த மேற்கோள் காட்டுதல்

திவ்வியப் பிரபந்தங்களுக்கு உரை வழங்கும் போது திவ்வியப் பிரபந்த மேற்கொள்களைக் காட்டுதல் ஒருவிதமான சிறப்பாகும். இச்சிறப்பு பக்தி இலக்கியத் தில் வைணவத்திற்கு மட்டும் வழங்கியிருப்பது வைணவ உரையாசிரியர்களின் தனிப்பட்ட பெருமையாகும். அந்த வகையில் ''கொண்டல் வண்ணனைக் கோவல னாய்'' என்ற பாடலில் ''வெண்ணெயுண்டவாயன்'' என்ற சொல்லுக்கு விளக்கம் தரும் நாயனார், இப்போதும் பெரிய பெருமாள் கொறுட்டை மோந்து பார்த்தால் அவர் திருப்பவளத்தில் வெண்ணெய் மணக் கும் என்பர். இதற்கு ஏற்றவாறு திவ்வியப் பிரபந்த மேற் கோளை எடுத்துக்காட்டுகின்றார். அதாவது, ஆண்டாள் ''கற்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ.... சொல்லாழி வெண்சங்கே'' என்று வெண் சங்கை விளித்து அந்த வெண் சங்குக்கு எம்பெருமானின் அதர சம்பந்தம்

உண்டானதால் ஏற்பட்ட அனுபவத்தை நினைத்து, எம்பெருமானின் அதரத்தில் குறுங்கு நாற்றம் வீசுகின்றது என்று கூறி ஒப்பிடுதல் காணமுடிகிறது.[40]

### 3.1.17 வடமொழி மேற்கோள் காட்டுதல்

ஆசாரியர்கள் தங்கள் முதிர்ந்த அனுபவத்தைக் கொண்டு உரையில் தேவையான இடத்தில் வட மொழிமேற்கோள்களைக் கையாண்டுள்ளதைக் காண முடிகிறது. அந்த வகையில் ''பாரமாய பழவினை பற்றறுத்து'' என்ற பாடலில் ''திருவார மார்பதன்றோ'' என்ற சொல்லுக்கு, 'பிராட்டியையும், முக்தாஉறாரத்தையும் உடையதான மார்பன்றோ' என்று பிராட்டியின் பெருமையைச் சொல்வதற்கு உரையாசிரியர் வடமொழி மேற்கோளை வழங்கிச் சிறப்பித்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும். ஸ்ரீஸூக்தத்தில்

> ''ஹிரண்ய வர்ணாம் ஹரிணீம் ஸுவர்ண ரஜதஸ்ரஜாம்|
> சந்த்ராம் ஹிரண்மயீம் லக்ஷ்மீம் ஜாதவேதோம ஆவஹ||''[41]

என்று கூறியபடியே 'வேதங்களைப் பிறப்பித்த எம்பெருமானே! பொன் போன்ற நிறத்தையுடையவளும், மான்போன்றவளும், பொன் வெள்ளி மாலைகளையுடையவளும், சந்திரனைப்போல் ஆனந்திப்பவளும், பொன்மயமானவளுமான பெரிய பிராட்டியாரை என்னிடத்தில் தோன்றச் செய்வீர்' என்றும், மேலும் அதிலேயே,

> ''காம் ஸோஸ்மிதாம் ஹிரண்ய ப்ராகாராம்
> ஆர்த்ராம் ஜ்வலந்தீம் த்ருப்தாம் தர்பப்பயந்தீம்|
> பத்மே ஸ்திதாம் பத்மவர்ணாம்
> த்வாமிஹோபஹ்வயே ச்ரியம்|''[42]

என்கிற படியே 'எம்பெருமானைச் சந்திப்பவளாக வும் பிரம்மத்தின் பெருமைக்குக் காரணமாயிருப்பவ ளாகவும் திருவாரமாகிற பொன்மயமான மதிளை உடையவளாகவும் ஈரநெஞ்சை கொண்டவளாகவும் ஒளிவிடுபவளாகவும் நித்ய திருப்தியுடையவளாகவும் எம்பெருமானை திருப்தி செய்விப்பவளாகவும், தாமரையில் குடிகொண்டவளாகவும் தாமரை போன்ற திருநிறத்தை உடையவளாகவுமுள்ள ஸ்ரீதேவியான பிராட்டி, என்றும் பிராட்டியின் பெருமை சொல்லி யுள்ளது. மேற்கூறிய சிறப்புமிக்க பிராட்டிக்குக் கோயிற் கட்டணமாய், அதற்கு ஹிரண்யமயமான திருமதிள் போல் இருக்கிற திரு ஆரத்தை உடையதான திருமார்பு என்று எம்பெருமானின் திருமார்பின் ஏற்றத்திற்கு தகுந்தாற்போல் வடமொழி மேற்கோள் காட்டியது காணமுடிகிறது.[43]

## 3.1.18 இராமாயணத்தை இணைத்து உரை கூறல்

இராமாயணக் கருத்தை ஆழ்வார் உள்ளத்துக்கு ஏற்ப உட்புகுத்தி உரை வகுத்தல் இப்பிரபந்தத்தில் காணமுடிகிறது. ''உவந்தவுள்ளத்தனாய் உலகமளந்து'' என்ற பாடலில் ''அன்று நேர்ந்த நிசாசரரைக் கவர்ந்த வெங்கணைக் காகுத்தன்'' என்ற தொடருக்குச்சேர அன்று எதிரிட்ட அரக்கர்களைக் கொல்வதற்கு இராமன் கொடிய வில்லை விட்டான்; அந்த அம்புகள் வினயத் தோடு புறப்பட்டு வேட்டைநாய்கள் ஓடி மேல் விழு மாப்போலே விழுந்து அரக்கர்களைக் கொன்றன என்று உரைப்பர். மேலும், விடும்போது அம்பாயும், அவை படும்போது காலாக்கினி போல் பொசுக்கின என்று

அம்பின் பெருமையைக் கூறி இராமாயணத்தை இணைத்துக் கூறுவது காணமுடிகிறது."

## 3.1.19 முன்னோர்கள் மொழிந்த பொருளாட்சியைச் சுட்டுதல்

ஆசாரியர்கள் தங்கள் உரை அமைப்பில் முன்னோர் கள் அனுபவத்தைக் காட்டியுள்ளனர். எடுத்துக்காட்டாக ''கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து'' என்ற தொடருக்கு நாயனார், முன்னோரான பட்டரின் பொருளாட்சியைக் காட்டுவது சிறப்புமிக்கதாகும். பட்டர், அரங்கனின் கண்கள் திருச்செவியளவும் நீண்டிருப்பதைப் பார்த்தார். அப்போது அவருக்கு ஏற்பட்ட நினைவை நமக்கு நாயனார் நன்றாக அறிவிக்கின்றார்; அதாவது - வைகுண்டத் திலே வைகுண்டநாதன் கண்கள் இரண்டாய், அது தண் ணீரிலுள்ள மீனுக்குத் தண்ணீரை வார்ப்பாரைப்போலே, வைகுண்டத்திலுள்ள நித்ய சூரிகளுக்கு முகம் கொடுத் துக் கொண்டிருக்கிற அனுபவம் என்றவாறு. இவ்வாறே இராமனாகவும், கண்ணனாகவும் அவதரித்தபோது முறையே குகன், விதுரன் முதலானவர்களுக்குக் கொஞ்ச காலம் தன்னுடைய இரண்டு கண்களைக் காட்டி, அவர்களைத் தனக்கு இலக்காக்கிக் கொண்டான்; ஆனால் திருவரங்கத்திலோ எம்பெருமான் அர்ச்சாமூர்த்தியாய் இருந்து ''பிறவியாகிய வேரை எடுத்தாலல்லது எழுந்திரேன்'' என்று பள்ளிகொண்டு இருக்கிறானாம்; மேலும், இங்குள்ளவர்களுடைய தாழ்ச்சியைப் பாரா மல் இரண்டு கண்களோடு கூடிய முகத்தைக் காட்டுவது போராது என்றவாறு. ஏனெனில் இவருடைய கருணை யைப் பார்த்தால் உடம்பெல்லாம் கண்ணாக வேண்டு

மென நினைத்துப் பெரிய பெருமாளுடைய மற்ற அவயவங்களெல்லாம் நாமே ஆகவேண்டுமென்று கண்கள் நினைத்து கண்ணுக்கு பக்கத்திலுள்ள காதுகள் அளவு நீண்டு சென்றனவாம். அதாவது அரசர்கள் எல்லா மண்டலங்கள் தனக்கேயாக வேண்டும் என்று முதலில் தங்களுக்குப் பக்கத்தில் இருக்கிற வன்னியரை அழித்து தன் நாட்டோடு சேர்த்துக்கொள்வதுபோல், பெரிய பெருமாளுடைய கண்கள் பக்கத்திலுள்ள காதுவரை நீண்டது என்றபடி. இவ்வாறாகப் பட்டருடைய பொருளாட்சி மூலம் ஆழ்வாரின் அனுபவத்தின் பெருமையை நாயனார் காட்டுவது குறிப்பிடத்தக்க தாகும்.[45] மேலும் இப்பிரபந்த உரையில் முன்னோர்கள் மொழிந்தவைகள் காணக்கிடக்கின்றன.[46]

## 3.1.20 வேதாந்த நெறியில் பொருள் உரைத்தல்

வைணவத்தில் வடமொழிவேதம் ஒரு கண்ணாக வும் தென்மொழி மறையாகிய திவ்வியப் பிரபந்தம் மற்றொரு கண்ணாகவும் எண்ணப்படுகிறது. அந்த வகையில் வைணவ உரையாசிரியர்கள் பிரபந்தப் பாடல் களுக்கு உரை வழங்கும்போது வடமொழி வேதத்தை யும் வேதாந்தத்தையும் ஒப்பிட்டுத் தொடர்புபடுத்தி உரை வழங்குவர். அந்த வகையில் ''அமலனாதிபிரான் அடியார்க்கு'' என்ற பாடலில் ''விரையார் பொழில் வேங்கடவன்'' என்ற தொடருக்குச்சேர யஜுர்வேத தைத்திரீய சம்ஹிதையில் கூறியபடியே, ஆற்றில் படகிலே போகிறவனை இருகரையில் உள்ளாரும் அழைப்பது போல, பரமபுருஷனை விண்ணாட்டவரும் மண்ணாட்ட வரும் அழைக்கிறார்கள் என்று குறிப்பிடுவர். மேலும்,

யஜுர்வேதப் பொருளைக் கூறும்போது "நித்ய சூரி களுக்கும் மனிதர்களுக்கும் கண்ணாய் இருப்பவன் பரமாத்மா" என்பதற்கு ஏற்ப மண்ணாட்டவரும் விண்ணாட்டவரும் அடிமை செய்யும்படியாக வேங் கடவன் இருக்கிறான் என்பதைக் காட்டுவர்." இவ்வாறு பல வகை உத்திகள் மூலம் உரைகளின் சிறப்பு அறியலாயிற்று.

## 3.2. உரைநயம்

உரையாசிரியர்கள் தங்கள் உரையமைப்பில் - உவமைப் போக்கில், இடத்திற்கு ஏற்பப் புத்தம்புதுப் பொருள் புணர்த்தியுள்ள பொருட்போக்கில், பண்டைய நாகரீக முதலியன ஆங்காங்கே குறிப்பிட்டுப் புலப் படுத்தியுள்ள சமுதாயப் போக்கில் - உரை நயம் எடுத்துரைக்கப் பெறுகிறது. மேலும், அருந்தமிழ்ச் சொற்கள் சிலவற்றை ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ள தும் காணமுடிகிறது. இந்த உரைநயவளத்தால் ஆழ் வாரின் முழுமையான அனுபவத்தை ஆசாரியர்கள் எவ்வெவ்வாறு எடுத்து இயம்புகின்றனர் என்பதையும் காணலாம்.

### 3.2.1 உவமை காட்டுதல்

ஆசாரியர்கள் ஆழ்வார் பாடலின் கருத்தை விளக் கத்திற்காகச் சில நயமான உவமைகளைப் பயன்படுத்தி யுள்ளனர். அவ்வுவமைகளினால் பிரபந்தத்திற்கு மேன் மையும் சிறப்பும் ஒன்று சேருகிறது. "பரியனாகி வந்த அவுணன் உடல் கீண்ட" என்ற பாடலில் "முகத்து" என்னும் சொல்லுக்கு முகம் மட்டும்தான் கவர்ச்சியாக இருக்கின்றது என்று சொல்லி, முன்பாட்டில் "செய்ய

வாய்'' என்று தாம் அனுபவித்த திருப்பவளத்தின் பிரிதொன்றுக்கில்லாத சிறப்பு ஆழ்வாரை பின்னே இழுக்கையாலே அந்த திருவதரத்தோடு கூடிய திருமுகத்தை ''முகத்து'' என்று சொல்லி அதற்கு மேலே ''நீண்ட அப்பெரியவாய கண்கள்'' என்று திருக்கண் களை அனுபவிக்கிறார். அக்கண்களானவை ''சந்திர மண்டலத்திலே இரண்டு தாமரை பூத்தாப்போலேயும், ஒரு தாமரையிலே இரண்டு தாமரை பூத்தாப்போலேயும் இருக்கிறதாகவும் முகத்துக்குச் சந்திர மண்டலத்தையும் கண்களுக்கு இரண்டு தாமரையையும் உவமை காட்டியது அறியற்பாலதாகும்.[48]

### 3.2.2 உணர்ச்சி தோன்ற விளக்கம் தருதல்

பாடல்களின் தொடர்களுக்கு ஏற்றவாறு உரை வழங்கும் ஆசாரியர்கள், அத்தொடர்களில் இடம் பெறும் சொற்களுக்கு விளக்கம் தந்து, அந்த சொற்களின் விளக்கத்திற்கு ஏற்றவாறு உணர்ச்சி தோன்ற உரை வகுத்தல் சீர்மை பெற்று விளங்குகிறது. ''உவந்த உள்ளத்தனாய்'' என்ற பாடலில் ''கவர்ந்த'' என்ற சொல்லுக்கு இராமபிரான் விட்ட அம்புகளின் சிறப்பைச் சொல்லும்போது ''இரை பெறாத பாம்பு (ஸர்ப்பம்) போலே எதிரிகள் மேலே விழுந்து உட்கொண்டபடி'' என்று உணர்ச்சி தோன்ற விளக்கம் தருகின்றார் நாயனார்.[49] மேலும், பெரியவாச்சான் பிள்ளை தனது உரையில் ''கவர்ந்த'' என்பதற்கு ''வேட்டை நாய்கள் ஓடி மேல் விழுமாப் போலே விழுகை'' என்று உணர்ச்சி ததும்ப கூறுவது அறியற்பாலதாகும்.[50]

### 3.2.3 கற்பனையோடு உரை வகுத்தல்

பிரபந்தப் பாடல்களில் ஆழ்வார் அனுபவங் களைத் தம் நெஞ்சில் ஓவியங்களாகத் தீட்டிக்காட்ட, உரையாசிரியர்கள் அவ்ஓவியக்காட்சிகளைக் கற்போர்க் குக் காட்டிட முயல்வதைக் காணலாம். அந்த வகையில் ''பரியனாகி வந்த அவுணனுடல் கீண்ட'' என்ற பாடலில் ''அரங்கத்தமலன் முகத்து'' என்ற தொடருக்குச்சேர குற்றத்தோடான சம்சாரத்துக்குள்ளே கோயிலாழ் வாருடனே எழுந்தருளி வந்து தம்முடைய திருவடிகளை அடைந்து அடிசூடி உய்யும்படி அவர்களுடைய ஐயப்பாடு முதலான குற்றங்களை அறுத்துத்தோன்றும் அழகையுடையரான பெரிய பெருமானுடைய அழ கனாது ''சந்திரனும் தாமரையும் ஒன்றினாப் போலே இருக்கிற அழகு'' என்று கற்பனையோடு உரைப்பது காணலாம்.[81] இவ்விடத்தில் சந்திரன் ஆகாயத்தில் தோன்றும், தாமரை பூமியில் தோன்றும், இவை ஒன்றாகச் சேர்வது கற்பனையாலன்றோ.

### 3.2.4 பிரபந்தத்தில் எம்பெருமானுக்குப் பல்வேறு திருநாமங்கள் சுட்டுதல்

ஆழ்வார் மனத்தே எம்பெருமான் தனது ஐந்து நிலைகளைக் காட்டியதால் உண்டான அனுபவம் உள்ளவே அது அந்தந்த இடத்திற்கு ஏற்ப அவதார திருநாமமாகயிட்டு பாசுரம் இடுவர் ஆழ்வார். இதனை உரையாசிரியர்கள் உணர்ந்து உரையிடுவர். அந்த வகை யில் அமலன், ஆதி, பிரான், விமலன், விண்ணவர்கோன்,

வேங்கடவன், நிமலன், நின்மலன், நீதிவானவன், அரங் கத்தம்மான்[52] நீள்முடியன்,[53] அரவின் அணையான்,[54] ஓதவண்ணன்,[55] மேயஅப்பன்[56] சுரிசங்கனலாழியர், நீள்வரைபோல் மெய்யனார், நீள்முடி எம்ஐயனார், அணி அரங்கனார், மேயமாயனார்,[57] அமரர்க்கு அரிய ஆதிப்பிரான், அரங்கத்து அமலன்[58] கொண்டல் வண்ணன், கோவலன், வெண்ணெய் உண்டவாயன், அண்டர்கோன், என் அமுது[59] என்று பலபடியாக திருநாமமிட்டு அழைப்பார் ஆழ்வார்.

### 3.2.5 வரலாற்றுச் சிறப்பு

பாடல்களில் வருகின்ற தொடர்களுக்கு ஏற்ற வாறு, அத்தொடர்களுக்கு விளக்கம் தரும் ஆசாரியர்கள் வரலாற்றுச் சிறப்புகளைக் கையாளுவது காணமுடி கிறது. அந்த வகையில் ''மந்திபாய் வடவேங்கட மாமலை'' என்ற பாடல் தொடருக்கு உரை வழங்கிய ஆசாரியர்கள் ''வடவேங்கடம்'' என்ற சொல்லுக்கு ''தமிழ் தேசத்தின் எல்லை நிலம்'' என்று கூறி வரலாற் றின் சிறப்பை எடுத்தக் கூறுவர். திருவேங்கடத்திலே எழுந்தருளியிருக்கும் திருவேங்கடமுடையான் தன் திருக்கையாலே உலகமளந்த பொன்னடியைக் காட்டிக் கொண்டு நிற்கிறவனாய் ''தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடம்'' என்கிறபடியே,[60] அண்டமுற நிவர்ந்த நீண்முடியனுமாய் நிற்கின்றான் என்று வட வேங்கடத்தின் சிறப்பையும், திருவேங்கடமுடையான் சிறப்பையும் வரலாற்று முறைகொண்டு விளக்குவது காணமுடிகிறது.[61]

### 3.2.6 உரைகள் காட்டும் சமுதாய நிலை

உரையாசிரியர்கள் அவர்கள் காலத்துச் சமுதாய சூழல்களைப் பாடல்களுக்கு ஏற்ப உரையில் புகுத்திக் காட்டியுள்ளது சிறப்புமிக்கதாகும். அந்த வகையில் இப்பிரபந்தத்தில் மக்களின் வாழ்க்கை நிலை, அறச் சாலைகள், தொழில்கள், வாணிபம், நீதிமுறை என்று பலதரப்பட்ட சமுதாய நிலைகளைக் காணமுடிகிறது.

#### 3.2.6.1 மக்களின் வாழ்க்கை நிலை

ஆழ்வார் பெரியபெருமாளின் அனைத்து அவய வங்களையும் அனுபவித்து, இந்த அவயவங்களோடு உண்டான அழகையுடைத்தான திருமேனி ஒன்றோடு சேர்ந்த அழகையும் அனுபவித்தபடியை, அன்றைய மக்களின் வாழ்க்கைக்கு ஏற்ப எம்பெருமானின் அழகோடு ஒப்பிடுகிறார். அதாவது, பாலும் பழமும் கண்டசர்க்கரையுமான இனிப்பு வகைகளைச்சேர்த்து உண்ணுவாரைப்போலே, ஆழ்வார் அனுபவித்ததைச் சொன்னபடி. இந்தக் கருத்தின் மூலம் அன்றைய மக்கள் இவ்வாறு இனிப்புப் பண்டங்களை ஒன்றாகச் சேர்த்து வசதியுடன் உண்டு வாழ்ந்து வந்தனர் என்பது தெரிகிறது.[44] மேலும், இதற்கு முற்றிலும் மாறாகக் கதிர்களைப் பொறுக்கியும் இரந்தும் உயிர் வாழ்ந்தனர் என்பதும் தெரிகிறது.[45]

#### 3.2.6.2 அறச்சாலைகள்

பார்வையற்றவர்களுக்கு அன்றைய சமுதாயத்தில் அறச்சாலைகள் அமைத்து இவர்களுக்கு உதவி செய்து

வந்தார்கள் என்பதை ''மந்திபாய் வடவேங்கட மாமலை'' என்ற பாடலில் ''நின்றான்'' என்ற சொல்லுக்கு நித்ய சூரிகள் திருமலையிலே நிற்கிற சில குணத்திலே ஈடுபட்டுவந்து அடைய ''குருடர்க்கு வைத்த அறச்சாலையிலே விழி கண்ணர் புகுரலாமோ'' என்று உரைவழங்கி அக்காலத்தில் குருடர்களுக்கு அறச்செயல்கள்பல ஏற்பட்டதைக் காணமுடிகிறது.[64]

### 3.2.6.3 தொழில்கள்

தொழில்கள் என்று சொல்லுவதற்கு அன்றைய கால நிலையில் உழவுத் தொழில்தான் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. அந்த முறையில் ''அமலனாதிபிரான் அடியர்க்கு'' என்ற பாடலில் ''அம்மான்'' என்ற சொல்லுக்கு எம்பெருமான் திரு மலையிலே நின்று, அங்கு பள்ளிக் கொள்வதற்கு நிலமில்லாமையாலே திருவரங்கத்திலே வந்து பள்ளிக் கொண்டான் என்று சொல்லப்படுகிறது. இதை விளக் கும் வகையில் ''வெள்ளத்தினைக் கள்ள மடையாலே பள்ளத்தே விடுமாபோலே'' என்று கூறுகிறார் உரை யாசிரியர். அதாவது உழவுத்தொழிலுக்கு தண்ணீர் பாய்ச் சும்போது கள்ளத்தனமாக சிலர் தண்ணீரைப் பாய்ச்சிக் கொண்டார்கள் என்பதைச் சொன்னபடி. இதனால் உழவுத் தொழில் அன்று மேற்கொள்ளப்பட்டது என்று தெரிகிறது.[65]

### 3.2.6.4 வாணிபம்

கடல் மூலமாகத் தீவுகளுக்கு வாணிபம் செய்தார் கள் என்பதை உரைகள் உணர்த்துகின்றன. ''அமலனாதி பிரான்'' என்ற பாடலில் ''திருக்கமலபாதம் வந்து''

என்ற தொடருக்கு, எம்பெருமான் திருவடிகள் வழி வந்தாலும் தானே பற்றினாலும் தானே என்று ஆழ்வாரை இலக்காக்கினதைச் சொல்லும்போது இங்கே வாணிபச் செய்தியைக் காட்டி உரையிடுவர். அதாவது ''சரக்குச்சேர வேண்டினால் தீவிபாந்தரத்தில் (வேறு தீவில்) பாதிப்பாதி வழியாகிலும் வருதல்'' என்று தீவுகளுக்குச் சரக்கு எடுத்துச் செல்லும்போது வாங்குவோர் பாதி வழிவந்து பெற்றுச்செல்வதோ அன்றி, ஒரு பகுதியினைத் தாங்கள் எடுத்துச் செல்வதே வழக்கமாகக் கொண்டனர். இவ்வாறாக வாணிபத்தின் முன் காலத்தின் நடைமுறையை அறியமுடிகிறது.[66] மேலும், அன்றைய காலமக்கள் வாணிபத்தோடு சேர்ந்த கூலி வேலையையும் செய்து வந்தனர் என்பதும் தெரிகிறது.[67]

### 3.2.6.5 நீதி முறை

மக்களிடையே அன்று நீதிமுறை நிலை நாட்டப்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது. அந்த வகையில் ''அடியார்க்கு என்னை ஆள்படுத்த'' என்ற தொடரில் ''ஆள்படுத்த'' என்ற சொல்லுக்கு உரை வழங்கிய ஆசாரியர்கள் அடியார்க்கு 'அடிமையாம் தன்மையில் ஒப்பூணுண்ண வைத்திலன்' என்று சொல்லி அதற்கு மீள வழியில்லை என்பதை நிலை நிறுத்தும் வகையில் உலக வழக்கமான ''ஒரு க்ஷேத்ரம் (பூமி) பத்தெட்டு கிரயம் சென்றால் மீள விரகில்லை' என்று கூறுகிறார். அதாவது ஒருவருக்கு சொந்தமான நிலம் பிறர்க்கு விற்கப்பட்டுப் பத்தெட்டு கை மாறிச் சென்று விடுமானால், பின்பு அதனை மீட்பதற்கு இயலாது என்ற நீதிமுறையைக் காட்டியவாறு.[68]

### 3.2.7 அருந்தமிழ்ச் சொற்கள்

ஆழ்வார் பாடலுக்கு உரிய உரையை உரையாசிரியர்கள் வழங்கும்போது வைணவத்திற்கே உரிய சில அருந்தமிழ்ச் சொற்களையும் பெய்து உரைவழங்கியுள்ளனர். அவற்றில் சிலவற்றை இங்குக் காணலாம்.

| | | |
|---|---|---|
| இடுசிவப்பு | - | செயற்கை அழகு[69] |
| இருகரையர் | - | ஆழ்வார்கள்[70] (பக்தி பிரபத்தி ஆகிய இரண்டிலும் ஊற்றமுடையவர்கள்) |
| இறாய்க்க | - | பின்வாங்க[71] |
| ஒன்பதின்கால் | - | ஒன்பது முறை[72] |
| கிடையழகு | - | பள்ளிகொண்ட அழகு[73] |
| குணுங்கு நாற்றம் | - | முடை நாற்றம்[74] |
| கொண்டைகோல் | - | மேல் முடிச்சுப்பெற்ற கொம்பு[75] |
| சாடி | - | சாடியில் (பொருள்களை பாதுகாக்கும் மண்பாண்டம்)[76] |
| தண்ணியார் | - | தாழ்ந்தவை[77] |
| திமிறுதல் | - | கட்டுமீறிச் செல்லல்[78] |
| திரக்கழிய | - | முற்றிலும் அதிகமாக[79] |
| தேவாரம் | - | வழிபடுகடவுள்[80] |
| நிழலிடம் | - | தெரிதல்[81] |
| நீஞ்சப்புகுதல் | - | நீந்தப்புகுதல்[82] |
| பின்னாட்டுக்கை | - | பின்னும் தொடர்கை[83] |
| மடக்கோலை | - | திருமுகம்[84] |
| மனிச்சன் | - | மனிதன்[85] |

மொறாந்த - சொரசொரப்பான[76]
மோடு - வயிறு[77]
முழுஞ்சு - குகை[78]
பள்ள நாலி - பள்ளமடை[79]
(நீர் தானே பாய்கின்ற
பள்ளமான இடம் என்றபடி)

### 3.2.8. அரங்கனாய் வந்ததின் சிறப்பு

ஆழ்வார் அமலனாதிபிரான் முதல்பாட்டில் பெரிய பெருமாளுடைய திருவடிகளின் அழகை அனுபவிக்க முற்பட்டவர் முதலில் ''விண்ணவர்கோன்'' என்று சொல்லி பின்பு 'விரையார் பொழில் வேங்கடவன்' என்று பாசுரமிடுகிறார். இந்த இடத்தில் பெரியபெருமாள் திருவரங்கத்துக்கு வந்த வரலாறு சொல்லப்படுகிறது. அதாவது சாதாரணமாக ஒருவனைக் கவிபாடும் போது அவனுடைய பெருமையைச் சொல்லிக் கவி பாடுவர். அந்த வகையில் அரங்கனைப் பாடப் புகுந்த ஆழ்வார் அந்த அரங்கன் அண்ணலாய் திருவேங்கடத்தில் நின்றதையும் அதற்கு முன் பரமபதநாதனாய் இருந்த இருப்பையும் சொல்லிப்பாடுவர்; இதுபற்றியே பட்டர் கிருஷ்ணவதாரத்தின் சிறப்பைச் சொல்லும்போது முதலில் பரமபதநாதன் அங்கிருந்து மதுரைக்குக் கண்ணனாய் வந்து தங்கி பின்பு திருவாய்ப்பாடிக்கு வந்தது போல, பரமபதநாதன் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து திருமலையில் தங்கி பின்னர் கோயிலான அரங்கத்துக்கு வந்தார் என்று அருளிச் செய்வர்.[80] ஆகாயத்திலிருந்து கடலில் மழைபெய்து அங்கிருந்து காவிரியாறாய் வந்து இழிந்து கால்வாய்களாய்ப் புகுந்து போய் நாட்டார்க்கு உதவுவதுபோல, பரமபதமாகிற உயர்ந்த இடத்தி

*லிருந்து திருமலையிலே வந்திழிந்து, தெற்கு நோக்கி வந்து பள்ளநாலியான - நீர்தானே பாய்கின்ற பள்ளமான இடமான கோயிலிலே தேங்கி கீழ்மேலாகப் படுத்திருக் கிறார் பெரியபெருமாள்' என்று அனுபவிப்பர் நாய னார்.*[91] *மேலும், பெரிய பெருமாளாகிற மதுரவாற்றி டைப் புகுந்து ஓடுகிற காலை (திருவடியை) அனுபவிக் கிறார் என்று இன்சுவைபட உரைப்பர்.92*

## தொகுப்புரை

1. இப்பிரபந்தத்தில் கையாண்டுள்ள உரைஉத்திகள், மற்றும் உரை நயத்தின் மூலம் ஆழ்வாரின் எண்ணத் திற்கு ஏற்ப வெளிப்பாட்டின் சிறப்பை அறிய முடிகிறது. அதே வகையில் பிரபந்தத்தின் சிறப்பை உயர்த்த உரைஉத்திகளும், உரைநயமும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளானவை என்பதையும் காணமுடிகிறது.

2. உரை உத்தியின் அடிப்படையில் அவதாரிகை வழங்கி முன் பாட்டோடு இயைபுபடுத்தி, மற்றும் ஆழ்வாரின் தொடர்ச்சியான எண்ணங்களை இயைபுபடுத்தி அவ தாரிகை வழங்கியுள்ளதை காணலாகிறது.

3. உரை உத்திகளை முழுமையாக காணும்போது திவ்வி யப் பிரபந்தபாட்டோடு ஒப்புநோக்கல், அடைமொழிக்கு சிறப்பான பொருள் கூறுதல், விளக்கவுரை தருதல், வினாத்தொடரமைப்பு கையாளுதல், உகப்பை வெளிப் படுத்துதல், புதிய முறையில் சொற்போக்கு அமைத் தல், சமயநோக்கில் ஆழ்வாரின் எண்ணத்தைக் காட் டல், உரைக்கு உரை அளித்தல், முன்பின் தொடர் களைக் கொண்டு விளக்குதல், வினா எழுப்பி விடை யளித்தல், எதிர் மறைப்பொருள் உரைத்தல், திவ்வியப்

பிரபந்த மேற்கோள் காட்டுதல், இராமாயணத்தை இணைத்து உரைகூறல், முன்னோர்கள் மொழிந்த பொருளாட்சியைக் காட்டுதல், வேதாந்த நெறியில் பொருள் உரைத்தல் ஆகிய வகைப்பாடுகள் இதன் கண் அமைந்து விளங்கக்காணலாம்.

4. உரை நயத்தை முழுமையாகக் காணும்போது உவமை காட்டுதல், உணர்ச்சி தோன்ற விளக்கம் தருதல், கற்பனையோடு உரை வகுத்தல், வரலாற்றுச்சிறப்பைச் சொல்லுதல், சமுதாய நிலையை எடுத்துரைத்தல், அருந்தமிழ் சொற்களைத் தொகுத்து காட்டுதல், திரு வரங்கனாய் வந்ததின் சிறப்பைச் சொல்லுதல், திரு வரங்கனின் பல்வேறு திருநாமங்களை சூட்டித்தெரி வித்தல் ஆகியவை விளக்கம் பெற்றது அறியலாம்.

## சான்றெண் விளக்கம்

1. அமலன். பெ.பிள்ளை (அவ) உரை ப.7-15
2. அர்த்த பஞ்சகமாவது - இறை நிலை, உயிர் நிலை, உபாயத்தின் இயல்பு, விரோதி இயல்பு, பேற்றின் இயல்பு.
3. அமலன். நாயனார் உரை ப.7-16
4. முனிவாகன போகம் (அவ), தேசிகர் உரை ப.111
5. அமலன். பெ.பிள்ளை உரை ப.17
6. அமலன். நாயனார் உரை ப.66
7. அமலன். நாயனார் உரை ப.75,76
8. முனிவாகன போகம், தேசிகர் உரை ப.111
9. அமலன். பெ. பிள்ளை, நாயனார் உரை ப.28,29 முனிவாகன போகம், தேசிகர் உரை ப.117

10. அமலன். பாடல் 10 நாயனார் உரை (அவ) ப.100, 101
11. முனிவாகன போகம், தேசிகர் உரை (அவ) ப.130
12. திருவாய்மொழி 1.1.1
13. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.17-19
14. அமலன். நாயனார் உரை ப.19
15. அமலன். பெ.பிள்ளை, ப.19
16. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.27
17. மேலது.
18. அமலன். பாடல் 1 பெ.பிள்ளை உரை ப.24
19. மேலது.
20. முனிவாகன போகம், தேசிகர் உரை ப.115
21. அமலன். நாயனார் உரை ப.24
22. அமலன். நாயனார் உரை ப.58, 59
23. அமலன். நாயனார் உரை ப.108, 109
24. அமலன். பாடல் 7
25. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.81
26. அமலன். பாடல் 2
27. அமலன். நாயனார் உரை ப.31
28. அமலன். பாடல் 4 பெ.பிள்ளை, நாயனார் உரை ப.52, 53
29. அமலன். பாடல் 10
30. முனிவாகன போகம், தேசிகர் உரை ப.134
31. அமலன். பாடல் 6
32. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.73

33. அமலன். பாடல் 1 பெ.பிள்ளை, நாயனார் உரை ப.17-19
34. முனிவாகன போகம், தேசிகர் உரை ப.111-136
35. சமயக் கருத்துக்கள் இயல் 4 ப.85-120
36. அமலன். நாயனார் உரை ப.91,92
37. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.26
38. அமலன். பாடல் 5 நாயனார் உரை ப.83
39. அமலன். பாடல் 9 நாயனார் உரை ப.95
40. நாச்சியார் திருமொழி. 7-1, அமலன். நாயனார் உரை ப.105,106
41. ஸ்ரீ ஸுக்தம் - 1
42. ஸ்ரீ ஸுக்தம் - 4
43. அமலன். நாயனார் உரை ப.63
44. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.34
45. அமலன். பாடல் 8 நாயனார் உரை ப.90, 91
46. அமலன். உரை ப.23, 46, 77, 79
47. அமலன். பாடல் 1 நாயனார் உரை ப.22, 23
48. அமலன். பாடல் 8 நாயனார் உரை ப.89
49. அமலன். நாயனார் உரை ப.34
50. அமலன். பெ.பிள்ளை உரை ப.34
51. முனிவாகன போகம், தேசிகர் உரை ப.131
52. அமலன். பாடல் 1
53. அமலன். பாடல் 2
54. அமலன். பாடல் 3

55. அமலன். பாடல் 4
56. அமலன். பாடல் 6
57. அமலன். பாடல் 7
58. அமலன். பாடல் 8
59. அமலன். பாடல் 10
60. நான்முகன் திருவந்தாதி
61. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.40,41
62. அமலன். பாடல் 10 நாயனார் (அவ) உரை ப.101
63. அமலன். பெ.பிள்ளை உரை ப.21
64. அமலன். பாடல் 3 பெ.பிள்ளை உரை ப.42,43
65. அமலன். பாடல் 1 பெ.பிள்ளை உரை ப.25
66. அமலன் பெ.பிள்ளை, நாயனார் உரை ப.25,26
67. மேலது. உரை ப.20
68. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.20
69. அமலன். பாடல் 7 நாயனார் உரை ப.75
70. அமலன். நாயனார், பிரபந்த அவதாரிகை ப.10
71. மேலது. ப.16
72. அமலன். பாடல் 6 நாயனார் உரை ப.71
73. அமலன். பாடல் 9 நாயனார் உரை ப.97
74. அமலன். பாடல் 10 நாயனார் உரை ப.105
75. அமலன். பாடல் 4 பெ.பிள்ளை, நாயனார் உரை ப.53
76. அமலன். பாடல் 7 நாயனார் உரை ப.80
77. அமலன். பாடல் 3 பெ.பிள்ளை உரை ப.41

78. அமலன். பாடல் 10 நாயனார் உரை ப.106

79. அமலன். பாடல் 6 நாயனார் உரை ப.69

80. அமலன். பெ.பிள்ளை, நாயனார் பிரபந்த அவதாரிகை ப.11

81. அமலன். பாடல் 10 பெ.பிள்ளை உரை ப.104

82. அமலன். பாடல் 7 நாயனார் (அவ) உரை ப.75

83. அமலன். பாடல் 8 நாயனார் உரை ப.89

84. அமலன். பாடல் 6 நாயனார் உரை ப.67

85. அமலன். பாடல் 8 பெ.பிள்ளை, நாயனார் உரை ப.91

86. அமலன். பாடல் 8 பெ.பிள்ளை, நாயனார் உரை ப.86

87. அமலன். பாடல் 8 நாயனார் உரை ப.86

88. அமலன். பாடல் 4 பெ.பிள்ளை உரை ப.50

89. திரு உ.வே.தி.அ.க்ருஷ்ணமாசார்ய சுவாமி, கோவிந்த ராஜ ஸ்வாமி பெருமாள் கோயில் வீதி, திருப்பதி (நேர்முகமாகக் கேட்டது)

90. அமலன். பெ.பிள்ளை உரை ப.23

91. அமலன். நாயனார் உரை ப.17

92. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.17

# இயல் - 4

# சமயக் கருத்துக்கள்

வைணவ சமயம் - திருமந்திரம் - திருமந்திரத்தின் பொருள் - ஓம் என்ற பிரணவத்தின் பொருள் - நம: பதத்தின் பொருள் - நாராயண என்ற சொல்லின் பொருள் - ஆய என்பதின் பொருள் - துவயத்தின் பொருள் - அர்த்த பஞ்சக அமைப்பு - இறைநிலையின் இயல்பு - விண்ணாட்டு நிலை (பரத்வம்) - வகுப்பு நிலை (வியூகம்) - பிறப்பு நிலை (விபவம்) - உள்ளுறை நிலை (அந்தர்யாமித்துவம்) - மூர்த்தி வழிபடு நிலை (அர்ச்சை) - உயிர் நிலையின் இயல்பு - தக்கநெறியின் இயல்பு - தடையின் இயல்பு - பேற்றின் இயல்பு - தொகுப்புரை.

## சமயக் கருத்துக்கள்

### 4.0 வைணவ சமயம்

''சமயம்'' என்பதற்கு ''நெறி, கொள்கை என்று பலபடியான பொருள்கள் இருப்பினும், இந்த நன்நெறி களின் கூட்டமே சமயம்'' என்று செம்பொருள் கூறுகின்றது.[1] மனிதனை மாக்கள் தன்மையில் இருந்து

விடுதலை பெறச்செய்து மனிதனை ஒழுக்கமுறச் செய்வது சமயமாகும்.[2] மேலும், மனிதனைப் பண்பாடு உடையவனாக்குவதும் சமயமாகும். இந்தியாவில் வேதத்தை அடிப்படையாகக் கொண்ட சமயங்கள் பல. சமயமும் தத்துவமும் இந்தியாவில் பொதுவாக இணைந்தே காணப்படுகின்றன. வேதத்தின் முடிந்த பாகமான உபநிடதம், கீதை ஆகியன இந்திய சமயங் களுக்கு அடிப்படையாக உள்ளன. இத்தகைய சமயங்கள் வைதீக சமயங்கள் எனப்படுகின்றன. இந்த வைதீக சமயங்களுள் சீர்மை பெற்று விளங்குவது வைணவமும் ஒன்று. இறைவன் எத்தனையோ அவதாரங்கள் எடுத்தும் உலக மக்களைத் திருத்த முடியாமையினால் காட்டில் மானைக்கொண்டு மானைப் பிடிப்பாரைப் போல இறைவனானவன் தன்னுடைய ஆயுத ஆபரணங்களின் அம்சமாக ஆழ்வார்களை இவ்வுலகில் அவதரிக்கச் செய்தான். இவ்வாழ்வார்கள் விஷ்ணுவைத் தலைமைக் கடவுளாகக் கொண்டு வளர்த்த சமயமே வைணவ சமயமாகும்.[3] வைணவ சமயத்தில் தத்துவங்கள் 26-ஆக சொல்லப்படுகின்றன. அதாவது, பூதங்கள் ஐந்து, பொறிகள் ஐந்து, புலன்கள் ஐந்து, தொழிற்கருவிகள் ஐந்து ஆகிய இருபதோடு அகங்காரம், மனம், மஹான், ப்ரக்ருதி, ஆகிய அகக்கூறுகள் நான்கும் சேர்ந்து இருபத்துநான்கு, அறிவற்ற பொருள்கள் தத்துவங்களாகி இறைவன், உயிர் ஆகிய இரண்டோடும் சேர்ந்து வைணவத் தத்துவங்கள் இருபத்து ஆறு ஆகும்.[4]

இத்தத்துவங்களை மூன்றாகப் பிரிப்பர். அதாவது, அறிவுள்ள பொருள் (சித்து) அறிவற்ற பொருள் (அசித்து)

ஈச்வரன் (இறைவன்). இவை மூன்றும் ஆழ்வார்கள் பாடல்களில் அடிப்படை வைணவ தத்துவங்களாகப் பொதிந்துள்ளன. இதனை வெளிக்கொணர்ந்தவர்கள் வைணவ ஆசாரியர்கள் ஆவர். இவர்கள்தம் சமயக் கருத்துக்களே "விசிஷ்டாத்வைதம்" என்ற பெயரில் நிலவி வருகிறது. இராமாநுசர் ஒன்பது நூல்களை இயற்றி வைணவத்தை மேலும் வளர்த்தார். இந்த மூன்று தத்துவங்களுள் அறிவுள்ள பொருளான ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுப் பரம்பொருளான இறைவனை உள்ளபடியே அறிந்து அவனையே உபாயமாகப் பற்றி, அவன் உகப்புக்கே ஆட்பட்டு அடிமை செய்ய வேண்டும் என்பது முக்கியமாகும். இதற்காக அறிய வேண்டியது "அர்த்த பஞ்சகம்" என்று சொல்லும் ஐம் பெரும்பொருள்களாகும். அவை. இறைநிலை, உயிர் நிலை, தக்கநெறி, தடை, பேறு. இந்த ஐம்பொருள் களும் வேதத்தின் முடிந்த கருத்தாகும். இதனை மும் மறை என்னும் மூன்று இரகசிய மந்திரங்கள் உணர்த்துகின்றன. அவை "ஓம் நமோ நாராயணாய" என்னும் பெரிய திருமந்திரம். இதனை ஸ்ரீ பத்ரிகாச் சிரமத்திலே நாராயணன் தானே சீடனாயும் ஆசாரிய னாயும் இருந்து வெளியிட்டான் என்றும், "ஸ்ரீமந் நாரா யண சரணௌ சரணம் ப்ரபத்யே, ஸ்ரீமதே நாராயணாய நம:" என்னும் துவய மந்திரத்தை ஸ்ரீ விஷ்ணு லோகத்தில் எம்பெருமான் பிராட்டிக்கு உபதேசித்தான் என்றும், "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ:| அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:|" என்னும் சரம சுலோகத்தைப் பாரதப்போரில் திருத்தேர்த்தட்டில் கண்ணன் அருச்சுனனுக்கு உபதேசித்

தான் என்றும் மணவாள மாமுனிகள் கூறுவர்.[6] இந்த மூன்று இரகசிய மந்திரங்களின் விரிவாக்கமும், அர்த்த பஞ்சகத்தின் விரிவாக்கமும் ஆழ்வார்கள் அருளிச்செயல் களில் மறைந்துள்ளதை வைணவ உரையாசிரியர்கள் ஆங்காங்கே உரையில் எடுத்துக் காட்டியுள்ளனர்.

அந்த வகையில் முதலாயிரத்தில் திருப்பல்லாண்டு தொடக்கமாக அமலனாதிபிரான் ஈறாக உள்ள பிரபந்தங் கள் முறையே திருமந்திரத்தில் ''ஓம்'' என்கிற பிரணவத் தின் பொருளை வெளிப்படுத்துவனவாக உள்ளன என்று கலியன் அருள்பாடு கூறும்.[6] அந்த வகையில் பிரணவத் தின் பொருள் உணர்த்தும் அமலனாதிபிரானுக்கு உரை வழங்கிய பெரியவாச்சான் பிள்ளை, அழகிய மண வாளப் பெருமாள் நாயனார் ஆகிய இருவரும் ஆங் காங்கே தமது உரைகளில் அர்த்த பஞ்சகத்தையும், மும்மறைப் பொருள்களையும் வெளிக்காட்டியுள்ளனர்.

வேதாந்த தேசிகர் உரையான முனிவாகன போக மானது முற்றிலும் தத்துவ பரமாகவே - திருமந்திரம், துவயம் ஆகியவற்றின் பொருள்களை வெளிப் படுத்துவதாகவே உள்ளது.

மாமுனிகள் அருளிய உபதேசரத்தின மாலையில் ''கார்த்திகையில் ரோகிணி நாள்'' என்று தொடங்கும் பாடலில் ''ஆத்தியர்கள் அன்புடனே தான் அமலனாதி பிரான் கற்றதற்பின்'' என்ற தொடருக்கு உரை வழங்கிய சியர், அமலனாதிபிரான் பிரபந்தத்தில் முதல் மூன்று பாடல்கள் திருமந்திரத்திலுள்ள ''ஓம்'' என்ற பிரணவத் தின் மூன்று எழுத்துக்களான அகார, உகார, மகாரங் களின் விளக்கமாகவே அமைந்தன என்பர்.[7]

## 4.1 திருமந்திரம்

''ஓம் நமோ நாராயணாய'' என்கிற திருமந்திர மானது ''இறைவனுக்கே உரியனான நான் எனக் குரியனன்றிக்கே யொழிய வேணும், எல்லோருக்கும் தலைவனான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும்'' என்பதை உணர்த்து கிறது.[8] வேதாந்த தேசிகர் தாம் அருளிய முனிவாகன போகத்தில் ஆழ்வாரின் முதல் பாடலானது திருமந்திரத் தின் பொருளையும், துவயத்தின் பொருளையும் குறிப்பிடுவதாகக் கூறுவர்.[9]

### 4.1.1 முதல் பாட்டில் திருமந்திரத்தின் பொருள்

#### 4.1.1.1 "ஓம்" என்ற பிரணவத்தின் பொருள்

அகார, மகார, உகாரங்களினால் முறையே எம் பெருமானின் காக்கும் தன்மையும், ஜீவாத்மாவின் அடிமைத் தன்மையும், பிறருக்கு அடிமையாகாதிருக்கும் தன்மையும் சொல்லப்படுகிறது. அந்தவகையில் அகாரத்தி னால் எல்லோருக்கும் தலைவனான எம்பெருமானின் காப்பாற்றும் தன்மை சொல்லப்பட்டது. ''அவ-ரக்ஷணே'' என்ற தாது (வினையடி) காப்பாற்றுதலைச் சொல்லும். அந்த ரக்ஷணமாவது மூன்று வகைப்பட்டிருக்கும் அதாவது ''அமலன்'' என்ற சொல்லால் வீடுபேறு கொடுக்கும் தன்மை (மோக்ஷப்ரதத்வம்) சொல்லப் பட்டது; ''ஆதி'' என்பதனால் எல்லா உலகுக்கும் காரணமானவன் (ஸர்வ ஜகத்காரண பூதன்) என்பதும், ''பிரான்'' என்பதால் எல்லோருக்கும் எல்லாவற்றிலும் உதவி செய்பவன் (ஸர்வ உபகாரகன்) என்பதும்

சொல்லப்பட்டது. இவ்வாறாக முதல் எழுத்தான அகாரத்தின் பொருளாகக் காக்கும் தன்மையின் வகைகள் சொல்லப்பட்டன. இவற்றில் வீடுபேறு கொடுக்கும் தன்மை முக்கியமான காக்கும் தன்மையாகையால் பிரித்துச் சொல்லப்பட்டது. இம்மூன்று பதத்தின் கருத்தும் ஆழ்வார் திறத்து பரவியதாகக் கூறுவர் தேசிகர்.[10] ''அடியார்'' என்பதனாலே மூன்றாம் எழுத்தான மகாரத்தால் சொல்லப்பட்ட ஜீவாத்மாவின் கூட்டமும் அந்த ஜீவர்களுக்கு ஈச்வரனைக் காட்டிலும் வேறுபாடும் ஒன்றோடு ஒன்றின் பிரிவும் காட்டப்படுகிறது. ஆனால் ''அடியார்'' என்ற சொல் பொதுவாக அகாரத்தில் மறைந்த ''கு'' என்ற (எம்பெருமானுக்கே) நான்காம் வேற்றுமையின் பொருளான அடிமைத்தன்மையைச் சொல்லிற்றாகிலும், இந்த இடத்தில் அளவிடற்கரிய பெருமையுடையவரான அடிமைத் தன்மையை அறிந்த ரசிகரைச் சொன்னபடி. ''அடியார்க்கு'' என்பதனால் இரண்டாம் எழுத்தான உகாரத்தின்படியே இயற்கையான தலைவர்கள் (சேஷிகள்) மற்றொருவர் இல்லாதபடியும் கருமத்தினால் உண்டான தலைவர்களோடு வாசியற ஆழ்வாருக்கு தொடர்பு அற்றபடியும் சொல்லிற்றாயிற்று."

## 4.1.1.2 நம: என்ற பதத்தின் பொருள்

நம: என்ற பதத்தினால் எம்பெருமானின் அடியார்க்கு ஆட்பட்டு இருக்கும் தன்மை சொல்லப்படுகிறது. ''என்னை ஆட்படுத்த'' என்பதனால் இந்திரியங்களுக்கு அடிமையாய் அகங்காரத்தோடு இருக்கும் ஆத்மாவை ''எல்லா ஆத்மாக்களும் இறைவனுக்கு இயற்கை

யாகவே அடிமைப்பட்டவர்கள்'' என்று அறியும்படி உதவி செய்தார்; மேலும், ''உற்றதும் உன்னடியார்க்கு அடிமை'' (பெரியதிருமொழி 8.10.3) என்கிறபடியே பாகவதர்க்கு ஆட்படுத்தினான்; இவ்வுபகாரத்தைக் காட்டிலும் ஓர் உபகாரம் உண்டோ என்று பிரித்து ஆழ்வார் பேசும்படியாதலால் நம: பதத்தின் கருத்துப் பொருளைச் சொன்னபடி.[12] எவ்வாறெனில் ஆழ்வார் லோக சாரங்க முனிவரைப் பாகவதராகக் கருதினாரன்றோ.

## 4.1.1.3 "நாராயண" என்ற சொல்லின் பொருள்

நாராயண சப்தத்தில் 1. எம்பெருமானின் உபாயமாம் தன்மைக்கும், அவனது அடையப்படும் தன்மைக்கும் முறையே உறுப்பான குற்றங்களுக்கு எதிர்த்தட்டாயிருக்கும் தன்மையும், 2. கல்யாண குணயோகமுமாகிற இரண்டு அடையாளமும் மற்றும் 3. விண்ணாட்டுக்கும், மண்ணாட்டுக்கும் தலைவனாம் தன்மையும் சொல்லப்படுகிறது. இது தன்னையே முதல்பாடலின் சொல் அடிப்படையில் காணலாம்: அதாவது,

''விமலன்''-நித்யமாய்க் குற்றமில்லாதவன். இதனால் குற்றமுள்ள சேதனர்களையும் குற்றம் கழித்து பரமபதம் சென்ற முக்தர்களைக் காட்டிலும் பிரிதொன்றுக்கில்லாத சிறப்புடையவன் என்றபடி;

''விண்ணவர் கோன்'' - பரமபதத்தில் எம்பெருமான் இட்டவழக்காய் இருப்பதனால் சுத்தியோகத்தையுடைய நித்ய சூரிகளைக் காட்டிலும் வேறுபட்டவன் என்றபடி;[13]

''விரையார் பொழில் வேங்கடவன்'' - எல்லோரும் அடையும்படியாய், அனுபவிக்கலாம் படியாய்

குன்றின் மேல் இட்டவிளக்காய்த் திருமலையிலே நிற்பவன்; இதனால் சௌலப்யம் சொல்லப்பட்டது;

''நிமலன்'' - அடியார் இட்ட வழக்காம்படி இருப்பவன்; இதனால் சௌசீல்யம் சொல்லப்பட்டது;

''நின்மலன்'' - அடியார் குற்றங்களைக் காணுத லாகிற குற்றமற்றிருப்பவன்; எல்லாம் அறிந்தவனா னாலும் அடியார் குற்றத்தைக் காணான் என்றபடி; காணும் அதுவும் இவர்களுடைய குற்றத்தைப் போக்கு வதற்கு உறுப்பாய் இருப்பவன் என்றபடி.[14]

ஆக, விமலன், விண்ணவர்கோன், விரையார் பொழில் வேங்கடவன், நிமலன், நின்மலன், என்று ஐந்து பதங்களால் ''நாராயண'' என்ற சொல்லின் பொருளான உபாயமாம் தன்மைக்கும், அடையப்படும் தன்மைக்கும் உறுப்பாய் இரண்டு அடையாளங்களான - குற்றங்களுக்கு எதிர்தட்டாய் இருக்கும் தன்மையும் நன்மைதரும் கல்யாண குணங்களோடு கூடிய தன்மை யும் விண்ணாட்டையும், மண்ணாட்டையும் ஆளும் தன்மையும் உடையவனைச் சொன்னபடி.

### 4.1.1.4 ''ஆய'' என்பதன் பொருள்

''ஆய'' என்பதனால் நித்ய சூரிகளால் சேவிக்கப் படுபவனாய் அடியார் செய்யும் கைங்கர்யத்தை எம்பெரு மான் ஏற்றுக்கொள்ளும் தன்மையைச் சொல்லப் படுகிறது.

''நீதிவானவன்'' - என்பதனால் அடிமைத்தன்மைக் குத் தக்க கைங்கர்யமான நீதியிலே ஊன்றிய நித்ய சூரிகளால் எம்பெருமான் சேவிக்கப்படுபவனானவன்;

அதுபோலே நமக்குச் சேவிக்கப்படுபவனாய் நீள் மதிளரங்கத்திலே உள்ளான் என்று ''ஆய'' என்ற நான்காம் வேற்றுமையின் பொருளான கைங்கர்யத்தை எம்பெருமான் ஏற்றுக்கொள்ளும் தன்மையைச் சொன்னபடி.

## 4.1.2 துவயத்தின் பொருள்

'நீள்மதிள் அரங்கத்தம்மான்' என்ற தொடரில் 'நீள்மதிள் அரங்கம்' என்பதனால் துவயத்தின் முதல் வாக்கியத்திலுள்ள 'நாராயண' என்ற சொல்லுக்குரிய பல பொருள்களில் ஒன்றான ஸௌலப்யத்துக்கு எல்லை நிலமான அர்ச்சாவதாரம் (திருவரங்கம்) சொல்லப்பட்டதாயிற்று; 'அம்மான்' என்பதனால் துவயத்தின் இரண்டாவது வாக்கியத்திலுள்ள 'நாராயண' என்ற சொல்லுக்குப் பொருளான (ஸர்வசேஷி) எல்லாருக்கும் தலைவன் என்பது சொல்லப்பட்டதாயிற்று.

''திருக்கமலபாதம்'' என்ற சொல்லினால் துவயத்தின் முதல் வாக்கியத்தில் ''சரணௌ சரணம்'' என்ற சொற்களின் பொருளான திருவடிகளே உபாயம் என்பது சொல்லப்பட்டதாயிற்று.[15]

## 4.1.3 சரமச்லோகத்தின் பொருள்

என்னை ஒருவனையே உபாயமாகப்பற்று; நான் உன்னை எல்லாப்பாபங்களினின்றும் விடுவிக்கிறேன் என்று கண்ணன் கீதையின் சரமச்லோகத்தில் சொல்லியதற்கு ஏற்ப ''பாரமாய பழவினை பற்றறுத்து'' என்ற ஆழ்வார் சொற்களுக்கு உரையாசிரியர்கள் சரமச்லோகப் பொருளைக் காட்டி, எம்பெருமான் ஆழ்வாருடைய

எல்லாப் பாபங்களையும் போக்கியதைக் கூறியது அறியற்பாலதாகும்.[16]

இவ்வாறு திருமந்திரத்தின் பொருளாகவும் துவயத்தின் பொருளாகவும் சரமச்லோகத்தின் பொருளாகவும் காட்டியது மட்டுமின்றி, திருமகள் கேள்வனான திருவரங்கத்து இறைவனுடைய எல்லையானதுமாய் உயர்ந்ததுமாய் உறுப்பானதுமாய் உள்ளகுணங்களின் பெருமைகளை முதல் பாடலில் ஒவ்வொரு சொற்களின் மூலமாகப் பதினைந்து குணங்களை விளக்கியுள்ளார் தேசிகர். இந்தப் பதினைந்து குணங்களின் எல்லையில் எம்பெருமான் இருப்பது அவரது உரை மூலம் அறியற்பாலதாகும்.[17] அவை வருமாறு:

**"அமலன்"**

அமலன் என்பதனால் பிறவித்துயர் போக்கும் தன்மையின் எல்லை நிலம் (ஸம்ஸார நிவர்த்தகத்வ காஷ்டை) சொல்லப்பட்டது; அதாவது குற்றமற்ற கைங்கர்யத்தைக் கொடுக்கை;

**"ஆதி"**

ஆதி என்பதனால் காரணமாம் தன்மையின் எல்லை நிலம் (காரணத்வகாஷ்டை) சொல்லப்பட்டது; அதாவது, வேறு காரணங்களெல்லாம் தான் இட்டவழக்காய், தனக்காவது, தன்னுடைய ஞானசக்தி முதலானவற்றுக்காவது ஒரு காரணமும் எதிர்பாராதிருக்கை;

**"பிரான்"**

பிரான் என்பதனால் தஞ்சமாகப் பற்றும் தன்மையின் எல்லை நிலம் (சரண்யத்வகாஷ்டை) சொல்லப்

பட்டது; அதாவது, தன்னைக்காப்பாளனாகப் பற்றி னார்க்குத் தன்னை ஒழிய மற்றவரைக் காப்பாளராகப் பற்றவொண்ணாதபடி இருக்கை;

**"அடியார்க்கு என்னை"**

அடியார்க்கு என்னை என்பதனால் உதவி செய்யும் தன்மையின் எல்லை நிலம் (உபகாரகத்வகாஷ்டை) சொல்லப்பட்டது; அதாவது ஒரு மட்டமான போலிக் காரணத்தைப் பற்றாசாகக் கொண்டு, உபய விபூதியோடு கூடியவனான இறைவன் தன்னை அனுபவிக்கத்தக்க வனாகக் கொடுத்தும், அதுக்குமேல் கொடுக்கலாவது ஒன்றுமில்லாமையாலே நித்யமாகக் கடன்பட்டிருக்கை;

**"ஆட்படுத்தினவன்"**

ஆட்படுத்தினவன் என்பதனால் கருணையின் எல்லை நிலம் (கிருபாகாஷ்டை) சொல்லப்பட்டது; அதாவது, பகைவனுடைய உறவினர்களும் கூட தள்ளத்தக்கவர்கள் என்று சொன்ன நண்பர் முன்னே ''பகைவராயினும் இசைந்தால் ஏற்றுக்கொள்வேன்'' என்று எதிர் பேசும்படியான இரக்கத்தையுடையவனாய் இருத்தல்; அதனால், அவர்கள் தாங்களும் இவரைக் கைக்கொள்ளும்படி பண்ணுகை;

**"விமலன்"**

விமலன் என்பதனால் சுயேச்சையின் எல்லை நிலம் (ஸ்வாதந்திரயகாஷ்டை) சொல்லப்பட்டது; அதாவது, தன்னையும் பிறரையும் தான் நினைத்த நிலை களிலே நிறுத்தும் போது விலக்கவல்லார் இன்றிக்கே இருக்கை;

''விண்ணவர் கோன்'' என்பதனால் குற்றமில்லாத தன்மையின் எல்லைநிலம் (நிர்தோஷத்வகாஷ்டை) சொல்லப்பட்டது; அதாவது, குற்றமென்று சொல்லும் படியான பொருள்களோடு உண்டான சேர்த்தியாலும், பிறருக்கு இருக்கும் அறிவின்மை துக்கம் ஆகிய வற்றுக்குக் காரணங்களானவற்றைத் தான் அனுட்டித் தாலும் தனக்கு அறிவின்மை, துக்கங்கள் வராதிருக்கை;

**"கோன்"**

விண்ணவர் கோன் என்பதனால் தலைவனாம் தன்மையின் எல்லைநிலம் (ஸ்வாமித்வகாஷ்டை) சொல்லப்பட்டது; அதாவது, நித்ய விபூதியில் உள்ளவர் களையெல்லாம் தனக்குச் சொத்தாக உடையவனாக இருக்கை;

**"வேங்கடவன்"**

வேங்கடவன் என்பதனால் எளிவந்த தன்மையின் எல்லைநிலம் (சௌலப்யகாஷ்டை) சொல்லப்பட்டது; அதாவது, தன்னைவிட்டு அகல நினைப்பார்க்கும் அகல வொண்ணாதபடி அணுகநிற்கை;

**"நிமலன்"**

நிமலன் என்பதனால் சீல குணத்தின் எல்லை நிலம் (சௌசீல்யகாஷ்டை) சொல்லப்பட்டது; அதாவது. தன்பக்கல் இறைவனாம் தன்மையை சந்தேகப்படு பவர்களுக்கும் வெளியிடுவார்க்கும் தானே மறுமாற்றம் சொல்லி மேலும் தன்னை தாழ விட்டு பரிமாறுகை;

இதுவே அறப்பெரியவன் அறத்தாழ்ந்தவனோடு புரையறக்கலக்கை என்பதாகும்;

**"நீதிவானவன்"**

நீதிவானவன் என்பதனால் தாயன்பின் எல்லை நிலம் (வாத்சல்யகாஷ்டை) சொல்லப்பட்டது; அதாவது, அந்தரங்கராய் இருப்பாரும் அடியார் திறத்து ஆயிரம் கோடி குற்றத்தைக் காட்டினாலும் அனாதரம் பிறப்பிக்க ஒண்ணாதிருக்கை;

**"நீள் மதிள் அரங்கத்தம்மான்"**

நீள் மதிள் அரங்கத்தம்மான் என்பதனால் அடையப் படும் தன்மையின் எல்லை நிலம் (பிராப்யத்வ காஷ்டை) சொல்லப்பட்டது; அதாவது, எல்லாப் பொருள்களும் தனக்கு அடையாய் (விசேஷணம்) இருப்பதன்றி தான் மற்றொரு பொருளுக்கு அடையாக இல்லாதிருக்கை.

மேலும், அடியார் திறத்து ஓரத்தன்மையின் எல்லை நிலம் (ஆச்ரித பக்ஷபாதித்வம்) சொல்லப்பட்டது; அதாவது, எல்லா ஜாதிக்கும் சமமான எம்பெருமான் தன் அடியாரைக் காக்கும் சங்கல்பத்தோடு விரோதித்த தன்னுடைய பொதுவான நினைவை இல்லாதது போல் ஆக்கி, மிகவும் எளிதான நன்மையைப் பண்ணுகை;

**"திருக்கமலபாதம் வந்து"**

திருக்கமலபாதம் வந்து என்பதனால் அனுபவிப் பிக்கும் தன்மையின் எல்லை நிலம் (போக்யத்துவ காஷ்டை) சொல்லப்பட்டது; அதாவது, தன் சொரூபத்தை அனுபவித்தால் தன் அடையாக (விசேஷணம்)

விட்டுப்பிரியாத எல்லாவற்றையும் அனுபவிக்கும் அது, அதன் திவலையோடு ஒத்திருக்கை;

**"என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே"**

என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே என்பதனால் முயலாது அனுபவிக்கதக்க தன்மையின் எல்லைநிலம் (அயத்ந போக்யத்வகாஷ்டை) சொல்லப்பட்டது; அதாவது அனுபவிக்கும் பொருட்டுக் காரணங்களின் தூண்டுதலும் வேண்டாதபடி தென்றலும் பரிமளமும் வந்தாற்போலே வந்தது விலக ஒண்ணாதபடி அனுபவிக் கப்படுபவனாய் இருக்கை; மேலும், வேதாந்த தேசிகர் அமலனாதிபிரான் பத்துப் பாடல்களிலும் திருமந்திரத் தின் பொருள் அடங்கி இருப்பதைக் காட்டியுள்ளார். முதல் மூன்று பாட்டில் திருமந்திரத்தின் முதல் பதமான "ஓம்" என்ற பிரணவத்திலுள்ள மூன்று எழுத்துக்களின் பொருள்களை நிலை நாட்டியுள்ளார். அதாவது, அகார, உகார, மகார, ஆகியவற்றின் பொருள்களான எம்பெரு மானுடைய காக்கும் தன்மை, ஜீவாத்மா எம்பெரு மானுக்கே உரியனாய் இருக்கும் தன்மை, ஆத்மா ஞானமுடைமை ஆகியவற்றைச் சொன்னபடி"[16]

நான்காம் பாட்டில் மோட்சத்தில் இச்சை யுடையவர்களுடைய மனம் அகங்கார மமகாரத்திற்கு ஆளாகாதபடி பண்ணிக் கொடுக்கிறதைச் சொன்னபடி; அதாவது "சதுரமாமதிள் சூழ்... ஓதவண்ணன்" என்பத னால் இராமனுடைய சரித்திரத்தை முன்னிட்டு "நானும் என்னுடையதன்று, மற்றும் என்னுடையதாவன ஒன்று மில்லை என்கிற "நம:" என்ற பதத்தின் பொருளை நிலை நாட்டியுள்ளார்.

ஐந்து, ஆறு பாடல்களில் ''நாராயண'' என்ற சொல்லின் பொருளுக்கு உள்ளீடான ''திருஆரமார்பு'' என்பதனால் பெரிய பிராட்டியார் வாழும் இடமான திருமார்பையும் ''முற்றும் உண்ட கண்டம்'' என்பத னால் எல்லா உலகங்களுக்கும் தான் ஆதாரமாய் இருக்கும் தன்மையையும் நிலை நாட்டியுள்ளார். ஏழு, எட்டு, ஒன்பது, பத்து பாடல்கள் மூலமாக வேண்டிப் பெறுவதற்கு உறுப்பான கைங்கர்யத்தை ஏற்றுக்கொள் ளும் எம்பெருமானின் தன்மையை அனுபவித்து அத னால் பரவசமடைந்ததை ''ஆய'' என்பதன் பொருளாகக் காட்டியுள்ளார்.

## 4.2. அர்த்த பஞ்சக அமைப்பு

இவ்வாறு திருமந்திரம் துவயம் இவற்றின் பரமாகவும் அமலனாதிபிரான் அமைந்ததை உரையில் காட்டியதோடு அல்லாமல் நாயனார் கூறியபடியே அர்த்த பஞ்சகமாகிய இறைநிலை, உயிர்நிலை, தக்கநெறியின் இயல்பு, விரோதியின் இயல்பு. பேற்றின் இயல்பு என்ற வகையிலும் காணலாம்.

### 4.2.1. இறை நிலை

இறைநிலை ஐந்து நிலையாக விளங்குகிறது. அதாவது, விண்ணாட்டு நிலை (பரத்வம்), வகுப்பு நிலை (வியூகம்) பிறப்பு அவதாரநிலை (விபவம்) உள்ளுறை நிலை (அந்தர்யாமித்வம்), மூர்த்தி வழிபடு நிலை (அர்ச்சை)

## 4.2.1.1 விண்ணாட்டு நிலை (பரத்வம்)

ஸ்ரீவைகுண்டம், திருப்பாற்கடல், திருவவதாரஸ் தலம், உகந்தருளின திருப்பதிகள் எல்லாம் பெரிய பெருமாளானப்போலே அந்தந்த இடங்களில் உண்டான அழகு, குணம், திருவிளையாடல்கள் முதலானவைக ளெல்லாம் பெரிய பெருமாள் பக்கலிலே காணலாம் என்பர் உரையாசிரியர்கள்.[19] அந்த வகையில் வைகுண்ட நாதன்படியை ஆழ்வார் பல பாசுரங்களில் அனுபவித் துள்ளார்.

''விண்ணவர் கோன்'' - என்பதனால் நித்ய சூரிகள் எடுத்துக் கைநீட்டும்படி இருப்பவன் என்றும், கோன் என்பதனால் நித்ய சூரிகளும் எல்லை காணாதபடி இருப்பவன் என்றும் அனுபவிப்பர்.[20] மேலும், தேசிகர் எம்பெருமான் இட்ட வழக்கமான சத்தியோகத்தை யுடையரான சூரிகளைக் காட்டிலும் வேறு பட்டவன்; இத்தாலே சூரிகளாலே சேவிக்கப்படுபவனான பரரூப மும் (இறை நிலை) தோன்றுகிறது என்று அனுப விப்பர்.[21]

''நீதிவானவன்'' - என்பதனால் ஆண்டான் - அடியவன் (சேஷி சேஷத்வங்கள்) உறவு முறைகள் முறை மாறாத நித்ய விபூதியிலே உள்ளவன் என்பர்.[22]

''நீள் முடியன்'' - என்பதனால் விண்ணாட்டுக்கும், மண்ணாட்டுக்கும் (உபய விபூதிக்கும்) தலைவனாம் தன்மை தோற்றும் படி இருக்கிற கிரீடத்தை உடையவன் என்பர்.[23]

''துளபவிரையார் கமழ் நீள்முடி'' - என்பதனால் பரிமளம் மிக்கிருந்துள்ள திருத்துழாய் மாலையாலே

அலங்கரிக்கப்பட்டதாய் ஆதிராஜ்யத்தை தெரிவிப்ப தான கிரீடத்தையுடையவன்.[24] எல்லாரைக் காட்டிலும் மேம்பட்ட தன்மையை (சர்வாதிகரத்வம்) தெரிவிப்ப தான திருத்துழாயின் பரிமளத்தை பரிபூர்ணமாக்கும்படி கமழ்ந்து விண்ணாட்டையும், மண்ணாட்டையும் ஆளும் தன்மையைத் தெரிவிப்பதான திவ்விய கிரீடத்தையுடைய எல்லா லோகத்துக்கும் தந்தையான வன் என்பர் தேசிகர்.[25]

''கையினார் சுரிசங்கனலாழியர்'' - என்பதனால் இப்பாடலில் வைகுந்த நாதன் படியும் இங்கே காண லாம் என்று உரையாசிரியர்கள் குறிப்பிடுவது அறியற் பாலதாகும்.[26] பரமபதத்தில் வைகுண்டநாதன் திருவாழி திருச்சங்கோடு நான்கு கைகளை உடையவனாய் இருக் கும் இருப்பை பெரிய பெருமாள் பக்கலில் ஆழ்வார் கண்டதால் வைகுண்ட நாதன் படி என்பதைக் காணலாம்.

''துண்ட வெண் பிறையன் துயர் தீர்த்தவன்'' என்ற பாடலில் துண்டாய் இருக்கிற வெளுத்த சந்திரனைச் சடையிலே உடைய சிவபிரானின் பாபத்தைப் போக்கிய தால் எம்பெருமான் ஆபத்திலே தோழனாயிருந்து உதவின தன்மை சொல்லப்பட்டது.[27] பிரளய காலத் திலே எல்லா உலகையும் அமுது செய்து ரக்ஷித்ததினால் ஆபத்திலே தோழனாக இறைவன் இருக்கும் தன்மையை, பெரிய பெருமாள் திருக்கழுத்தைக் கண்டவாறே சொன்னதனால் எம்பெருமான் ஆபத்திலே தோழனா யிருந்து உதவின தன்மை சொல்லப்பட்டது. இவ்வாறாக இறை நிலையில் ஆழ்வாருக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் காட்டுகின்றனர் உரையாசிரியர்கள்.[28]

### 4.2.1.2 வகுப்பு நிலை (வியூகம்)

இப்பிரபந்தத்தில் எம்பெருமானின் வியூக நிலையை பாடல்களின் ஒப்புமையில் காண முடிகிறது. ''மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான் அரங்கத்தரவினணையான்'' என்ற பாசுரத்தில் ''அரங்கத்தரவினணையான்'' என்பதனால் எம்பெருமான் ஆதிசேஷன் மேல் பள்ளிக்கொண்டிருப் பதைச் சொன்னபடி.[29] மேலும், ''கையினார் சுரிசங்கன லாழியர்'' என்ற பாடலில் ''அரவினணைமிசைமேய மாயனார்'' என்றும்,[30] ''ஆலமாமரத்தினிலை மேல் ஒரு பாலகனாய்'' என்ற பாடலில் ''அரங்கத்தரவினணை யான்'' என்றும் இலைமறை காயாக எம்பெருமானின் வியூக நிலையை அனுபவிக்கிறார் ஆழ்வார்.[31] முற்கூறிய படியே திருப்பாற்கடலில் எழுந்தருளியிருக்கும் நிலை பெரிய பெருமாள் பக்கலிலே காணலாம்.[32]

### 4.2.1.3 பிறப்பு - அவதார நிலை (விபவம்)

பிறப்பு நிலையின் கீழ் திரிவிக்ரம, இராம, நரசிம்ம, கிருஷ்ண அவதாரங்களை ஆழ்வார் சிறப்பாக அனுபவித்ததை உரையாசிரியர்கள் உரைத்ததின் மூலம் அறியலாம். பாட்டுக்களின் முறையே அவதாரங்களைப் பற்றி இங்கு குறிப்பிடப்பட ளது.

#### 4.2.1.3.1 திரிவிக்கிரம அவதாரம்

மகா பலியின் கர்வத்தை அடக்குவதற்காக அவனால் செய்யப்பட்ட வேள்வியில் எம்பெருமான் வாமனனாகச் சென்று யாசித்தான்; யாசித்ததின் விளை

வாக மூவுலகங்களையும் மூவடியால் அளந்தான்; இது பற்றியே ஆழ்வார் "உவந்த உள்ளத்தனாய் உலகமளந்து அண்டமுற நிவந்த நீண்முடியன்" என்று பாசுரமிடு கிறார்.[33] இவ்விடத்தில் எம்பெருமானுடைய திரு வுள்ளம் உகந்ததற்குக் காரணத்தை அழகாகக் காட்டு கின்றனர் உரையாசிரியர்கள். "திருமகள் கேள்வனான எம்பெருமான் எல்லா விருப்பங்களும் ஒருங்கே நிறை வேறப்பெற்றவனாய், யாசகனாய் வந்து சிலர் விரும்பா திருக்க, மேன்மையானதாய்ப் பெரிய பிராட்டியார் திருக் கைகளால் வருடவும் பெறாத அந்தத்திருவடிகளைக் காடு, ஓடை என்று பாராமலும், அறிவற்றபொருள் அறிவுள்ளபொருள் என்ற வாசி பாராமலும் அளந்த போது உகக்க வேண்டியிருக்க, அவையறியாதபோது குழந்தை பால் குடிக்கக் கண்டு உகக்கும் தாயைப்போல் எம்பெருமான் உகந்த திருவள்ளத்தையுடையவனாய் இருந்தான்" என்று அனுபவிப்பார்.[35] "உலகமளந்து" என்பதனால் வசிஷ்டன், சண்டாளன், என்ற வேறுபாடு, ஆண், பெண் என்ற வேறுபாடு - என்பனவற்றைப் பாராமல் எல்லார் தலையிலும் ஒக்கத்திருவடிகளை வைத்ததைச் சொன்னபடி. எம்பெருமான் உலகத்தை அளந்த போது அண்டகடாகம் வெடித்து அடைகட்ட வேண்டும்படி விரும்பி வளர்ந்து இருந்தானாம். இது பற்றியே "அண்டமுற நிவந்த நீள்முடியன்" என்று பாசுரமிடுகிறார்.[36] மேலும், நாயனார் திருவடிகளுக்கு வளர்த்தி சொல்ல உரித்தாய் இருக்க, "நிவந்த நீள் முடியன்" என்று திருமுடிக்கு வளர்த்திச் சொல்லுகிறார். 'இத்திருவடிகள் அடையமுடியாத திருவடிகளன்று, உரியதான திருவடிகள் என்று தோற்றுவதற்காக' என்று அனுபவிப்பார்.

மேலும், எம்பெருமான் யாசகனாய்ச் சென்று யாசித்ததை மறுக்காமல் மகாபலிகொடுத்தபடியாலே உவந்த உள்ளத்தனாய் இருந்தான் என்று அனுபவிப்பர். ''உலகமளந்து'' என்பதனால் திருக்கையில் நீர் விழுந்தளவிலே அந்நீரே பற்றாசாக வளர்ந்து அளந்து கொண்டான் என்பர்.[36]

எம்பெருமான் திரிவிக்ரமவதாரத்தினால் ஏற்பட்ட உகப்பை ''உவந்த உள்ளத்தனாய்'' என்ற தொடருக்குச் சேரக்காட்டுகின்றார் தேசிகர். மகாபலியாலே கவரப் பட்ட அரசை மீட்டுத்தர வேண்டுமென்று இந்திரன் முதலான தேவர்கள் வேண்ட எம்பெருமான் வள்ளல் தன்மையுடைய - இவர்கள் பக்கலிலே உவந்த உள்ளத்தை உடையவனாய் இருந்தான்; மகாபலி அசுரனேயானாலும் பிரகலாதனின் பேரன் என்கிற உறவு முறையை நினைத்து நன்மை செய்வதாக மகாபலியை அழிக்காமல் அவனுடைய கொடைக்கு அனுகூலமாக எம்பெருமான் யாசகனாகச் சென்று அவன் கொடுக்க, இவன் வாங்குகையாலே அவன் திறத்து நன்மையுடைய வனாய் இருந்தான்; விருப்பத்தை எதிர்பார்க்காமல் எல்லார் தலையிலும் தன் திருவடிகளை வைக்க, விலக்காத அளவிலும், எல்லா விஷயத்திலும் உகந்த உள்ளத்தனாய் இருந்தான் என்று கூறியது அறியற்பால தாகும். மேலும், இந்த திரிவிக்ரமவதாரத்தில் இறை வனாம் தன்மையில் சந்தேகம் கொண்ட இந்திரன் முதலானவர்கள் எம்பெருமான் வாமனனாய் இரப்பாள னானபடியும், திரிவிக்ரமனாய்த் திருவடி மேலே வளர்ந்தபோது பிரமன் அத்திருவடியை விளக்கி

ஆராதித்தவனான படியும், பிரமன் விளக்கிய திருவடி நீரைச்சிவபிரான் தலையில் கங்கையாகப் பெற்று தூய்மையான படியும் சொல்லிற்று என்பர்.[37] இவ்வாறு திரிவிக்ரம அவதாரப் பண்புகளை பெரியபெருமாள் பக்கலிலே ஒரோர் வகையில் ஆழ்வார் கண்டதை பிள்ளையும் நாயனாரும் மற்றும் தேசிகரும் குறிப்பிட்டது அறியற்பாலதாகும்.

## 4.2.1.3.2 இராமாவதாரம்

அமலனாதிபிரானில் இரண்டு பாடல்களில் இராமவதார நிகழ்ச்சியை ஆழ்வார் சித்தரித்துள்ளார். ''அன்று நேர்ந்த நிசாசரரைக் கவர்ந்த வெங்கணைக் காகுத்தன்'' என்று பாசுரமிடுகிறார்.[38] இவ்விடத்தில் இராமாயணத்தில் இராமன் ஜனஸ்தானத்திலே இருந்தபோது கரன், தூஷணன், முதலான அரக்கர்கள் எதிர்த்து வந்தனர்; அவர்களைத் தன்னுடைய கொடிய அம்புகளால் அழித்தான்; இவ்வீரச்செயலை உரையாசிரியர்கள் அழகாக எடுத்துரைக்கின்றனர். இராமனுடைய அழகிலே தோற்றுக் காலில் விழாமல் அம்புகளையும் வில்லையும் தாவிக்கொண்டு வந்து எதிர்த்த அரக்கரைத் தன்னுடைய கொடிய அம்புகளாலே விழுத்தினான்; அந்த அம்புகளானவை தொடுக்கிறபோது அம்பாய், எதிரிகள் மேலே போய்விழும்போது எரிகிற காலக்கினிபோலே இருந்தது என்பர் உரையாசிரியர்கள்.[39]

இலங்கை அரசனான இராவணனை யுத்தத்தில் தோற்று ஓடும்படி கூர்மையான பிரம்மாஸ்திரத்தை விடுத்தான் இராமன்; இதுபற்றியே ''சதுரமாமதிள் சூழ்

இலங்கைக்கிறைவன் தலைபத்து உதிரவோட்டி'' என்று பாசுரமிடுகிறார் ஆழ்வார்.[40] இவ்விடத்தில் இலங்கைக்கு இறைவன் என்பதற்கு ஸர்வேச்வரன் ஸ்ரீவைகுண்டத்தைக் கலவிருக்கையாகக் கொண்டு வீற்றிருந்தாப் போலே காணும் இவனும் (இராவணனும்) இலங்கைக்கு ஈச்வரன் என்று இருந்தபடி'' என்பர் பிள்ளை.[41] இராவணனுடைய தலையை வெட்டி விழுத்தியதை ''தலைபத்து உதிரவோட்டி'' என்று குறிப்பிடுகிறார் ஆழ்வார். அதாவது தலைகள் பனங்குலை உதிர்ந்தாற் போலே உதிர்ந்தனவாம்; மேலும், ஒருதலை அறுக்க மற்றொருதலை முளைத்த வேகம் என்றும் சொல்லுவர். இப்படிச் செய்த காரியத்தை எண்ணி ''ஓர் வெங்கணை உய்த்தவன்'' என்று பாசுரமிடுகிறார் ஆழ்வார். அதாவது, மறுநாள் யுத்தத்திலே வெற்றி தோல்விகள் யாருக்கு என்று சந்தேகப்படும்படியாக ஒருநிலையில்லாமல் பிரமன் முதலானவர்கள் கருதினபோது அத்தலைகளுக்கு உயிரான நெஞ்சிலே ஒப்பற்ற பிரம்மாஸ்திரத்தை விட்டான். இதுபற்றியே ''ஓர் வெங்கணை உய்த்தவன்'' என்று பாசுரமிட்டதாக அனுபவிப்பர் உரையாசிரியர்கள்.[42]

இராவணனை வதம் செய்தபிறகு விபீஷணனுக்கு முடியைக்கொடுத்துச் செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவனாய் பிரமன் முதலானவர்கள் மலர்களால் தூவவும் தோத்திரம் செய்யவும் வீரஸ்ரீ தோற்றம் படியான குளிர்ந்த வடிவோடே நின்றான் இராமன்; இந்த அழகை ஆழ்வார் ''ஓதவண்ணன்'' என்று அனுபவிக்கிறார்.[43] இவ்வாறு இராமாவதார பண்புகளைப்

பெரியபெருமாள் பக்கலிலே ஓரோர் வகைகளாலே ஆழ்வார் கண்டதை உரையாசிரியர்கள் குறிப்பிட்டது அறியற்பாலதாகும்.

### 4.2.1.6.3 நரசிம்மாவதாரம்

எம்பெருமானுடைய அடியவனான பிரகலாத னுடைய விரோதியான இரணியன் தட்டின தூணிலே சிங்கத்தின் முகமும் மனிதனின் உடலும் சேர்ந்து நர சிங்க ரூபமாகத் தோன்றி அவனைக்கொன்று பிரகலா தனைக் காப்பாற்றினான்; இதுபற்றியே ''பரியனாகி வந்த அவுணனுடல் கீண்ட'' என்று பாசுரமிடுகிறார் ஆழ்வார்.[44] அதாவது மிகவும் பருத்த வடிவை உடைய வனாகக் கொண்டு பிரகலாதனை நலியவந்த அசுரனான இரணியனைக் கிழித்துப் பொகட்டான்; அவனே பிரமன் முதலான தேவர்களுக்கும் அணுகமுடியாதவனாய் இருந்தான்; அவனே உலகத்திற்குக் காரணமானவன்; அவனே பெரும் உதவியாளன் என்றபடி. இவ்விடத்தில் இரணியனுடைய பருத்த உடலுக்குக் காரணத்தை உரையாசிரியர்கள் அழகாக எடுத்துக் காட்டியுள்ளனர். சாதாரணமாக இரணியன், எம்பெருமானுடைய குணங் களை நினைத்து கரைந்திருக்கலாம்; அடிமைத் தன்மையை அறிந்து மெலிந்திருக்கலாம்; இறைவனை அனுபவிக்க ஆசைப்பட்டு தளர்ந்த உடம்போட ஒசிந்திருக்கலாம்; இப்படியில்லாமல் நரசிம்மத்துக்குப் பிற்காலிக்கும்படியாக அவன் உடல் பருத்திருந்தானாம்; இவ்விருப்பை ''பரியனாகி'' என்பதற்குச்சேர பொருள் உரைக்கிறார்.[45] ''ஊட்டியிட்ட வளர்த்த பன்றிபோலே இரணியன் உடம்பை வளர்த்தான்'' என்பர் பிள்ளை.[46]

'எல்லா லோகத்திலுமிருக்கிற தமஸ் என்ற இருள் எல்லாம் திரண்டு ஒரு வடிவு கொண்டாப்போலே மிகவும் பருத்தவனாய் மகாமேரு நடந்தாப்போலே எதிர்த்து வந்த திரண்ட தோளையுடையவன்' என்று தேசிகர் இரணியனைக் குறிப்பிடுவது அறியற்பாலதாகும்.[17]

இப்படிப்பட்ட இரணியனுடைய உடலை கிழித்து எறிந்தான் நரசிம்மன்; அப்போது நரசிம்மனுடைய தோற்றத்தை உரையாசிரியர்கள் சித்தரித்துக் காட்டியுள்ளனர். அதாவது "அவுணனுடல் கீண்ட" என்பதனால் மொறாந்த முகமும், நாமடிக்கொண்ட உதடும், செறுத்து நோக்கின நோக்கும், குத்தமுறுக்கின கையுமுடன் நரசிம்மன் காட்சி அளித்தான்; உடனே கண்டபோதே பொசுக்கின பன்றிபோலே உலர்ந்த தாழை நாரை கிழித்தாற்போலே இரணியன் உடலை கிழித்தான்; இத்தகைய நரசிம்மனை "அமரர்க்கு அரிய ஆதிப்பிரான்" என்கிறார். அதாவது 'பிரகலாதனுக்கு எளியனாய் நிற்கிற அவ்வளவு தன்னிலே, பிரமன் சிவன் முதலானவர்களுக்கு கிட்டுவதற்கு அரியனாய் இருப்பான்; தன்னுடைய சாமர்த்தியம் கொண்டு கிட்ட நினைப்பார்க்கு, தயை பண்ணும் அளவிற்கும் கிட்ட முடியாததாய் இருக்கும்; எம்பெருமான் ஒருவனையே பயனாகக் கருதுபவர்க்கு சிற்றத்திலும் கிட்டலாய் இருக்கும் என்று அனுபவிப்பர் உரையாசிரியர்.[18] இந்த அவதாரத்தினால் எம்பெருமான் தன்னுடைய காரணமாம் தன்மையையும், இறைவனாம் தன்மையையும் நிலை நிறுத்தினபடியைச் சொன்னபடி.[19] இவ்வாறு நரசிம்மவதாரத்தின் பண்புகளைப் பெரிய பெருமாள்

பக்கலிலே ஆழ்வார் ஓரோர்வகையில் அனுபவித்ததை உரையாசிரியர்கள் குறிப்பிட்டது அறியற்பாலதாகும்.

## 4.2.1.3.4 கிருஷ்ணாவதாரம்

கண்ணன் இடையனாய்ப் பிறந்து வெண்ணெயை உண்டான்; அந்த வெண்ணெய் உண்டவாயை பெரிய பெருமாள் பக்கலிலே அனுபவித்தஆழ்வார் ''கோவல னாய் வெண்ணெய் உண்ட வாயன்'' என்று பாசுரமிடு கிறார்.[50] இதுபற்றியே .'களவுகண்டு ஒளித்து வந்து கிடக்கிறவன்' என்றும், பெரியபெருமாள் கொறுட்டை மோந்துபார்த்தால் இப்போதும் வெண்ணெய் நாறா நிற்கும்' என்றும் உரைப்பர்.[51] அடியாருடைய உடைமை யாகையாலே அவர்கள்கையால் தொட்டதன்றோ அன்று; இன்றும் முழுமையாக அந்த குணுங்கு நாற்றம் வாயிலே தோன்றும்படியன்றோ பெரியபெருமாள் கண்வளர்ந் தருளுவது'' என்று அனுபவிப்பர் நாயனார்.[52] திருவாய்ப் பாடியில் இடைக்குலத்துக்குத் தலைவனாய் இருந்ததால் ''அண்டர்கோன்'' என்று பாசுரமிடுகிறார். இப்படிப் பட்ட வெண்ணெய்உண்டவாயனாவன் ஆழ்வார் உள்ளத்தை கவர்ந்தானாம்; எங்ஙனேயெனில், அந்தத் திருவாய்ப்பாடியில் பெண்கள் உறிகளிலே வெண் ணெயை வைத்து கள்ளக்கயிறு உருவியிட்டு வைத்துப் போவார்கள்; அந்த உறிகளின் குறி அழியாது இருக்க அந்த வெண்ணெய்களை வெறும் தரையாக்கினாப் போலே இந்த பெரிய பெருமாளும் ஆழ்வாரின் சிந்தை யைக் கவர்ந்தானாம். இதுபற்றியே ''வெண்ணெய் உண்ட வாயன் என்னுள்ளம் கவர்ந்தானை'' என்று பாசுரமிடுகிறார். மேலும் ''கலமிருக்க வெண்ணெய்

குடிபோனாப் போலே ஆய்த்து, இவர் உடம்பிருக்க அகவாய் குடிபோனபடி'' என்று ஆழ்வார்பால் ஈடுபட்டு உரைப்பர் நாயனார்.[53] இவ்வாறு, கண்ணனும் இருந்த இருப்பும் பெரிய பெருமாள் பக்கலில் ஆழ்வார் ஈடுபட்டதைக் காணமுடிகிறது.

### 4.2.1.4 உள்ளுறை நிலை (அந்தர்யாமித்துவம்)

ஆழ்வார் பெரியபெருமாளை அனுபவிக்கும் போது தன்னுடைய பழமையான பாபங்களைப் போக்கித் தன்னிடத்தில் அன்பு வைத்து தன்னுடைய இதயத்திலும் புகுந்துவிட்டான் என்பதற்குச்சேர ''என்னைத்தன் வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றி என்னுள் புகுந்தான்'' என்று பாசுரமிடுகிறார்.[54] இதனால் அந்தர்யாமி பிராம்மணத்தில் சொல்லுகிறபடியே எல்லா இடத்திலும் எம்பெருமான் பரந்திருக்கும் தன்மையின் ஆற்றல் சொல்லப்பட்டது என்று கூறுவர் உரையாசிரியர்கள்.[55] மேற்கூறிய தொடரில் ''வைத்ததன்றி என்னுள் புகுந்தான்'' என்பதற்கு ஆழ்வாருடைய கொடிய பாபங்களை வாசனையோடே போக்கி தானறிந்த பக்தியாகிய அறிவுக்கு எம்பெருமான் தன்னையே இலக்காக்கி வைத்தற்கு மேலே ஆழ்வார் நெஞ்சிலே புகுந்து, அதனால் பாபங்கள் தேய்ந்து போகும்படி பண்ணினான் என்று அனுபவிப்பர்.[56] மேலும், மிகவும் அறிவில் சிறந்தவர்கள் திறத்துச் செய்வதுபோலே ஆழ்வாருடைய தாழ்ச்சி பாராமல் வசிஷ்டன், சண்டாளன் வீட்டிலே புகுருமாப்போலே இவரது மனதிலே எம்பெருமான் புகுந்தான் என்று எம்பெருமானின் உள்ளுறை நிலையின் சிறப்பை எடுத்துக் காட்டுவர் நாயனார்.[57] தேசிகரும்,

''வைத்ததன்றி என்னுள் புகுந்தான்'' என்பதற்கு மற்றவர்க்கு ஆட்படாது தனக்கே என்னை ஆக்கிவைத்த அளவன்றிக்கே முன்பு வேறு பயனில் ஆசையுடைய ஆழ்வார் இதயத்திலே எம்பெருமானையே அனுபவிக்கும் அனுபவத்துக்குத் தன்னையே விஷயமாய்க் கொண்டு, திருடர்களாலே தன் வசமாக்கிக் கொள்ளப்பட்டதான தன்னுடைய, படைவீட்டிலே உள்ள திருடர்களை ஓட்டி அரசன் புகுருமாப்போலே, ஆழ்வார் மனதிலே புகுந்தான் என்று சுவைபட அனுபவிப்பார்.[58]

## 4.2.1.5 மூர்த்தி வழிபடு நிலை (அர்ச்சை)

ஆழ்வார் திருவுள்ளத்தில் எம்பெருமானின் பர, வியூக, விபவ, அந்தர்யாமி ஆகிய நான்கு நிலைகளின் சிறப்போடு ஐந்தாவது நிலையாகிய அர்ச்சாவதாரச் சிறப்பையும் - குறிப்பாக திருவரங்கத்து இறைவன்பால் உள்ளமையையும் காட்டிக் கொடுத்தான். இதுபற்றியே ஆழ்வார் பத்துப்பாடல்களிலும் பாடியுள்ளார். இந்த அர்ச்சாவதார அனுபவத்தில் ஆழ்வார் பாதாதிகேசமாக இறைவனை அனுபவித்தது குறிப்பிடத்தக்கதாகும். இதன் விரிவாக்கம் அழகியல் பகுதியில் விவரிக்கப் பட்டுள்ளது.[59] அதில் அர்ச்சாரூபியாய் திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பற்றியும் ஆழ்வார் அனுபவித்த விதம் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறாக இறைவனுடைய ஐந்து நிலைகளும் இப்பிரபந்தத்தில் அமைந்துள்ளது சிறப்புமிக்கதாகும்.

இவ்வாறு இறைநிலைகளின் வகைப்பாட்டில் அமலனாதிபிரானில் உட்பொதிந்த கருத்துக்களை

ஆய்வுசெய்தது மட்டுமின்றி உயிர்நிலையின் இயல்பு பற்றியும் அறிவிக்கப்படுகிறது.

## 4.2.2. உயிர் நிலையின் இயல்பு

அர்த்த பஞ்சகத்தில் இரண்டாவது நிலையான உயிர் நிலையைப் பற்றி அமலனாதிபிரானில் உரையாசிரியர்கள் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளனர். திருமந்திரத்தில் "ஓம்" என்ற பிரணவத்தில் மகாரத்தினால் அறிவுடைய ஜீவாத்மா சொல்லப்படுகிறது. அந்த ஜீவாத்மாவின் இயல்பானது திருமந்திரத்தில் "ஓம்" என்ற பிரணவத்தின் முதலெழுத்தான அகாரத்தில் மறைந்த நான்காம் வேற்றுமை உருபுக்குப் பொருளாக (உடைமைப்பொருளாக) எம்பெருமானுக்கு அடிமையாய் இருத்தல் என்று சொல்லப்படுகிறது. இதனை உட்கொண்டு "அடியார்க்கு என்னையாட்படுத்த விமலன்" என்ற தொடரில் "அடியார்க்கு" என்பதனால் ஆத்மாவிற்கு நிலை நின்ற வேஷம் அடிமைத்தன்மை (சேஷத்வம்) என்று குறிப்பிடுகின்றார் நாயனார். மேலும், அடிமை தன்மை அன்றோ இந்த ஆத்மாவிற்கு முதல் அடையாளம் (பிரதம நிருபகம்) என்பர்.[20] பிரணவத்தில் உகாரத்தினால் அடியார்க்கு அடிமையாம் தன்மையும் (பாகவத சேஷத்வம்) சொல்லப்படுகிறது. இது தன்னையே "ஆள்படுத்த" என்ற இடத்தில் - எம்பெருமானுக்கு அடிமையாம் தன்மையிலே நின்றால் மீள்வதில் சந்தேகமுண்டு; ஆனால் அடிமையாம் தன்மை இறையடியார்களளவு சென்றால் இவ்வடிமையை இறைவன் உகப்பான் ஆகையாலே மீளுதல் கிடையாது என்று உயிர் நிலையின் எல்லை நிலமான

அடியார்க்கு அடிமையாம் தன்மையை காட்டி உரைப்பர் உரையாசிரியர்கள்.[61] ஜீவாத்மாவிற்கு ஞானம், ஆனந்தம் ஆகிய இரண்டும் இயல்பாக இருந்தபோதிலும், அடிமைத் தன்மையே முதல் அடையாளமாக "அடியேனை ஆட் கொண்டதே" என்ற தொடரிலே "அடியேனை" என்றச் சொல்லுக்கு சேர காட்டியது அறியற்பாலதாகும்.[62]

இவ்வாறு உயிர் நிலையின் உண்மையை அறிந்து இறைவனை அடைவதற்குரிய நெறியைக் கடைப் பிடிக்க வேண்டும். இதுதன்னையே தக்கநெறி என்பர்.

## 4.2.3 தக்க நெறியின் இயல்பு

தக்க நெறியாவது எம்பெருமானையே நெறியாகப் (உபாயமாக) பற்றுகை, "திருக்கமல பாதம் வந்து" என்பதனால் அந்த எம்பெருமானுடைய திருவடிகளே உபாயமாகும். "வந்து" என்று அதனுடைய உபாய பூர்த்தி சொல்லுகிறது என்பர் நாயனார்.[63] மேலும், திருமந்திரத்தின் நடுப்பதமான "நம:". என்பதனால் "நானும் என்னுடையதன்று, மற்றும் என்னுடையதா வன ஒன்றுமில்லை" என்பதாகும்; வீடுபேறுபெறு வதில் இச்சையுடைய மனம் அகங்காரம் மமகாரம் ஆகியவற்றிற்கு ஆளாகாதபடி எம்பெருமானையே உபாயமாகப் பற்றவேண்டும் இது தன்னையே "சதுரமா மதிள் சூழ்" என்ற பாட்டிலே "திருவயிற்றுதரபந்தம்" என்ற சொற்களுக்குப் பொருளாக உரைப்பர் தேசிகர்.[64]

இப்படி எம்பெருமானையே தக்க நெறியாகக் கொண்டால் தடையாகிய பாபங்களை எம்பெருமான்

போக்குவான். அத்தகைய தடையின் இயல்பு மேலே இயம்பப்படுகிறது.

## 4.2.4 தடையின் இயல்பு

ஜீவாத்மா இறைவனை உபாயமாகப் பற்றி அடைவதற்கு - கர்மத்தினால் வருகின்ற தடையாகிய பாபங்கள் பலபல. இத்தகைய தடை இயல்பைப் ''பாரமாய பழவினை'' என்ற தொடருக்குச் சேர உரைப்பர் உரையாசிரியர்கள்; காலம் அனாதி; ஆத்மாவோ நித்யமாக இருப்பவன்; அசித்தாகிய உடலின் சம்பந்தத்தால் பாபங்கள் சேர்ந்து வருகின்றன; அத்தகைய பாபங்கள் நான்கு விதம்; அவை உடற்பிறவிக்கு காரணமாயும், எடுத்துக்கொண்ட உடலில் பிறக்கின்ற ருசிக்கு காரணமாயும், வேறு தேவதையிடம் பற்று என்றிருக்கும் புத்திக்குக் காரணமாயும் இறைவனைப் பற்றி வேறுபயனைப் பெற்று அகலுவதற்கு காரணமாயுமாக வந்த சுமையாக சேருகின்றன. இத்தகைய பாபங்கள் மூன்று விதமான காரணங்களால் வருவதாகும். அவையாவன:

1. **விதித்த அனுட்டானங்களைச் சரியாக செய்யாததால் வரும் பாபங்கள்;**

2. **தள்ள வேண்டிய தீய ஒழுக்கங்களைத் தள்ளாததால் வரும் பாபங்கள்;**

3. **பாபகர்மாக்களோடு உறவு கொள்வதனால் வரும் பாபங்கள்; இவை மனம், வாக்கு, செயல் மூலமாக மூன்று விதமாய் இருக்கும். இப்படிப்பட்ட பாபங் களை எம்பெருமானே போக்குகிறான் என்பதை "பற்றறுத்து" என்ற சொல்லுக்குப் பொருளாக உரைப்பர். அதாவது**

அறிவின்மையும், அதனால் செய்யும் கர்மமும், அந்த கர்மமடியாக வரும் பிறவியும் - என்று மூன்றாய் இருக்கை; "அறுத்து" என்பதனால் இவற்றை வாசனை ருசியோடு போக்குகை; அதாவது;

1. அறிவின்மையும், அறிவின்மையால் வரும் வாசனையும், அறிவின்மையால் வரும் ருசியும்;

2. கர்மமும், கர்மத்தால் வரும் வாசனையும், கர்மத்தால் வரும் ருசியும்;

3. தேகமும், தேகத்தால் வரும் வாசனையும், தேகத்தால் வரும் ருசியும்;

*இவ்வாறு தடை இயல்பு சொல்லப்பட்டதாயிற்று. அவனை உபாயமாகப் பற்றினால் தடையைப் போக்குமவனும் அவனேயாய், பின்னர் பெறுவது அவனுடைய கைங்கர்யமாகிய வீடுபேறு ஆகும். எனவே பேற்றின் இயல்பு அறிய வேண்டியுள்ளது.*[66]

## 4.2.5 பேற்றின் இயல்பு

*எம்பெருமானிடம் ஆழ்வார் பெற்ற பேற்றை - பாதாதிகேசமாக ஆழ்வார் அனுபவித்ததை நாயனார் எடுத்துக்காட்டும் வகையில் இங்கே குறிக்கப்படுகிறது.*

*"உள்ளுவாருள்ளிற்றெல்லாம் உடனிருந்தறியா நிற்கச் செய்தேயும் இவரைச் சோதிக்கைக்காக இவற்றையும் இவர்க்குத் தனித்தனியே காட்டி இவரநுபவிக்கும்படி பண்ணுவோமென்று பார்த்தருளி அது செய்யுமிடத்துப் புருஷார்த்தமாக (மனிதன் ஆசைப்பட்டதாக) வேண்டுகையாலே இவருடைய அபேக்ஷை (ஆசை) அறிந்து செய்யவேணும். இல்லையாகில் இவர் நாம்*

அத்தை ப்ரகாசிப்பிக்கக் கொள்ள "ஏரார் முயல்விட்டுக் காக்கைப்பின் போவதே" என்னும் திருமங்கையாழ் வாரைப் போலே நிந்தித்தல், தொண்டரடிப்பொடி ஆழ் வாரைப் போலே "அச்சுவைபெறினும் வேண்டேன்" என்று காற்கடைக் கொள்ளுதல் செய்வரோ, அறிய வேணுமென்று தந்திருவுள்ளத்திலே முன்னோரடிக் கொண்டத்தை அறிந்து இவர், "கடலிலே குளப்படி உண்டாமாபோலே "பூர்ணம்" என்கிறபடியே பெரிய பெருமாள்பாடே எல்லாமில்லையோ, ஆனபின்பு எனக்குப் பெரிய பெருமாளையொழிய வேறொருவரை அனுபவிக்க சர்த்தையில்லை. எனக்குண்டானாலும் அவரையநுபவித்த என் கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்கிறார்."

இங்ஙனம், அறிய வேண்டிய ஐந்து பொருள் களான இறைநிலை, உயிர்நிலை, தக்கநெறி, தடை, பேறு ஆகியன பற்றி அமலனாதிபிரானில் அமைந் துள்ளதை உரையாசிரியர்கள் வழி உணரலாயிற்று. இதனால் ஆழ்வாரின் ஆராதபக்தியாகிய உள்ளுணர்வு அறியலாயிற்று.

## தொகுப்புரை

1. சமயக்கருத்துக்கள் என்ற இவ்வியலில் வைணவச் சமயச் சிறப்பு வளர்ச்சி பற்றிய கருத்துக்கள் எடுத் துரைக்கப்பட்டன. இச்சமயம் ஆழ்வார்கள் பாடல்கள் மூலம் சிறப்பாக வளர்ந்து வரும் மதமாக திகழ்கிறது என்று காட்டப்பட்டுள்ளது.
2. திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரான் மும்மறைகளான திருமந்திரம் துவயம் சரமச் லோகம்

ஆகியவற்றின் விளக்கமாக திகழ்கிறது என்பது தெளிவு செய்யப்பட்டுள்ளது.

3. வேதாந்த தேசிகர் உரையில் திருமந்திரம், துவயம் ஆகிய இரண்டின் விளக்கமாக பிரபந்த தொடக்கப் பாட்டு அமைந்துள்ளதை ஆயப்பட்டது.

4. சரமச்லோகத்தின் பொருள் 'பாரமாய பழவினை' என்ற பாடலில் குறிக்கப்பட்டுள்ளது.

5. முதல் பாட்டில் ஒவ்வொரு சொற்களின் அடிப் படையில் 15 குணங்களின் எல்லையில் எம் பெருமான் இருப்பது தேசிகர் உரை வாயலாக ஆயப்பட்டது அறியலாம்.

6. நாயனாரின் உரையில் அர்த்த பஞ்சகமான ஐம்பொருள் கள் அமலனாதிபிரானில் அமைந்திருப்பது விரிவாக விளக்கியதின்திறன் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

## சான்றெண் விளக்கம்

1. எஸ்.கிருஷ்ணவேணி அம்மையார், ''செம்பொருள்'' முன்னுரை

2. அ.ச. ஞானசம்பந்தன், ''தமிழும் சமயமும்'', உலகத் தமிழ் மாநாடு விழா மலர் ப.1

3. பொன், சௌரிராசன், ''சித்திரச்சிலம்பு, ப.100

4. பெரியவாச்சான்பிள்ளை 'ஸ்தோத்ரரத்னம்'' உரை ப.17

5. எஸ்.கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார், முமுட்சுப்படி வியாக்கியானம் முன்னுரை ப.2

6. பெரியவாச்சான்பிள்ளை, கலியன் அருள்பாடு ப.5,6

7. உபதேச ரத்தின மாலை, மாமுனிகள் உரை ப.25

8. முமுட்சுப்படி, மாமுனிகள் உரை ப.2
9. முனிவாகன போகம், தேசிகர் (அவ) ப.111
10. முனிவாகன போகம், தேசிகர் உரை ப.112
11. மேலது.
12. முனிவாகன போகம், தேசிகர் உரை ப.113
13. மேலது.
14. முனிவாகன போகம், தேசிகர் உரை ப.113, 114
15. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.115
16. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.59
17. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.116,117
18. முனிவாகன போகம், தேசிகர் உரை ப.122
19. அமலன். (அவ) பெ.பிள்ளை, நாயனார் உரை ப.11,12
20. அமலன். பாடல் 1 பெ.பிள்ளை உரை ப.22
21. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.113
22. அமலன். பாடல் 1 பெ.பிள்ளை உரை ப.24
23. அமலன். பாடல் 1 பெ.பிள்ளை, நாயனார் உரை ப.31,32
24. அமலன். பாடல் 7 பெ.பிள்ளை உரை ப.79
25. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.129
26. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.81
27. அமலன். பாடல் 6 பெ.பிள்ளை, நாயனார் உரை ப.67,68

28. மேலது. ப.74
29. அமலன். பாடல் 3
30. அமலன். பாடல் 7
31. அமலன். பாடல் 9
32. அமலன். (அவ) ப.11
33. அமலன். பாடல் 2
34. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.30
35. அமலன். பாடல் 2
36. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.30-32
37. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.118
38. அமல ι. பாடல் 2
39. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.34
40. அமலன். பாடல் 4
41. அமலன். பெ.பிள்ளை உரை ப.51
42. அமலன். பாடல் 4 பெ.பிள்ளை, நாயனார் உரை ப.52,53
43. மேலது, ப.53
44. அமலன். பாடல் 8
45. அமலன். நாயனார் உரை ப.85
46. அமலன். பெ.பிள்ளை உரை ப.85
47. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.130,131
48. அமலன். நாயனார் உரை ப.86

49. மேலது, ப.88
50. அமலன். பாடல் 10
51. அமலன். பாடல் 10 பெ.பிள்ளை, நாயனார் ப.105
52. அமலன். நாயனார் உரை ப.106
53. மேலது.
54. அமலன். பாடல் 5
55. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.65
56. அமலன். நாயனார் உரை ப.61
57. மேலது.
58. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.125
59. அழகியல் கூறுகள் இயல் 5 ப.121-148
60. அமலன். நாயனார் உரை ப.20
61. அமலன். நாயனார் ப.63,64
62. அமலன். நாயனார் ப.63,64
63. மேலது.
64. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.124,125
65. அமலன். நாயனார் உரை ப.59,60
66. அமலன். நாயனார் உரை ப.103,104

# இயல் - 5

# அழகியல் கூறுகள்

அழகியல் ஓர் அறிமுகம் - வைணவத்தில் இறை அழகு - பாணர் அனுபவித்த இறை அழகு - திருப்பாதம் - திருப்பீதாம்பரம் - திரு நாபிகமலம் - திரு வயிற்றுதரபந்தநம் - திரு ஆரமார்பு - திருக்கழுத்து - திருப்பவளவாய் (செய்யவாய்) - திருக்கண்கள் - திருமேனி - திருப்பாணர் போற்றும் திருவரங்கம் - திருவேங்கடம் - தொகுப்புரை.

## அழகியல் கூறுகள்

### 5.0 அழகியல் ஓர் அறிமுகம்

இயற்கை அழகையோ செயற்கை அழகையோ நுகரும்போது உள்ளத்தில் பொதுவாக எழும் உணர்ச்சி களே அழகின் அடிப்படை என்றும், உள்ளத்தில் தோன்றும் மகிழ்ச்சியென்றும் சொல்லப்படுகிறது.[1] அழகுடைய பொருள்கள் மனதில் எழுப்பும் உணர்ச்சி களை அவற்றிற்கே உரியனவாக எண்ணி மகிழ்வதே அழகின் தன்மை என்றும் கூறலாம். ஆயினும் மன மானது அழகுள்ள பொருளோடு ஒன்றிவிடும்போது ந

மனத்தில் தோன்றும் உணர்ச்சிகளை அழகு என்று சொல்லால் வெளிப்படுத்துகிறோம். அழகு தருகின்ற மகிழ்ச்சியானது மற்றபொருள்கள் தருகின்ற மகிழ்ச்சியைப் போன்றதன்று, அந்த மகிழ்ச்சியானது முத்தி நிலையில் அடையும் மகிழ்ச்சியை ஒத்தது என்று அலங்கார சாஸ்திரங்கள் கூறுகின்றன. அழகிலிருந்து மகிழ்ச்சியேயல்லாது வருத்தமோ, பயமோ, வேதனையோ எவ்வுணர்ச்சிகளும் எழாது.[2]

''அழகைப் பற்றி எண்ணாத இடமுமில்லை; பேசாத இடமுமில்லை; போற்றாத இடமுமில்லை; அழகின்மாட்டு உலகங்கொண்டுள்ள பற்று போலவே வேறெதன் மாட்டும் அஃது அப்பற்றுக் கொண்டில்லை. 'அழகு அழகு' என்றே உலகம் அழகில் உறைந்து நிற்கிறது. இவ்வாறு அழகுடன் வாழும் உலகை நோக்கி அழகு எப்படிச் சிறப்புற்றுள்ளது என நோக்கின் அந்த நுட்பத்தின் சிறப்பை நம்மால் போற்ற முடியாது'' என்பர் திரு.வி.க. அவர்கள்.[3] அத்தகைய அழகைத்தான் நக்கீரனார் ''கைபுனைந்தியற்றாக் கவின் பெறுவனப்பு'' என்று கூறுவர்.[4] அழகினைப்பற்றிய உணர்ச்சி அகத்தே தோன்றும்போது, அவ்வுணர்ச்சியை ஓர் ஒழுங்குபடுத்தி அழகான பொருள்களிடம் தெளிவான நிலையில் வைத்து உணரும் போதுதான் அழகின் தோற்றம் நன்கு அமைகிறது.[5] இயற்கை அழகைக்காணும் போது, குறிப்பாக சூரிய கிரணங்கள் வானத்திலுள்ள நீர்த்திவலைகளில் படிந்துவரும் போது அது வானவில்லாக வடிவெடுக்கிறது. வானவில்லில் ஏழுநிறங்கள் இருக்கின்றன. நிறத்தை ஏழுபடித்தரங்களில் வைத்து நாம்

அறிகிறோம். ஒவ்வொரு படித்தரமும் நிறத்துக்குரிய ஞானபூமியாகிறது. இப்படியாக நிறத்துக்கு ஏழு ஞானபூமிகள் இருக்கின்றன. அதே பாங்கில் அழகுக்கும் ஏழுவித நிலைகள் இருக்கின்றன. அவை ஒளி, சுவை, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புலன்வாயிலாக அழகு நுகரப்படுகிறது. பிறகு, எண்ணம் அல்லது கருத்தில் அழகு நிறைந்திருக்கிறது. இறுதியாக ஒழுக்கம் அல்லது நல்வாழ்வில் அழகு திகழ்கிறது என்று ஆராய்ச்சியாளர் கள் கூறுவர். மேலும், இந்த அழகு இறைவனின் அழகு வெளியீடாக உலகம் முழுவதும் பரவியுள்ளது.[6] இறைவனின் தெய்வீக வாழ்க்கையின் இயல்பினை மனிதன் உணருவதற்கு ஏற்ப புதிய கடவுட்கோட்பாடு ஒன்று தேவைப்படுகிறது. அன்பு, கருணை, அழகு ஆகிய மூன்றின் மொத்த வடிவமாக இறைவன் இருப் பதற்கு கடவுளின் அழகியல் தத்துவத்தின் தோற்றமாக இது உள்ளது.[7] இந்த அடிப்படையில் பக்தியின் மூலமாக இறை அழகை அனுபவிக்க இடமுள்ளது.

## 5.1 வைணவத்தில் இறை அழகு

பக்தி என்பது தமிழர்களின் வாழ்க்கைக் கூறாக இருப்பதைச் சங்ககால பாடல்கள் காட்டுகின்றன. சிலப்பதிகாரத்தில் பக்திப்பாடல்கள் பல உள்ளன. தென்னகத்தில் தோன்றிய புராணங்கள் இறைவனின் அருள்மயமான தன்மைகளை ஆன்மீக மொழியில் பாடின. தமிழ் இலக்கியத்தில் ஆழ்வார்களின் பாடல் களில் காணப்பட்ட கடவுளின் அழகியல் கோட்பாடாக மலர்ந்த மனிதப்படுத்தும் அனுபவம் இலக்கியங்களுக்கு

மூலமாயின. வடமொழி வேதங்களுக்கு உள்ளடக்கத்தாலும் தரத்தாலும் இணையானவை என்று ஆழ்வார் பாசுரங்களை நிறுவிய இராமானுசர் விஷ்ணுவைப் "புவன சுந்தன்" என்று அழைத்தார். கோயில்களில் எழுந்தருளியுள்ள இறைவன் திருமேனிகளில் வெளிப்படும் நிலையை அர்ச்சாவதாரம் என்று சொல்லுவர். இது மேலும், அழகியல் செயற்பாடுகளுக்கு வழிவகுத்தது. எண்ணற்ற விழாக்களும், ஆடல்களும், நாடகங்களும் கோயில்களில் இடம்பெற அர்ச்சைகள் உதவின.[9]

இறைவனுடைய சொரூபமானது வைணவத்தில் பரநிலை (விண்ணாட்டு நிலை) வியூக நிலை (வகுப்பு நிலை) விபவம் (பிறப்பு நிலை) அந்தர்யாமி (உள்ளுறை நிலை) அர்ச்சை (மூர்த்தி வழிபாட்டுநிலை) என்று ஐந்து பிரகாரத்தோடு கூடியிருக்கும் என்பர் பிள்ளை லோகாசாரியார். இதில் அர்ச்சாவதாரமாவது - கண்டு பற்றுகைக்கு எளிதாய் இருக்கும். அதாவது, ஒருவருக்கு விருப்பமான பொருளிலே பிறப்பு நிலை போலன்றிக்கே ஒரு இடம், ஒரு காலம், ஓர் அதிகாரி என்ற வரம்பில்லாதபடி எழுந்தருளியிருந்து குற்றங்களைக் காணாக் கண்ணிட்டு அர்ச்சகரின் இட்டவழக்கமான எல்லாவற்றையும் உடையவனாய்க் கொண்டு கோயில்களிலும் வீடுகளிலும் எழுந்திருக்கும் நிலை என்பர்.[10] மேலும்,

> "ருசி ஜனகத்வமும் சுபாச்ரயத்வமும் அசேஷ
> லோக சரண்யத்வமும் அனுபாவ்யத்வமுமெல்லாம்
> அர்ச்சாவதாரத்திலே பரிபூர்ணம்" என்பர்

பிள்ளைலோகாசார்யர். அதாவது, சாத்திரங்களைக் காட்டித் திருத்த முடியாமல் வேறு விஷயங்களில் ஊன்றிப்

பாராமுகமாய் இருக்கும் ஜீவர்களுக்கு இறைவன் தன்னுடைய திவ்ய மங்கள வடிவைக்காட்டி வள்ளல் தன்மை முதலான குணங்களாலே பாராமுகத்தை மாற்றித் தன்னிடத்திலே ஆசையை உண்டுபண்ணும். ஆசை பிறந்த பிறகு இறைவனைத் துதிப்பவர்களுக்குக் கண்ணுக்கும் நெஞ்சிக்கும் எளிதாம்படி காட்சி கொடுப்பது அர்ச்சாவதாரத்தின் முழுத்தன்மையாகும். அதுமட்டுமின்றிக்கே எம்பெருமானையே உபாயமாகப் பற்றும் போது, ஒருவனுடைய குணங்களை ஆராயாமல் எல்லா உலகங்களில் உள்ளவர்களுக்கும் எம்பெருமான் தன்னைப் பற்றும் படியாக இருக்கும்; இப்படி உபாயமாகக் கொண்டு வைகுண்டத்திலே போனால் பெறும் அனுபவம் மாத்திரமன்றிக்கே, பிரிதொன்றுக் கில்லாத சிறப்பின் தன்மையறிந்தவர்களில் ஒருவரான திருப்பாணாழ்வார் அருளியபடியே ''என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'' என்று திருப்பாதம் முதல் திருமுடிவரை அனுபவித்ததை யெல்லாம் அர்ச்சாவதாரத்தில் முழுமைபெற்றது என்றபடி.[12] இவ்வாறு அர்ச்சாவதாரத்தின் முழுமை திருவரங்கன் பெற்றிருப்பதை பாண்பெருமாள் பாடல் கொண்டு மாமுனிகள் காட்டியது அறியற்பாலதாகும். அந்த அரங்கனின் அவயவ அழகு, திருமேனி அழகு ஆகியவற்றை ஆழ்வார் உள்ளமறிந்து ஆசாரியர்கள் எவ்வெவ்வாறெல்லாம் எடுத்துக் காட்டியுள்ளனர் என்பதை வகைப்படுத்திக் காணமுடிகிறது.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் ஆழ்வார்கள் திருவரங்கனின் அழகின் சிறப்பைப் பல பாடல்களில் பாடியிருந்தாலும், திருப்பாணாழ்வார் அருளிய

அமலனாதிபிரான்தான் அவருடைய அவயவ அழகை முழுவதுமாக பிரதிபலிப்பிக்கும் பிரபந்தமாக இருக்கிறது. திருவரங்கப் பெருமானாகிய பெரிய பெருமாள் தன் அவயவ அழகை அடுத்தவர் (திருப்பாணாழ்வார்) பாடி அதைக்கேட்டு உகப்பு அடைய வேண்டும் என்பதற்காகவே, அமலனாதிபிரான் என்ற பிரபந்தத்தைப் பாடவைத்தார் என்று கருதவேண்டியதாக உள்ளது. இப்பிரபந்தத்தில் பெரிய பெருமாளை ஆழ்வார் திருவடி முதல் திருமுடிவரை (பாதாதிகேசமாக) அனுபவிக்கிறார். வைணவ இலக்கியத்தில் இப்பிரபந்தம் முழுமையான அழகியலைப் பெற்றிருப்பது எண்ணத்தக்கதாகும்.

## 5.1.1 பாணர் அனுபவித்த இறை அழகு

திருப்பாணாழ்வாருடைய உள்ளம் திருவரங்கனையே தியானித்துக் கொண்டு இருந்தது. படைப்பின் (ச்ருஷ்டியின்) அழகிய பொருள்கள் எல்லாம் இவருக்கு அந்தப் பெரிய பெருமாளின் அழகுகளையும் ஆச்சரிய சக்திகளையும் ஒப்பிட்டு வெளியிட உதவியது.

> தாமரைப்பூ திருவரங்கனின் திருவடிகளுக்கும் திருக்கண்களுக்கும்
> சிறப்பான அடையாளமாக இருந்தது;
> அந்திவானம் அரங்கனின் பீதாம்பரத்தை நினைவூட்டியது;
> வானத்திலுள்ள மேகங்களின் நிறமும் அந்த மேகத்தின்
> வள்ளல் தன்மையும் முறையே எம்பெருமான் நிறத்தையும்
> கருணையையும் ஞாபகப்படுத்தின;
> அரங்கனின் உந்தியாகிய தாமரையில் இருந்து உலகமே
> உதயசூரியன் இருளை ஓட்டுவதுபோல் மலர்ந்தது;
> அரங்கனது திருமார்பு திருமகள் இருப்பிடமாக இருக்கும்

சிறப்பைக் காட்டியது மட்டுமல்லாமல் அவன் அணிந்திருக்கும்
ஆரத்துக்கு அழகூட்டுவதுபோல் இருந்தது;
திருக்கழுத்து இளம்பாக்குமரம் கழுத்துப்போலே
பசுகுபசுகென்றிருப்பதாய், மூன்று கோடுகளோடு சேர்ந்து
இருந்தது;
திருப்பவளச்செவ்வாய் அனுபவிக்க அரிதாயிருந்தது;

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த அவயவ அழகு கொண்டு விளங்கும் திவ்ய மங்கள திருமேனியில் ஆழ்வார் ஈடுபட்டு அனுபவித்ததைக் கீழே காணலாம்.

### 5.1.1.1 திருப்பாதம்

திருப்பாணாழ்வார் அரங்கன் குடிகொண்டுள்ள இடத்தை நோக்கி மனதில் தியானம் செய்யும்போது முதல் முதலில் திருவரங்கனின் திருப்பாதங்கள் அவரை ஆட்கொண்டன. இதுபற்றியே ஆழ்வார் ''திருக்கமல பாதம் வந்து என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே''[13] என்று பாசுரமிடுகிறார். இதற்கு உரையிட்ட பிள்ளை அந்தத் திருவடிகளானவை ஆழ்வார் மேல் விழுந்து அவரை அடிமை கொண்டதாக கூறுவர்.[14] அந்த திருவடிகளானவை செவ்வியும், குளிர்த்தியும், விகாசமும், பரிமளமும் பெற்றவையான சிறப்புடையவை. மேலும், சூரியனைக் கண்டு அலரும் தாமரைபோலே அடியவரான திருப்பாணாழ்வாரைக் கண்டு அலரும் தாமரையாய்த்து அவனது திருவடிகள் என்பர் நாயனார்.[15] இவ்வாறு திருவடிகளைத் தானே காட்டி ஆழ்வாரை ஆட்கொண்டதை ஒப்பிடும் போது ''ஈன்ற பசு தன் கன்றுக்கு பழைய வாசனையில்லாமையாலே முதலில் தானே தன் முலையை அதன் வாயிலே கொடுக்குமா

போலே அறியாமையில் மூழ்கியிருந்த ஆழ்வாரைத் தன் திருவடிகளைக் காட்டி எம்பெருமான் ஆட்கொண்ட தாகக் கூறுவர்.[16]

## 5.1.1.2 திருப்பீதாம்பரம்

திருவடிகளிலே ஆழங்கால்பட்ட ஆழ்வார் திரு வடிகள் மட்டுமின்றி அதோடு சேர்ந்த திருப்பீதாம் பரத்தின் அளவும் தம் சிந்தையானது ஆசையை உண்டு பண்ணியதால் ''அரைச்சிவந்தாடையின் மேல் சென்ற தாம் என சிந்தனையே''[17] என்கிறார். இவ்விடத்தில் சாதாரணமாக உலகில் ஒரு பொருளை பார்த்த பிறகு மற்றொரு பொருளைப் பார்ப்பதில் ஆசை வைப்பர். அவ்வாறு தான் உணர்ந்து, அந்தப் பொருளை பார்ப் பதில் அனுபவத்திற்கு குற்றம் வரும். ஆகையால் அனு பவமும் அளவுபட்டதல்ல, ஆசையும் முடிந்து போவதும் அல்ல. எப்படிக் கடலில் அலையானது கொந்தளிக்கும்போது (வீசும்போது) உள்ளே கிடக்கும் ஒரு துரும்பு கடல் அளவிட்ட அளவே கரையிலே யேறும், அது இல்லாத போது ஒரு அலை வீச ஒரு அலை தள்ள அந்தத் துரும்பானது கரையேறும் என்பர் உரை யாசிரியர்கள்.[18] அந்தவகையில் ஆழ்வாரும் எம்பெருமா னுடைய அவயவங்களில் ஒன்றான திருவடியைப் பார்த்த வுடன் மற்றொன்றினைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணமின்றியே இறைவனது அவயவ அழகு ஆழ்வா ரது மனதை ஒரு அவயவத்திலிருந்து மற்றொரு அவயவத்திற்கு இழுத்துச்சென்றது.

இப்படிப்பட்ட அனுபவத்தில் ஆழ்வார் அரைச் சிவந்த ஆடையை அனுபவிக்கிறார். அதாவது எம்பெரு

மானுடைய திருஅரையில் சாத்திய திருப்பீதாம்பரம் நீலமான திருமேனிக்கு எடுத்துக்காட்டாக (பரபாகமாக) சிவந்திருந்ததாம்; இதைக்கண்டு ஆழ்வார் விழைந்ததை உரையாசிரியர்கள் ''சோற்றின் மேல் எனக்கு மனம் சென்றது'' என்னுமா போலே ஆச்சர்யப் பட்டதாக கூறுவது அறியத்தக்கதாகும்.[19]

ஈன்று அணித்தான நாகு, தன் கன்றுக்கு வாசனை யில்லாமையாலே முதலில் தானே தன் முலையை அதின் வாயிலே கொடுக்கும்; பின்பு சுவடறிந்தால் கன்றுதானே இது காற்கடைக் கொள்ளிலும் மேல் விழுமிறே. அப்படியே திருவடிகள் தானே வந்து போக்யமானபடி சொன்னார் மேலே; இங்கு (திருப் பீதாம்பரத்தை அனுபவித்தபோது) தம்முடைய நெஞ்சு சுவடறிந்து மேல்விழுந்தபடி சொல்லுவதாக அனுபவிப் பர் நாயனார்.[20]

## 5.1.1.3 திருநாபீகமலம்

ஆழ்வாரின் மனது திருப்பீதாம்பரத்திலிருந்து திரு நாபீகமலத்திலே வீசிற்று.[21] தன் திருநாபீகமலத்திலே உலகுக்குக் காரணமான பிரசித்திபெற்ற பிரமன், சிவன் முதலானோர்களைப் படைத்ததைக்காட்ட, ''அந்தி போல் நிறத்தாடையும் அதன்மேல் அயனைப் படைத்ததோர் எழில் உந்தி மேலதன்றோ அடியேன் உள்ளத்தின்னுயிரே''[22] என்று பாசுரமிடுகிறார். அந்த நாபீகமலம் வடிவெடுத்தாற்போலே தன்னுடைய மேன்மையையும், அழகையும் காட்டி திருப்பீதாம்பரத் திலே ஆட்பட்ட ஆழ்வாரின் மனதைத் தன்பக்கலிலே இழுத்துக்கொண்டது என்பர் நாயனார்.[23] திருமேனி

யோடு சேர்ந்த திருப்பீதாம்பரத்தின் அழகுக்கு மேல் படைப்புக் கடவுளான நான்முகனைத் தன் பக்கலிலே உண்டாக்கி அதுகாரணமாக வந்த மேன்மையால் உண் டான ஒப்பற்ற அழகை உடையதாக அன்றோ திருநாபீக மலம் இருக்கிறது என்று அனுபவிப்பர். சாதாரணமாக, உலகில் ஒருதாயின் அழகு பிள்ளைப்பேறு வரையில் தான் இருக்கும்; ஆனால் நான்முகனைப் பெற்றெடுத்த பிறகும் அழகு குலையாமல் எம்பெருமான் ஒளியுடன் இருக்கிறானாம்; இது பற்றியே ச்வேதாச்வதரோபநிடத மும் எம்பெருமான் பிரமனைப் படைத்த பிறகும் ஒளிமிக்கவனாய் இருக்கிறான் என்று கூறுகிறது.[34] இப்படி சிறப்பு வாய்ந்த திருநாபீகமலம் பதிநான்கு உலகங்களையும் படைக்கும் இடமாயும், பிரமனைப் படைத்த இடமாயும் இருப்பதாகக் கூறுவர் பிள்ளை.[35]

### 5.1.1.4 திருவயிற்றுதர பந்தநம்

ஆழ்வாரின் உள்ளம் திருநாபீகமலத்தின் அழகில் சுழியாறு படுகிறபடியைக் கண்டு திருநாபீகமலத்திற்கும் இருப்பிடமான உதரபந்தநத்தின் மேல் சென்றது.[36] அதாவது ''திருவயிற்று உதரபந்தம் என்னுள்ளத்துள் நின்று உலாகின்றதே''[37] என்றபடி. பெரிய பெருமாள் திருவயிற்றில் இருக்கிற மூன்று மடிப்புகளானது - மூன்று வகைப்பட்ட அறிவுள்ள பொருளான பத்தர்கள், முக்தர்கள், நித்ய சூரிகள், மூன்று வகைப்பட்ட அறிவற்ற பொருள்களான பிரக்ருதி, பரமபதம். காலம் ஆகியவற்றை எண்ணுவது போல அவற்றை நியமிக்கும் தன்மையாகிற ஐச்வர்யத்தை வியாக்யானம் பண்ணு கிறது; தாமோதரனென்னும் திருநாமத்துக்கு அடியான

தாம்புத்தழும்பானது அடியார் இட்டவழக்காயிருப் பதைச் சொல்லுகிறது. உதரபந்தனமென்கிற ஆபரண விசேஷமானது மேற்கூறிய மேன்மைத்தன்மை, எளி வந்த தன்மை ஆகிய குணங்களிரண்டுக்குமாகக் கட்டின பட்டமாகவும் திருவயிற்றில் மூன்று மடிப்புகள் திகழ் கிறது என்பதைப் பட்டர் உரைத்தது மூலம் அறியலாம்.[28] அழகுக்கு அழகேற்றுதல் போன்ற திருவுதரபந்தநம் பெற்ற வயிற்றுக்குப் பட்டங்கட்டினபடி என்றும் கூறுவர்.[29]

## 5.1.1.5 திரு ஆரமார்பு

உதரபந்தனத்தை அனுபவித்த ஆழ்வாருக்கு அதற்கும் மேலாக உள்ள திருமார்பின்மேல் ஈடுபாடு உண்டாயிற்று; இதுபற்றியே ''திருவாரமார்பதன்றோ அடியேனை ஆட்கொண்டதே''[30] என்று பாடுகிறார். எம்பெருமானின் திருமார்பானது பெரிய பிராட்டியாரை யும் முத்துமாலையையும் ஆரத்தையும் உடையனவாய், சுலபமாக அடைவதற்கு உரியதாய் தாயின் நிழலில் ஒதுங்கும்படியாய் இருந்தது திருமார்பு என்றபடி.[31] முற்கூறியபடியே அரங்கனின் அழகிய மார்பில் அழகிய ஆரம் இருக்கிறது. அந்த ஆரத்துக்கும் அழகைக் கொடுக்கும்படி இருக்கிறதாம் அவன் திருமார்பு. ஆபரணத்துக்கும் அழகு கொடுக்கும் எம்பெருமான் அல்லவா அவன் என்று சொன்னபடி.[32] மேலும், அந்த திருமார்பின் சிறப்பு, ராஜ்யத்தை இழந்த ராஜபுத்திரனை அழைத்து முடிசூட்டுமாபோலே அழகிலே அழுந்தின ஆழ்வாரைப் பிழைப்பித்தாகக் கூறுவர்.[33] திருமார் பானது எல்லாக் காலமும் அறிவற்ற பொருளான

ஸ்ரீவத்ஸம் அறிவுள்ள பொருளான கௌஸ்துபம் ஆகிய இரண்டையும் தரித்துக்கொண்டிருக்கிற பெரியமதிப்பையும் உடையதாய் இருக்கும். அவனுடைய இருப்பு, வளர்ச்சி ஆகியவற்றுக்கு அடைகொளியாய் நீர்மைக்கு எல்லை நிலமான பெரிய பிராட்டியாருக்குக் கோயிற் கட்டணமாய் இருக்கிற ஏற்றத்தையும் உடையதாய் இருக்கும். அப்படிப்பட்ட திருமார்பானது விண்ணுலகையும், மண்ணுலகையும் ஆள்கின்ற எம்பெருமான் என்பதைத் தெரிவிக்குமதான தனிமாலையை அணிந்து கொண்டுள்ள வடிவை உடையதாக இருக்கிறது.[34]

### 5.1.1.6 திருக்கழுத்து

ஆழ்வாரின் அழகின் அனுபவம் திருமார்பிலிருந்து திருக்கழுத்திலே ஏறிட்டது. அதாவது ''அண்டரண்ட பகிரண்டத்தொருமாநிலம் எழுமால் வரை முற்றும் உண்ட கண்டம் கண்டீரடியேனை உய்யக் கொண்டதே''[35] என்று பாடுகிறார். எம்பெருமானின் திருக்கழுத்தானது பிரளய காலத்தில் அனைத்துலகையும் அமுது செய்ததின் பிரதிபலிப்பைக் காட்டுவதைச் சொன்னவாறு.[36] இப்பெரிய பெருமாளின் திருக்கழுத்தை ஸ்ரீபாஞ்சசன்யத்தோடு ஒப்பிட்டுச் சொல்லுவர் நாயனார். அதாவது இளங்கமுக மரத்தின் கழுத்துப்போலே பசுகு பசுகென்றிருப்பதாய் மூன்று ரேகைகளுடன் கூடியதாய், இருபக்கமும் நெருங்கி நடுவு பருத்திருக்கையாலும், மொசுகு மொசுகென்றிருக்கிற நாதத்தை உடையதாயிருக்கையாலும், ஸ்ரீபாஞ்சசந்யம் போலே இருக்கிற திருக்கழுத்தின் பெருமை பேசப்படுவதை சொன்னவாறு.[37] மேலும் நீண்ட நாட்களுக்கு முன் தோடணிந்தவர்களின் காதில் அத்தோட்டின் அடையாளம் எவ்

வாறு இப்போது இருக்குமோ, அவ்வாறு எம்பெருமான் பிரளயகாலத்தில் தான் உலகங்களை உண்டதின் அடையாளத்தைக் காட்டும் திருக்கழுத்து என்பர்.[38]

## 5.1.1.7 திருப்பவளவாய் (செய்யவாய்)

ஆழ்வார் இப்படித் திருக்கழுத்தை அனுபவித்த தனால் உண்டான ஆற்றமுடியாத ஆசையானது அரங்கனது பவளவாய் மீது அனுபவிக்க முற்பட்டது. இதையே "செய்யவாய் ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே"[39] என்று அனுபவிக்கிறார். பெரிய பெருமாளின் திருப்பவளவாயானது இயற்கையான அழகையும் இனிமையுடையதான சிறப்புமிக்கதா யிருக்கும். மேலும், இவ்வாயானது காண்போரைத் தன்னுடைய புன்முறுவலைக்காட்டி அருகே சேர்த்துக் கொண்டு அவர்கள் மனதைக் கவரவல்லதாய் இருப்பது மாகச் சொல்லுவர். சாதாரணமாக மனிதர்கள் பெண்கள் பொய்ச்சிரிப்பிலே துவக்குண்பர். அப்படிப் பட்டவர் களுக்கு எம்பெருமானின் புன்முறுவலைக் கண்டால் பொறுக்க முடியாததாய், அனுபவிக்க அரிதாய் திருவதரமும் சிவப்பும் உள்ள திருப்பவளச் செய்யவாய் என்று உரையாசிரியர்கள் ஒருமிடறாகக் கூறுவர்.[40] மேலும், தேசிகர் எம்பெருமான் வாயானது வைய மேழும் உள்ளே காணலாம்படியான செய்யவாய் என்று உரைப்பது குறிப்பிடத் தக்கதாகும்.[41]

## 5.1.1.8 திருக்கண்கள்

வாய் அழகைக் கண்ட ஆழ்வாருக்குத் தனது ஒப்பற்ற கண்ணழகைக் காட்டினான் எம்பெருமான்.

எனவே ''கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ் வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள்.''[42] என்று பாசுரமிடுகிறார் ஆழ்வார்.

இங்குக் கண்ணழகின் வண்ணத்தையும், அகலத்தை யும், அலை எறிகையையும், ஓட்டத்தையும், நீட்சியை யும் அனுபவித்தது ''என்னைப் பேதமை செய்தனவே'' என்று தன் உள்ளத்தின் உணர்வுகளையெல்லாம் வெளிப்படுத்துகின்றார்.

''கரியவாகி'' என்பதனால் தாமரைபோலே வெளுத்திருக்கிற திருக்கண்களுக்கு தோற்றப்பொலி வாக இரு கருவிழிகளை உடையதைச் சொன்னபடி; அல்லது மையினால் கறுத்திருக்கும் தோற்றத்தைச் சொல்லுவர் நாயனார்.[43] தாகம் கொண்டவர் முகத்திலே நீர் வெள்ளத்தை வெட்டி விட்டாப் போலேயிருக்கிறது என்று அனுபவிப்பர் பிள்ளை.[44] நிகரில்லாத நீலரத்நம் போலே இருக்கிற தாரகையின் நிறத்தாலே நீலோத்பல வர்ணங்களானவை என்பர் தேசிகர்.[45]

''புடைபரந்து'' என்பதனால் கடலை குளமாக்கி னால் போலே விசாலமாக இருக்கிறபடி.[46] அன்று மலர்ந்த தாமரைபூப் போலே அனுபவிப்பவர்க்கு விரிந்து மலர்ந்திருந்ததைச் சொன்னபடி.[47]

''மிளிர்ந்து'' - என்பதனால் அலை வீசி கரை யாலும் வழி போகாதபடி மிளிர்ந்து இருப்பதைச் சொன்னபடி.[48] ஆசையுள்ளோர் பக்கலிலும் ஆதரம் தோன்றும்படியான உல்லாசத்தை உடையனவாய் இருப்பதைச் சொன்னவாறு.[49]

''செவ்வரியோடி'' என்பதனால் ஸ்ரீய:பதித்வத்தாலும் (திருமகளோடு கூடியிருக்கும் தன்மை) தாயன்பு பெற்றிருப்பதாலும் சிவந்திருப்பதைச் சொன்னபடி.[50] ஆசையுள்ளோர் பக்கலிலே அனுராகத்திற்குக் கிற்றெடுக்கலாம் படியான சிவந்தவரிகளால் குடிகொண்டுள்ளதைச் சொன்னபடி.[51]

''நீண்ட'' என்பதனால் ஒழுங்காகக் காதுவரை நீண்டுள்ளதைச் சொன்னபடி.[52] இயற்கையான ஆயாம விஸ்தாரங்களையுடைய கண்கள் என்று சொன்னவாறு.[53]

''அப்பெரியவாய கண்கள்'' என்பதனால் மிகுதியான அழகைச் சொல்லுவதில் சிறப்பு.[54]

இவ்வாறாக எம்பெருமானின் திருக்கண்களின் அழகை ஆழ்வார் அனுபவித்ததின் வாயிலாக உரையாசிரியர்கள் சுட்டிக்காட்டுவது அறியற்பாலதாகும்.

## 5.1.1.9 திருமேனி

எம்பெருமானின் அவயவங்கள் அனைத்தையும் அனுபவித்த ஆழ்வார், திருமேனியை ''கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்லதோரெழில் நீல மேனி ஐயோ!''[55] என்று அனுபவிக்கிறார். அதாவது உலகில் சாதாரணமாக அரசர்கள் பகைவர்களுடன் போர் புரியப்போகும்போது நால்வகைப்பட்ட படைகளைச் சேர்த்துக்கொண்டு அணி அணியாகச் சிலர் மேலே ஏறிப்போர் புரியச்செல்வர். அந்த வகையில் பெரிய பெருமாளுடைய திருமேனியானது அவயவங்களையும் ஆபரணங்களையும் சேர்த்துக் கொண்டு தன்னுடைய முழுமையான தோற்றப்பொலிவோடு விளங்குமாம்.[56]

இங்ஙனம், பெரிய மதிப்புடைய ரத்நங்களாலே செய்யப்பட்ட ஆரமும் முத்துமாலையையும் உடைய எம்பெருமானின் திருமேனி எல்லை காணவொண்ணாத பளபளப்பால் வந்த அழகைச் சொன்னபடி.[57] மேலும், ஸ்ரீ கௌஸ்துபம் (ஜீவாத்மா ஸ்வரூபம்) போலே பெருமையுடையதும் பெருமதிப்புள்ள மாணிக்கங் களாலே அழுத்தப்பட்ட அலங்காரமான ஆரத்தையும், மூன்றுசரம், ஐந்துசரம், ஏழுசரம் என்றாப் போலே திருமேனியின் மேன்மைத் தன்மைக்குத் தக்கபடி குளிர்த்தியையுடையதாயிருக்கும். இப்படி ஆரத்தோடும் முத்துவடத்தோடும் காணும் எம்பெருமான் திருமேனி அளவிடமுடியாத அழகுடன் கூடியிருக்கும். இந்த சமுதாய சோபையை நெய்த்த (பளபளப்பான) திருமேனி என்பர் நாயனார்.[58] ஆழ்வாரின் உள்ளத்தழகில் ஈடுபட்ட தேசிகரும் காளமேகம் போலே சிரமத்தைப் போக்குமதான எம்பெருமான் திருமேனியை ஆபரணங் களுக்கு முடிவில்லதோரெழிலை உண்டாக்கும் படியான நீலமேனி போன்றதாக அனுபவிப்பர்.[59]

''கொண்டல் வண்ணன்'' என்பதனால் மழைபெய் யக்கூடிய காளமேகம் போலே இருக்கிற திருநிறத்தை உடையவன் என்றும், பன்னீர்க்குப்பிபோலே அதாவது கண்ணாடி குப்பியில் உள்ளுள்ளவையெல்லாம் புறம்பே நிழலிட்டு காட்டும்படியான வண்ணத்தை உடையவன் என்றும் உள்ளதைச் சொன்னபடி.[60]

''அரங்கத்தரவினணையான்'' என்பதனால் 'மலரின் மலர்த்தியால் மென்மையான அவ்வடிவுக்குப் பொறாதபடி, காடுகளிலும், கரைகளிலும் திருவடி களைக் கொண்டு உலாவின விடாயெல்லாம் தீரும்படி

சீலம், மென்மை, அழகு முதலியவற்றோடு கூடிய திருவனந்தாழ்வான் மேலே கண் வளர்ந்தருளினவன்' என்றபடி.[61]

''ஓதவண்ணன்'' என்பதனால் கண்டவர்களுடைய பாபத்தையும் தாபத்தையும் கழிக்கவல்லமையுடைய கடல்போலே சியாமளமான திருமேனியை உடையவன் என்றபடி.[62]

''அரங்க நகர் மேயவப்பன்'' என்று சொல்வதனால் அழகிய சிறகை உடைத்தான வண்டுகள் உலாவுகின்ற சோலை சூழ்ந்த பெரிய கோயிலிலே தந்தையாகக் கண்வளர்ந்தருளுகிறவன் என்கிறார்.[63]

''கையினார் சுரிசங்கனலாழியர்'' என்பதனால் தெய்வீகமான சங்கு சக்கரங்கள் பெரிய பெருமாளுடைய திருக்கைகளிலுள்ள ரேகையில் ஒதுங்கியிருந்ததால் வந்த அழகிய திருமேனியையுடையவன் என்றபடி.[64]

''எம் ஐயனார்'' என்பதனால் பரமபதத்தில் இருக்கும் மேன்மைத் தன்மையுடைய திருமேனியைப் பெற்றிருப்பதைச் சொன்னவாறு.[65]

''அரவினணை மிசைமேய மாயனார்'' என்பதனால் ரத்நங்களை எல்லாம் தங்கத்திலே புதைத்துக் காட்டுமா போலே தன்னழகு தெரியத் திருவனந்தாழ்வான் மேலே சாய்ந்திருப்பவன்.[66]

''அணியரங்கன்'' என்பதனால் பள்ளி கொண்டிருக்கும் திருமேனியைக்கண்டு நித்ய சூரிகளும் தங்கள் இருப்பிடம் விட்டுத் திருவரங்கத்தே வந்து சேவிக்கப் படுபவன் என்கிறார்.[67]

இவ்வாறாக ஆழ்வார் மனத்தே கண்ட அவயவங்க ளோடு கூடிய திருமேனியை உடைய பெரிய பெரு மாளைப் பல படியாக பெயரிட்டு அழைப்பர். இவ் வழகிலே ஈடுபட்ட ஆழ்வாரை மறுபடியும் எம்பெரு மானே திருமுடி முதல் திருவடி வரை உள்ள அழகை யெல்லாம் சொல்லச் சொன்னாலும் முன் அனுபவித்த அனுபவத்தின் உரைப்பால் ஆற்றல் இல்லை என்று கூறும்படி ஆழ்வார் அனுபவித்ததாகக் கூறுகிறார் நாயனார். மேலும், அப்படியுண்டானாலும் அவரை அனுபவித்த கண்கள் 'மற்றொன்றினைக் காணாவே, என்று ஆழ்வாரின் மனநிலையின் உறைப்பைச் சொல்லுவது அறியற்பாலதாகும்.[68] பெரிய பெருமாள் திருமேனியிலேயே திருமலை முதலாகக் கோயில் கொண்ட அர்ச்சாவதாரங்களிலும், இராமர் கிருஷ்ணர், வாமனர், ஆலிலைக் கண்ணன் முதலானவர்களில் உள்ள அழகையெல்லாம் ஒரு சேர அனுபவித்து, இவ்வழகிலே ஈடுபட்ட ஆழ்வாருடைய கண்கள் மற்றும் பரமபதம், திருப்பாற்கடல், ராமகிருஷ்ணாவதார திருமேனிகளை யெல்லாம் சேரக் காட்டினாலும் மற்றொன்றின் மேல் - அதாவது மற்ற நிலைகள் மேல் ஆழ்வார் மனம் போக மாட்டாது இருந்த இருப்பை, ''எவ்வாறு தாயின் முலையை விரும்பும் குழந்தைக்கு அது மட்டும் ருசிக்குமா போலே'' இருந்ததாகக் காட்டுகிறார் தேசிகர்.[69] இவ் வாறு பாலும், பழமும், கற்கண்டுமான இனிப்புப் பொருள்களைச் சேர்த்து உண்பாரைப் போலே இவ்வரங் கனது அவயவங்களோடான சேர்த்தியால் வந்த அழகை யும் இயற்கையான அழகையுமுடைய திருமேனியின் பசுமை நிறைந்த சோபையை அனுபவித்தார் ஆழ்வார்.[70]

## 5.2 திருப்பாணாழ்வார் போற்றும் திருவரங்கம்

ஆழ்வார் மனத்தே எம்பெருமான் தன் அழகைக் காட்டினான்; அவ்வழகை அனுபவித்த ஆழ்வார் அவன் எழுந்தருளியிருக்கும் இடமான திருவரங்கத்தையும் அனுபவிக்கிறார்; அரங்கனைச் சொல்லும்போதெல்லாம் அவன் இருப்பிடமான திருவரங்கத்தையும் சேர்த்துப் பாசுரமிடுவது அவர்தம் அசைக்க முடியாத அரங்கன் மேலுள்ள பக்தியைக் காட்டுகிறது. அந்த வகையில் திருவரங்கத்தின் அழகு விஞ்சியிருப்பதை அறியலாம். அந்த அழகுக்கு ஏற்றவாறு பசுமையான திருமேனியோடு அரங்கன் திருவரங்கத்தில்அடியவர்களுக்கு காட்சி தருகிறான். இந்தத் திருத்தலத்தை ''திருவரங்கம்'' என்றும் ''கோயில்'' என்றும் மேலும் வடமொழியில் ''ஸ்ரீரங்கம்'' என்றும் கூறுவர். ''கடியார் பொழில் அரங்கம்'' என்று ஆழ்வாரிட்ட தொடருக்கு பரிமளம் நிறைந்த சோலையையுடைத்தான கோயில் என்று கூறுவர் நாயனார்.[71] திருவரங்கமானது பெரிய பெருமாளின் காக்கும் தன்மைக்குத் தகும்படியான மதிளால் சூழப்பட்டுள்ளது என்பதைப் பற்றி ஆழ்வார் ''நீள்மதிளரங்கத்து'' (அத்து - சாரியை) என்று பாசுரமிடுகிறார். இப்படிச்சிறப்புப் பெற்ற இவ்வாழ்வார் பாடல் கேட்டுதான் திருமங்கை ஆழ்வார் திருவரங்கக் கோயிலுக்கு மதிள்களை அமைத்திருப்பார் என்றும் சொல்லுவர்.[72]

மற்றொரு இடத்து, ''வண்டு வாழ்பொழில் சூழ் அரங்கம்'' என்று பாசுரமிடுகிறார். அதாவது வண்டுகள் அரங்கன் பக்கலில் செல்லாமல் சோலையின் அழகிலே

இளமணல் பாய்ந்து கால் வாங்க மாட்டாமல் நிற்பதைச் சொன்னபடி. இங்கே ''வண்டுகள்'' என்றது ஞானம், அனுட்டானம், நன்றாகவே உடைய ஆசார்யர்களைப் பெரிய பெருமாளுக்கு ஆபரணமாய் ஒப்பிட்டபடி; ஊருக்கு ஆபரணம் சோலை; சோலைக்கு ஆபரணம் வண்டுகள்; வண்டுகளுக்கு ஆபரணமாய் இருக்கும் சிறகு என்று திருவரங்கத்தின் எழில்மிகு தோற்றத்தைக் காட்டுவது குறிப்பிடத்தக்கதாகும்.[73] இவ்வாறே திரு வரங்கத்துச் சோலைகளிலே தேன் பெருக்கெடுத் தோடும்; அந்தத் தேனை முழுமையாகக் குடித்த இன்பத்திற்குப் போக்கு வீடாக வண்டுகளானவை கலவியில் வரும் அருமையான ரீங்காரத்தை மதுரமாகச் செய்யும்; வண்டுகள் ரீங்காரம் கேட்டு ''சிந்துக்காவடி'' எடுக்கும் போது ஆடும் பக்தர்களைப் போலே உயர்ந்த மயில்கள் மேகத்தளவு உயர்த்தியைப் பெற்று சோலையில் ஆலித்து ஆடும் என்று திருவரங்கத்தின் காட்சியை நமக்குக் காட்டுவர்.[74] மேலும், நித்ய சூரிகள் முதலாக, மரம், செடி, கொடி வடிவங்களைக் கொண்டு எப்போதும் மணம் கமழ்கிற சோலைகளால் சூழப்பட்ட கோயிலாழ்வாரில் நிற்பர் என்று திருவரங்கத்தின் சிறப்பை எடுத்துரைப்பர் தேசிகர்.[75] இப்படிப்பட்ட திருவரங்கத்திலே சம்சாரத்துக்கு ஆபரணமான கோயி லாழ்வார் போல்வாரைக் காப்பதற்கன்றோ எம்பெரு மான் இட்டிருக்கிறார் என்பர் நாயனார்.[76] இவ்வாறாக ஆழ்வாரின் உள்ளத்தை உணர்ந்து திருவரங்கத்தின் பெருமையை உரையாசிரியர்கள் மூலமாகக் காண முடிகிறது.

## 5.2.1 திருவேங்கடம்

ஆழ்வார் முதல் பாட்டில் பரமபதநாதனானவன் திருவேங்கட முடையானாய்த் திருமலையில் நின்று மனத்தே காட்சி தந்ததை அனுபவித்தார். அப்பெருமான் பரமபதத்தில் இருந்து திருவேங்கடம் வந்து தங்கி, திருவரங்கத்திலே வந்து பள்ளி கொண்டான் என்று கூறி, அவன் தங்கிய திருவேங்கடம் மற்றும் அதன் இயற்கை வளம் பற்றிய சிறப்பையும் கூறுவது அறியற்பால தாகும்.[77] ஆழ்வார் திருவேங்கடவனை ''விரையார் பொழில் வேங்கடவன்''[78] என்பர். அதாவது, திருவேங் கடவன் குடிகொண்டுள்ள வேங்கடம் பரிமளம் நிறைந்த திருச்சோலையையுடையதாகும் என்றும், அத்திருவேங் கட முடையானோ எல்லா நறுமணங்களையுமுடைய வன் என்றும், எல்லா நற்சுவைகளையுமுடையவன் என்றும் உரைப்பர்.[79] திருவரங்கனைப் பாடவந்தவர் திருவேங்கடவனைப் பாடுவானேன்? எனில் ஆற்றிலே அமிழ்கிறவர் ஒரு காலைத் தரையிலே ஊன்றினால் பிழைக்கலாமே என்று எண்ணுவாரைப் போலே, ஆழ்வாரும் பெரிய பெருமாளான அரங்கனின் அழகிலே அழுந்துகிறவர். ஆகையாலே திருமலையில் கால் தாழ்ந்தார். அதுவும் ஒரு மடு என்பதனை இவர் அறிந் திலர். இதற்கு மற்றொரு வகையான பொருளாட்சி உண்டு. அதாவது, ஒருவனைக் கவிபாடும்போது அவனுடைய வரத்துச்சொல்லி கவிபாட வேண்டும். எம்பெருமான் பரமபதத்தில் நின்றும் கண்ணனாய் ஸ்ரீமதுரையில் தங்கி, திருவாய்ப்பாடிக்கு வந்தாப் போலே, ஸ்ரீவைகுண்டத்தில் நின்றும் திருமலையில்

தங்கி, திருவரங்கம் வந்தான். இவன் தங்கிய திருவேங் கடம் பரிமளம் வடிவு கொண்டாப் போலே இருக்கிற திருச்சோலைகளை உடையவையாகையால் இவன் மண்ணவர்கட்கும், விண்ணவர்கட்கும் கண்போன்று நிருவாகம் செய்பவனாக இருக்கிறானாம். ஆகையால் எல்லோருக்கும் ஆச்ரயிக்கவும் அனுபவிக்கவுமாம்படி நிற்கின்றான்.[40]

திருமலையின் அழகை ''மந்திபாய் வடவேங்கட மாமலை''[41] என்று அனுபவிக்கிறார். இங்கே பெண் குரங்குகள் ஒரு கிளையில் நின்றும் மற்றொரு கிளையில் இடைவிடாமல் பாய்ந்தபடியைச் சொல்லுகிறார். மேலும் பரமபதமும், திருமலையும், கோயிலும் திருவரங்கமும், திருவயோத்தையும், திருச்சோலையும் ஒரு சிறப்புப்பெற்ற அழகுடையவைகளாக இருக்கும். அந்த வகையில் திருவேங்கடம் என்கிற வடவேங்கடம் தமிழ் தேசத்திற்கும் எல்லை நிலமாகும். இங்கே இருக்கிற மாமலை அழகின் மிகுதியைக் காட்டவல்ல உயர்த்தியை உடையதாகும். நித்ய சூரிகளும் பரமபதத் தினின்றும் திருவேங்கட முடையானை அனுபவிக்க வரும்போது தன் சிகரத்தில் இளைப்பாறி வரலாம் படியாயிருக்கிற உயர்த்தியை உடையது மட்டுமின்றி, விண்ணாடும் மண்ணாடும் ஒரு மூலையிலே அடங்கு மாப்போலே இருக்கின்ற சிறப்புடையதாகும்.[42] இப் படிப்பட்ட அழகைப் பெற்ற வேங்கடத்திலே தன் திருக்கையாலே உலகமளந்த பொன்னடியைக் காட்டிக் கொண்டு நிற்கிறவனுமாய் அண்டமுற நிவர்ந்த நீண் முடியனுமாய் நிற்கின்றனாம் திருவேங்கடமுடையான்.

அந்தத் திருவேங்கடமுடையான் தான் இங்கே திருவரங்கத்திலே கண்வளர்ந்தருளுகிற பெரிய பெருமாளே என்கிறார்.[83] எனவே ஆழ்வார் திருவரங்கனைத் திருவேங்கடவனாக அனுபவிப்பதில் குறையில்லை.

மேலும், தேசிகர், திருவேங்கடவன் நின்ற நிலையின் அழகைச் சொல்லும்போது, பரமபதத்திலே கைங்கர்ய சாம்ராஜ்யத்துக்கு மீற முடியாத முக்தரும் நித்யரும் ஒளியுடைய உடலைக்கொண்டு தகுந்த கைங்கர்யத்தைப் பண்ணி இவர்கள் அடிமைக்கு ஏற்ப திருமலையில் நின்றான் என்பர்.[84] திருவேங்கடவன் பரமபதத்தினின்றும் தன் நீர்மை என்னும் குணம் பிரகாசிக்கைக்காகத் திருமலையிலே வந்தவாறே விண்ணவர்கோனான தன்னுடைய மேன்மையை அனுபவித்துக் கொண்டு வந்த நித்யசூரிகள், விரையார் பொழில் வேங்கடவனின் நீர்மையை அனுபவிக்கைக்காகத் திருமலையிலே வருவார்கள், அந்நீர்மைக்குக் காரணமான மேன்மையை அனுபவிக்கைக்காகத் திருமலையிலே நின்றும், பரமபதத்திற்குப் போவார்கள். இந்நிலையிலே தனக்கு ஒரு கடமை உண்டென்று வேங்கடவன் நிற்பதாகக் கூறுவர்.[85] அவ்வாறே பிரமன் சிவன் முதலானவர்கள் மாலை நேரத்திலே வந்து சமாராதநம் பண்ண பெரிய மேன்மையோடு திருவேங்கடமுடையான் நின்ற நிலையைச் சொல்லுகிறார் நாயனார்.[86] ''இருள் தருமா ஞாலத்துள் குன்றிலிட்ட விளக்காய் நிற்பவன்'' என்பர் தேசிகர்.[87] இவ்வாறாகத் திருவேங்கடத்தின் அழகின் பெருமையையும் அங்கு நிற்கிற திருவேங்கடமுடையான் அழகையும் காண முடிகிறது.

## தொகுப்புரை

1. அழகியல் கூறுகள் என்ற இவ்வியலில் பக்தியின் மூலமாக இறை அழகை அனுபவிக்க இடமுண்டு என்பது அறியலாயிற்று.

2. திருப்பாணாழ்வார் திருவரங்கத்து இறைவனின் அழகை முழுமையாக அனுபவித்தார். முதல் முதலில் எம்பெருமான் ஆழ்வாருக்குத் தன் திருவடிகளைக் காட்டி ஆட்கொண்டான் என்றும், அவ்வனுபவத்தி னால் திருப்பீதாம்பரம், திரு நாபிகமலம், திருவயிற்று உதர பந்தனம், திரு ஆரமார்பு, திருக்கழுத்து, திருப்பவளவாய், திருக்கண்கள் ஆகியவற்றின் ''கைபுனைந்தியற்றாக் கவின்பெறுவனப்பு'' என்று சொல்லும்படியாக உரையாசிரியர்கள் பலபல உப மானங்களைக் காட்டி ஆழ்வார் அனுபவித்ததை தெளிவாகச் சொல்லுவர்.

3 திருமேனியைப்பற்றி ஆழ்வாருடைய அனுபவ மானது அவயங்களோடு கூடிய அழகோடு அமைந் துள்ளதை ஆயப்பெற்றதாயிற்று.

4. திருவரங்கத்தைப் பற்றி சொல்லும்போது அந் நகரின் இயற்கை வளமும், அந்த இயற்கை வளத்தின் மூலம் அளவற்ற அந்நகரின் அழகின் சிறப்பும் உரையாசிரி யர்கள் உரைத்தது ஆயப் பட்டுள்ளது.

5. திருவேங்கடத்தைப்பற்றி சொல்லும் போது பரம பதத்திற்கு அடுத்து முக்கியமான இடமாக திரு வேங்கடம் இடம்பெற்றுள்ளதை தெளிவு செய்கிறது. இத்திருவேங்கடமுடையானே திருவரங்களாக அரங் கத்திலே பள்ளிக்கொண்டுள்ளான்.

## சான்றெண் விளக்கம்


1. கலைக் களஞ்சியம், ப.238
2. மேலது, ப.239
3. முருகன் அல்லது அழகு திரு.வி.க. ப.13 (1968)
4. மேலது, ப.16
5. அழகுக் கலைத்திறன், செ.வைத்தியலிங்கம் (அணிந் துரை) ப.(ii) (1970)
6. தமிழ் இலக்கியங்களில் வைணவம் (தமிழாக்கம்) சு.வேங்கடராமன் ப.251
7. மேலது.
8. தமிழ் இலக்கியங்களில் வைணவம் சு.வேங்கடராமன் ப.260
9. தத்துவத்திரயம் நூற்பா 42, ஈச்வர சொரூபம் தான் பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம் அர்ச்சாவ தாரம் என்ற அஞ்சு பிரகாரத்தோடே கூடியிருக்கும்.
10. தத்துவத்திரயம் நூற்பா - 60
11. மேலது நூற்பா - 61
12. தத்துவத்திரயம், நூற்பா - 61, மணவாள மாமுனிகள் உரை ப.315
13. அமலன். பாடல் 1
14. அமலன். பெ.பிள்ளை (அவ) உரை ப.17
15. அமலன். நாயனார். உரை ப.25
16. மேலது, (அவ) ப.29
17. அமலன். பாடல் 2
18. அமலன். பாடல் 2 (அவ) பெ.பிள்ளை, நாயனார் உரை ப.29

19. மேலது, ப.37
20. அமலன். நாயனார் உரை ப.29
21. அமலன். பாடல் 3 பெ.பிள்ளை உரை ப.39
22. அமலன். பாடல் 3
23. மேலது, நாயனார் உரை (அவ) ப.39
24. யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்
யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை|
தம் ஹி தேவமாத்ம புத்தி ப்ரஸாதம்
முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே||
25. அமலன். பெ.பிள்ளை உரை ப.45
26. அமலன். நாயனார் உரை ப.45
27. அமலன். பாடல் 4
28. ஸ்ரீரங்க ராஜ ஸ்தவம் 1-115, அமலன். தனியன் உரை ப.6
29. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.55
30. அமலன். பாடல் 5
31. அமலன். பெ.பிள்ளை, நாயனார் உரை ப.63
32. மேலது.
33. மேலது, உரை ப.64
34. அமலன். பாடல் 5 நாயனார் உரை ப.64
35. அமலன். பாடல் 6
36. அமலன். பெ.பிள்ளை (அவ) ப.66
37. அமலன். நாயனார் (அவ) ப.66
38. அமலன். பெ.பிள்ளை உரை ப.74
39. அமலன். பாடல் 7
40. அமலன். நாயனார், பெ.பிள்ளை உரை ப.81
41. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.130

42. அமலன். பாடல் 8
43. அமலன். நாயனார் உரை ப.89,90
44. அமலன். பெ.பிள்ளை உரை ப.89
45. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.131
46. அமலன். உரை ப.90
47. முனிவாகன போகம், தேசிகர் உரை ப.131
48. அமலன். உரை ப.90
49. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.131
50. அமலன். உரை ப.90
51. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.131
52. அமலன். உரை ப.90
53. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.131
54. அமலன். தேசிகர் உரை ப.131 நாயனார், பெ.பிள்ளை உரை ப.90
55. அமலன். பாடல் 9
56. அமலன். உரை ப.93
57. அமலன். பாடல் 9 பெ.பிள்ளை உரை ப.97,98
58. அமலன். நாயனார் உரை ப.97,98
59. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.132
60. அமலன். பாடல் 10 பெ.பிள்ளை (அவ) ப.104
61. அமலன். பாடல் 3 நாயனார் உரை ப.43,44
62. முனிவாகனபோகம், பாடல் 3 உரை ப.124
63. அமலன். பாடல் 5 பெ.பிள்ளை ப.72
64. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.129
65. அமலன். பெ.பிள்ளை உரை ப.79

66. மேலது, ப.80
67. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.134
68. அமலன். பாடல் 10 நாயனார் உரை ப.108
69. முனிவாகன போகம், தேசிகர் உரை ப.136
70. அமலன். நாயனார் உரை ப.101
71. அமலன். நாயனார் உரை ப.36
72. அமலன். பாடல் 1 பெ.பிள்ளை, நாயனார் உரை ப.25
73. அமலன். பாடல் 6 நாயனார் உரை ப.72,73
74. அமலன். பாடல் 4 நாயனார் உரை ப.54
75. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.119
76. அமலன். பாடல் 7 நாயனார் உரை ப.80
77. அமலன். பாடல் 1 நாயனார் உரை (அவ) ப.17
78. அமலன். பாடல் 1
79. அமலன். நாயனார் உரை ப.22 சாந்தோக உபநிடதம் 3-14-2
80. அமலன். நாயனார் உரை ப.22,23
81. அமலன். பாடல் 3
82. அமலன். நாயனார் உரை ப.41
83. மேலது, உரை ப.40
84. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.120
85. அமலன். பாடல் 3 நாயனார் உரை ப.41,42
86. மேலது, உரை ப.43
87. முனிவாகனபோகம், தேசிகர் உரை ப.114

# முடிவுரை

இந்த ஆய்வு மூலம் திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரான் பற்றிய முடிவுகள் பின்வருமாறு கண்டறியப்பட்டுள்ளன.

1. திருப்பாணாழ்வார் பாணர் குலத்தில் பிறந்தவரானாலும், இறைவனால் எந்தப்பாகுபாடுமின்றி ஆட்கொள்ளப்பட்டார். ஆட்கொள்ளும் தன்மையில் இதன் மூலம் இறைவனிடம், ஏற்றத்தாழ்வுகள் இல்லையென்பது புலனாகிறது.

2. ஆழ்வாரைப் போல் மனதை திடப்படுத்திக் கொண்டு ஒருமுகப் படுத்தும்போது நாம் நினைக்கும் குறிக்கோளை அடைய முடியும் என்பது தெரிகிறது.

3. இப்பிரபந்தத்திற்கு அமைந்த தனியன்களின் மூலம் ஆழ்வாரின் பெருமையை விளக்கியது மட்டுமல்லாமல் அவர் தம் தன்னிகரில்லாச் சிறப்பைச் சொல்லுவதாக அமைந்துள்ளது.

4. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இப்பிரபந்தம் பத்து பாடல்களை மட்டுமே கொண்டாலும், திருவரங்கத்து இறைவனை முதல் முதலாக பாதாதிகேசமாக (திருவடி முதல் திருமுடி வரை) ஆழ்வார் அனுபவித்தது எடுத்துக்காட்டமுடிகிறது.

5. அமலனாதிபிரானில் உள்ளடக்கமாக பொதிந்துள்ள பிரணவ சாரமான தொடக்கம், முதல் மூன்று பாடல் களில் அமைந்துள்ளது கண்டு எடுக்கப்பட்டுள்ளது.

6. அமலனாதிபிரானில் வைணவ சமயத்தத்துவமான மும்மறைப் பொருள்கள் பொதிந்துள்ளதை உரை யாசிரியர்களின் உரைகள் மூலம் வெளிக்கொணரப் பட்டுள்ளது.

7. உரை உத்திகளும் உரை நயமும் இப்பிரபந்தத்தை உயர்த்தியவைகளாக காணப்படுகின்றன. அந்த வகையில் உரையாசிரியர்கள் இப்பிரபந்தத்தில் தங்கள் முதிர்ந்த ஞானத்தைக் கொண்டு ஆழ்வாரின் எண்ணத்தை வெளிப்படுத்தினர். இந்த வெளிப் பாட்டினால் உரையில் பல தலைப்புகளில் கீழ் உரை உத்திகளையும், உரை நயத்தையும் தெளிவு பட கண்டுகொள்ளப்பட்டது.

8. சமயக்கருத்துக்கள் இப்பிரபந்தத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றன. தத்துவ நோக்கில் இறைவனின் பண்புகுணங்கள் அவதாரங்கள் ஆழ்வார் மறைமுக மாகக் காட்டியிருந்ததை அறிந்து, அவற்றை செவ்வனே வெளிப்படையாக நிறுவப்பட்டுள்ளது.

9. வேதாந்த தேசிகர் வழங்கிய உரையில் இப்பிரபந்த முதல்பாட்டில் எம்பெருமானுக்கு வீடுபேறு கொடுக்கும் தன்மை, உலகுக்குக் காரணமாம் தன்மை முதலான 15 குணங்களைக் காட்டி சிறப்பித்துள்ளது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

10. அர்த்த பஞ்சகமாகிய இறைநிலை, உயிர்நிலை, தக்கநெறியின் இயல்பு, தடை இயல்பு, பேற்றின்

இயல்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இப்பிரபந்தத்தை வகுத்து ஆயப்பட்டு, அவற்றின் சிறப்புகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

11. திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரான் பிரபந்தம் வைணவ இலக்கியத்தில் முழுமையான அழகியலைப் பெற்றுள்ளதைக் கண்டெடுக்கப் பட்டுள்ளது.

12. இயற்கை அழகோடு எம்பெருமானின் அழகை ஒருமுகப்படுத்திச் சொல்லப்பட்டுள்ளது.

13. அழகியலின் தனித்தன்மை ஆயப்பட்டு அதில் வைணவச் சமய இறையழகின் தனித்தன்மை சொல்லப்பட்டுள்ளது.

14. திருவரங்கத்து எம்பெருமானின் அவயவங்களின் சமுதாய சோபையை ஒவ்வொரு தலைப்புகளின் கீழ் ஆயப்பட்டு அவற்றின் சிறப்பைச் சமய கருத்துக்களோடு சேர்த்து இயம்பப்பட்டுள்ளது.

15. இப்பிரபந்தம் இறைவனை பலதரப்பட்ட அவதார நிகழ்ச்சிகளில் காட்டினாலும், இறைவனானவன் ஒருவனே என்பதை நிறுவுகிறது. எவ்வாறெனில், பரமபதநாதனானவன் ஸ்ரீவைகுண்டத்தில் நின்றும் திருமலையில் தங்கி, திருவரங்கம் வந்து பள்ளிக் கொண்டான் என்பதன் மூலம் பரமபதநாதனே திருவேங்கடவனாகவும் திருவரங்கனாகவும் காட்சி யளிக்கின்றான் என அறியமுடிகின்றது. இதனால் உலக மக்கள் அனைவருக்கும் இறைவனாக பரம பதநாதன் ஒருவனே இருக்கிறான் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

## எதிர்கால ஆய்வு

திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரான் என்ற இவ்வாய்வு எதிர்கால ஆய்வாளர்களுக்கு

1. 'அமலனாதிபிரானுக்கு அமைந்த உரைகள் - ஓர் ஆய்வு' என்னும் தலைப்பில் ஆய்வு மேற் கொள்வதற்கு ஏதுவாக அமைகிறது. மேலும்,
2. 'தத்துவ நோக்கில் இரகசிய கிரந்தங்களோடு அமலனாதிபிரான் - ஓர் ஒப்பாய்வு' என்னும் தலைப்பிலும் ஆய்வு செய்ய முற்படலாம்.

இந்த ஆய்வு நூல் 'ஆழ்வார்களின் பிரபந்தங்கள்' என்ற அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளவிருக்கும் ஆய்வாளர்களுக்கு மூல நூல்களில் ஒன்றாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பின்னிணைப்புகள்

## அமலனாதிபிரான் தனியன்கள்
### பெரியநம்பிகள் அருளிச்செய்தது

ஆபாதசூடமநுபூய ஹரிம் சயாநம்
மத்யே கவேரதுஹிதுர் முதிதாந்தராத்மா!
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோ நிச்சிகாய மநவை முநிவாஹநம் தம்!!

### திருமலை நம்பிகள் அருளிச்செய்தது

அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்

காட்டவே கண்டபாதகமலம் நல்லாடை உந்தி
தேட்டருமுதரபந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள்மேனி முனியேறித் தனி புகுந்து
பாட்டினால் கண்டுவாழும் பாணர்தாள் பரவினோமே.

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த அமலனாதிபிரான்

*அழகிய மணவாளனது திருமேனியழகில் பாதாதிகேசாந்தமாக ஈடுபடுதல்*

ஆசிரியத்துறை

அமலனாதிபிரான் அடியார்க்கு என்னையாட்படுத்த
விமலன் விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள் மதிளரங்கத்தம்மான் திருக்
கமலபாதம்வந்து என் கண்ணினுள்ளன வொக்கின்றதே. 1

கவர்ந்தவெங்கணைக்காகுத்தன்
கடியார்பொழிலரங்கத்தம்மான்அரைச்
சிவந்த ஆடையின் மேல் சென்றதாம் என சிந்தனையே. 2

மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள்
சந்திசெய்யநின்றான் அரங்கத்தரவினணையான்
அந்திபோல் நிறத்தாடையும்
அதன்மேலயனைப்படைத்ததோரெழில்
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே. 3

சதுரமாமதிள்சூழ் இலங்கைக்கிறைவன் தலைபத்து
உதிரவோட்டி ஓர்வெங்கணையுய்த்தவன் ஓதவண்ணன்
மதுரமாவண்டுபாட மாமயிலாடரங்கத்தம்மான் திருவயிற்று
உதரபந்தம் என்னுள்ளத்துள் நின்று உலாகின்றதே. 4

பாரமாய பழவினைபற்றறுத்து என்னைத்தன்
வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றி என்னுள் புகுந்தான்
கோரமாதவம் செய்தனன்கொல் அறியேன் அரங்கத்தம்மான் திரு
வாரமார்பதன்றோ அடியேனை ஆட்கொண்டதே. 5

துண்ட வெண்பிறையன் துயர்தீர்த்தவன் அஞ்சிறைய
வண்டுவாழ்பொழில்சூழ் அரங்கநகர் மேய அப்பன்
அண்டரண்ட பகிரண்டத்து ஒருமாநிலம் எழுமால் வரை
முற்றும்
உண்ட கண்டம் கண்டீர் அடியேனை உய்யக்கொண்டதே.
6

கையினார் சுரிசங்கனலாழியர் நீள்வரைபோல்
மெய்யனார் துளபவிரையார் கமழ் நீள்முடி எம்
ஐயனார் அணியரங்கனார் அரவினணைமிசைமேயமாயனார்
செய்யவாய் ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே 7

பரியனாகிவந்த அவுணனுடல்கீண்ட அமரர்க்கு
அரிய ஆதிப்பிரான் அரங்கத்தமலன் முகத்து
கரியவாகிப்புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டஅப்
பெரியவாயகண்கள் என்னைப் பேதைமை செய்தனவே. 8

ஆலமாமரத்தினிலைமேல் ஒரு பாலகனாய்
ஞாலமேழும் உண்டான் அரங்கத்தரவினணையான்
கோலமாமணியாரமும் முத்துத்தாமமும்
முடிவில்லதோரெழில்
நீலமேனி ஐயோ! நிறை கொண்டது என்நெஞ்சினையே. 9

கொண்டல்வண்ணனைக் கோவலனாய் வெண்ணெ
யுண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே. 10

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

# துணை நூற்பட்டியல்

## முதன்மை ஆதாரம்

1. **கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார், எஸ். (ப.ஆ)**
அமலனாதிபிரான் வ்யாக்யானங்கள்
ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ 214, கீழ உத்திரவீதி, திருவரங்கம்
திருச்சி, 1997

## துணைமை ஆதாரங்கள்

1. **அண்ணங்கராசாரிய ஸ்வாமி (ப்ர.ப)**
ஸ்ரீ காஞ்சி நித்யாநுஸந்தான பிறபகுதி சென்னை
இரத்தின அச்சகம், சென்னை - 1964

2. **அண்ணா அப்பங்கார் ஸ்வாமி**
திரிம்சத்ப்ரச்நோத்ரம், சென்னை ஸ்டாப் ஆப்
இந்தியா அச்சுக்கூடம், சென்னை - 1891

3. **அரங்கராசன் இரா.**
நம்பிள்ளை உரைத்திறன், அமுத நிலையம்,
சென்னை - 1986

4. **அரவிந்தன் மு.வை.**
உரையாசிரியர்கள், மணிவாசகர் நூலகம்,
சிதம்பரம் 1977

5. **கண்ணன் சுவாமி, ஆர்.** (ப.ஆ)
திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரான் 91,துளசிங்க முதலி தெரு, சென்னை, 1988

6. **திரு.வி. கல்யாண சுந்தரனார்**
முருகன் அல்லது அழகு, அரசி புத்தக கிடங்கு, 7திருவள்ளுவர் கோயில் தெரு, மைலாப்பூர், சென்னை, 1968

7. **கலைக்களஞ்சியம்**
தொகுதி ஏழு, தமிழ் வளர்ச்சி கழகம், சென்னை 1960.

8. **கிருஷ்ணசாமி அய்யங்கார்**, எஸ் (ப.ஆ)
ஆழ்வார் ஆசாரியர்கள் வைபவம் பா.பூ.ஸ்ரீ வைஷ்ணவ சபா பொன் விழா மலர், ஸ்ரீநிவாசம் பிரஸ், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி, 1978

9. **கிருஷ்ணசாமி அய்யங்கார்**, எஸ்.(ப.ஆ)
குருபரம்பராப்பிரபாவம் ஆறாயிரம்படி, ஸ்ரீநிவாசம் பிரஸ், திருச்சி, 1968

10. **கிருஷ்ணசாமி அய்யங்கார்**, எஸ். (ப.ஆ)
முமுட்சுப்படி, ஸ்ரீநிவாசம் பிரஸ், புத்தூர் அக்ரஹாரம் திருச்சி, 1970

11. **கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமி**, தி.அ
திருமலை அனந்தாழ்வான் வைபவம் (தமிழாக்கம்) திருமலை திருப்பதி தேவஸ்தானப்பதிப்பு, 1985

12. **கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமி**, தி.அ
திவ்யப்ரபந்த வைபவ விவேக (தமிழாக்கம்) கீதாசார்யன் அறக்கட்டளை, 7, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி, சென்னை, 1992.

13. கிருஷ்ணசாமி அய்யங்கார் (ப.ஆ)
கீதா வியாக்கியானம் (9 முதல் 12 வரை) ஸ்ரீவைஷ்ணவ சுதர்ஸனம், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி, 1985.

14. கிருஷ்ணவேணி அம்மையார், எஸ்.
செம்பொருள், திருமலை திருப்பதி தேவஸ்தான வெளியீடு திருப்பதி.1954

15. கேசிகன் புலியூர் (பதி)
தொல்காப்பியம் ஐந்தாம் பதிப்பு, பாரிநிலையம், பிராட்வே, சென்னை. 1975

16. கேசிகன் புலியூர்
பரிபாடல் இரண்டாம் பதிப்பு, பாரி நிலையம் சென்னை 1981

17. கோபாலாசாரியார் ஸ்வாமிகள் காரப்பங்காடு(ப.ஆ)
நாலாயிர திவ்யபிரபந்தம் அனந்த அச்சகம், சென்னை 1908

18. கோபிநாதராவ், தி.அ
ஸ்ரீசுப்பரமணிய அய்யரின் வைணவ வரலாற்றுச் சொற்பொழிவுகள், சென்னை, 1917

19. சுந்தர மூர்த்தி, இ
பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன், ஐந்திணைப் பதிப்பகம் சென்னை 1985

20. சோமசுந்தரனார் பொ.வே (ப.ஆ)
சிலப்பதிகாரம், திருநெல்வேலித்தென்னிந்தி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1970

21. சேஷைய சாஸ்திரிகள் அ. (ப.ஆ) கலித்தொகை
Printed at the Scottish Press ByGraves Cookson and Co. Madras 1887

22. **சௌரிராசன் பொன்**. சித்திரச்சிலம்பு
இரண்டாம் பதிப்பு, மாருதி பிரஸ், சென்னை 1984

23. **ஞானசுந்தரம்**, தெ
வைணவ உரைவளம், தாயம்மை பதிப்பகம் 149அண்ணாநகர் மேற்கு, சென்னை, 1989

24. **பி.ஸ்ரீ, திவ்வியப்பிரபந்தஸாரம்**
அமுத நிலையம், பிரைவேட் லிமிடேட், சென்னை - 1957

25. **பிள்ளை லோகஞ்சீயர்**, உபதேச ரத்தின மாலை வியாக்கியானமும் பதவுரையும், யுனைடட் அச்சகம் காஞ்சி 1916

26. **மணவாள மாமுனிகள்**, உபதேச ரத்தின மாலை ஸ்ரீவைஷ்ணவ கிரந்த முத்ரபகஸபை பதிப்பு காஞ்சி, 1916

27. **மணவாள மாமுனிகள்**, தத்வத்திரயம் வியாக்கியானம், ஸ்ரீவானமாமலை மடத்தின் பதிப்பு ஸ்ரீநிவாசம் அச்சுக்கூடம், ஸ்ரீரங்கம், 1950

28. **முரளிதரன்** (ப.ஆ) **பெரியவாச்சான்பிள்ளை** கலியன் அருள்பாடு, ஸ்ரீவைஷ்ணவ ரத்னமாலா சென்னை 1978

29. **வரதராஜன்**, மா.
பன்னீராயிப்படி ஓர் ஆய்வு, 14/86 பத்மாவதிபுரம் திருச்சானூர் சாலை, திருப்பதி, 1989

30. **வரதராசனார்**, மு
தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதமி, புதுடெல்லி, 1972

31. **வேங்கடராமன், க.**
தமிழ் இலக்கியங்களில் வைணவம் (தமிழாக்கம்) புத்தகாலயம் 58, டி.பி.கோயில் தெரு, திருவல்லிக் கேணி சென்னை, 1992

32. **வைத்தியலிங்கன், செ.**
அழகுக்கலைத்திறன், மணிவாசகர் நூலகம் சிதம்பரம், 1970

33. **ஸ்ரீ நிவாஸாசாரியார், கீழாத்தூர்**
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரம் பதிப்பகத்தார் இலிட்டில் ப்ளவர் கம்பெனி, தி.நகர் சென்னை, 1962

## English Books

1. **Gopinatha Rao T.A,**
A History of Sri Vaishnavas, 1920

2. **Satyamurthi Ayyangar,**
The Immaculatelord of Arangan (Arangattamalan) (Amalanadipiran of Pan Alwar) B88, Editor, Belvadi Apartments, 13th Cross 8th Main Road, Mallewaram, Bangalore, 1993

3. **Subbu Reddiar N.**
"Religion and Philosophy of Nalayira Divya Prabandham with Special Reference to Nammalvar." S.V. Univeristy Publications, Tirupati, 1977

4. **Venkatchari K.K.A**
Sri Vaishnava Manipravala Anathacharya Research Institute, Bombay, 1969.

# ஆசிரியர் பற்றி



'திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதி பிரான்' என்னும் இந்த நூல் ஆசிரியர் திரு. பால. தனஞ்செயன், எம்.ஏ., எம்.ஃபில்., ஆந்திர மாநில சித்தூர் மாவட்ட அடவிக் கொடியம் பேடு என்னும் சிற்றூரில்.

பட்டு. பாலகிருஷ்ணன், பால. சுந்தரம்மாள் இவரது பெற்றோர் ஆவர்.

இந்த நூல் இவரது முதல் நூல்; ஆய்வு நூல். ஆழ் வாரின் 'அமலனாதிபிரான்' என்னும் பிரபந்தத்தின் பொருள், அதன்கண் அமைந்துள்ள சமய தத்துவக் கருத்துக்கள், அந்தப் பிரபந்தத்தில் காணப்பெறும் இலக்கிய எழில் அதற்கு அமைந்த உரையாசிரியர்களும் அவர்தம் உரைநயங்களும் இந்த நூலில் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

இவர்க்கு இளமையில் தமிழில் ஆர்வம் தோன்ற ஊக்கிய ஆசிரியர்களுள் நாகலாபுரம் தமிழ் வித்துவான் திருக்குறள் மணி திரு. சுப்பராயலு குறிப்பிடத்தக்கவர். இவர் ந்யாய வேதாந்த வித்வான் ஸ்ரீமான் உ.வே. திருமலை அனந்தாண் பிள்ளை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் திருவடி கடாட்சம் பெற்றவர். திருவேங்கடவன் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் டாக்டர் மா.வரதராஜன் எம்.ஏ. பி.எச்.டி. இவர்க்கு ஆய்வு வழிகாட்டியாக அமைந்து வைணவ இலக்கிய தத்துவ ஞானங்களை விளக்கி உதவியவர்.

இவ்வாறு ஆந்திர மண்ணில் தோன்றி தமிழை மறவாது, தமிழ் தத்துவ, ஞானத்தை உணர்ந்து உழைத்துவரும் இவர் சிறப்பாகத் தமிழ் அறிஞர்களின், பொதுவாகத் தமிழ் மக்களின் ஆதரவுக்கு உரியவர்.

பொன். சௌரிராஜன்
திருப்பதி